# உதயன்

சுடர் 30 கதிர் 282 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 18. வெள்ளிக்கிழமை 04.09.2015

சம்பத் ரேகா
இன்றையசுப்பர்பரிசு
ரூ. 10,961,730.40
ஒரு கோடியே
09 இலட்சம்
www.nlb.lk
அதிர்ஷ்டத்தின் ஒரே பெயர் NLB
தேசிய லொத்தர் சபை

## குரங்குகள் போன்று செயற்படவேண்டாம்

### சபையில் விமலுக்கு ரணில் எச்சரிக்கை

கொழும்பு. செப்.4
குரங்குகள் போன்று செயற்பட வேண்டாம். ஆசனத்தில் உட்காரும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்றுச் சபையில் எதிர்க்கட்சி வரிசையிலிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன் சவைக் கடுமையாக எச்சரித்தார் .
புதிய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக ஆர். சம்பந்தன் நியமிக்கப்பட்டமைக்கு எதிராக நேற்றுச் சபையில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

பக்கம் 24.....

## தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஒன்றுபட்டுத் தீர்வு காண்போம்

### கன்னி உரையில் சம்பந்தன் அழைப்பு

கொழும்பு, செப் 4
தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் பல உள்ளன. தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணப்படவேண்டும். அந்தப் பெரும் பொறுப்பு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்காகவே எம் மக்கள் எம்மை இங்கு அனுப்பியுள்ளனர். எனவே, எல்லோரும் ஒன்றுபட்டு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் தீர்வொன்றைக் காண உதவவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான

பக்கம் 24.....

## தேசிய அரசை எதிர்ப்பது ஏன்?

### சபையில் பிரதமர் ரணில் கேள்வி



கொழும்பு, செப். 4
இலங்கையில் புதிய அரசியல் யுகம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்படும் தேசிய அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் படுவது ஏன் எனப் புரியவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
தேசிய அரசில் அமைச்சரவை அதி

பக்கம் 22.....

# எதிர்க் கட்சி தலைவரானார் சம்பந்தன்



### நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார் சபாநாயகர்
### இலங்கை அரசியலில் 32 ஆண்டுகளின் பின் திருப்பம்

கொழும்பு, செப்ரெம்பர் 4
எட்டாவது நாடாளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் மூத்த அரசியல்வாதியுமான இரா.சம்பந்தன் நேற்றுத் தெரிவு செய்யப்பட்டார். இதன் மூலம் இலங்கை அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு விவகாரம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது.
நேற்று வியாழக்கிழமை காலை நாடாளுமன்றம் கூடிய போது, எதிர்க்கட்சித் தலைவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனை ஏற்றுக்கொள்வதாகச் சபாநாயகர் கரு ஜயசூரிய அறிவித்தார்.
எதிர்க்கட்சித் தலைவரின் நியமனம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் வேண்டுகோள்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் சபாநாயகர் கரு ஜயசூரிய அங்கு

பக்கம் 24.....

## தேசிய அரசு தொடர்பில் சபையில் கடும் விவாதம்

கொழும்பு. செப். 4
தேசிய அரசு ஒன்றை அமைத்து அதன் அமைச்சரவையில் அதிகரிப்பு மேற்கொள்ளவென நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை தொடர்பில் கடும் வாதப் பிரதிவாதங் கள் இடம்பெற்றன.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரேரணையைச் சவாலுக்கு உட்படுத்தி மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளு

பக்கம் 24.....

## இனவாதக் கருத்துக்களை சபையில் வெளியிட தடை

கொழும்பு, செப். 4
நாடாளுமன்றத்தில் இனவாதக் கருத்துக்களை வெளியிடத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.
தேசிய ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படும் வகையில் எவ்வித கருத்துக்களையும் உறுப்பினர்கள் வெளியிட அனுமதியில்லை.
சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.
நாடாளுமன்றில் உறுப்பினர்கள், தேசிய ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்

பக்கம் 23.....

## முதல் உரையிலேயே சம்பந்தன் எதிர்ப்பு

### அமைச்சர்கள் எண்ணிக்கை அதிகரிப்புக்கு

கொழும்பு, செப். 4
நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக நேற்று நியமிக்கப்பட்ட இரா.சம்பந்தன், தனது முதல் உரையிலேயே அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் அரசின் திட்டத்துக்கு எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.
தேசிய அரசின் அமைச்சரவையில இடம்பெறும் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பான யோசனையைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுச் சபையில் சமர்ப்பித்திருந்தார்.
இது தொடர்பான விவாதம் இடம்பெற்ற

பக்கம் 23.....

## அமைச்சரவை அதிகரிப்புக்கு அனுமதி

கொழும்பு, செப். 4
அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையை 30 இல் இருந்து 48 ஆக உயர்த்தும் பிரேரணை, கடும் வாதப் பிரதிவாதங்களின் பின்னர் நேற்று வியாழக்கிழமை 127 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.
இதற்கமைய அமைச்சரவை அந்தஸ்துள்ள

பக்கம் 22.....

## சம்பந்தனுக்கு ஜனாதிபதி வாழ்த்து

கொழும்பு, செப். 4
எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது வாழ்த்துக்களைத் தெரிவித்

பக்கம் 22.....

## விஜேவர்த்தன கொலை; சந்தேக நபர் நிரபராதி

### தீர்ப்பளித்து விடுவித்தது யாழ்.மேல் நீதிமன்றம்

யாழ்ப்பாணம், செப். 4
2005 ஆம் ஆண்டு யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன இணுவிலில் வைத்துக் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட வழக்கில் 6 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக

பக்கம் 24.....

## சம்பந்தனின் நியமனத்துக்கு கடும் போக்காளர்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், செப். 4
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்கட்சித் தலைவராக நேற்று நியமிக்கப்பட்டுள்ள நிலையில், சிங்கள - பௌத்த கடும் போக்காளர்கள் அவரது இந்த நியமனம் தொடர்பில் கடும் எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றனர். சமூக வலைத் தளங்களிலும் இது தொடர்பில் மிகக் கடுமையான எதிர்ப்புக்களைப் பதிவிட்டு வருகின்றனர்.
இலங்கையின் எட்டாவது நாடாளு

பக்கம் 23.....

## கோத்தபாயவிடம் மூன்று மணி நேரம் விசாரணை



கொழும்பு, செப். 4
மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக் குழுவினால், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய

பக்கம் 22.....

## எதிர்க்கட்சி பிரதம கொறடா அநுரகுமார

கொழும்பு, செப். 4
8ஆவது நாடாளுமன்றின் எதிர்க்கட்சிப் பிரதம கொறடா பதவிக்கு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வின் பெயர் பரிந்துரை செய்யப்பட்

பக்கம் 23.....

## உள்ளக விசாரணையால் நீதி கிடையாது

### திருமலையில் சுட்டுக் கொல்லப்பட்ட மாணவன் ரஜிகரனின் தந்தை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 4
உள்ளக விசாரணை, காலத்தை இழுத்தடித்து சாட்சியங்களை மழுங்கடிக்கச் செய்வதையே நோக்கமாகக் கொண்டது. இதனூடாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கப்போவதில்லை. பாதிக்கப்பட்டவர்கள் கோரும் நீதிமன்றங்களில் வழக்குகள் விசாரிக்கப்பட வேண்டும் என்று, திருகோணமலையில் கடந்த 2006 ஆம் ஆண்டு சுட்டுக்கொலை செய் யப்பட்ட மாணவர்களில் ஒருவரான ரஜிகரனின் தந்தை மனோகரன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் அதில் மேலும் தெரிவித்ததாவது:-
[illegible] 2006 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார். 2007 ஆம் ஆண்டு ஜனாதிபதியினால் ஆணைக் குழு அமைக்கப்பட்டு விசாரணை நடந்தது. அதில் வெளிநாட்டு அதிகாரி ஒருவரும் உள்ளடக்கப்பட்டிருந்தார். இந்த விசாரணையில் சில உண்மைகள் கண்டறியப்பட்டு அது வெளிக்கொண்டு வர இருந்த நேரத்தில், அப்போதைய ஜனாதிபதி மகிந்த ஆணைக்

பக்கம் 23.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நாட்டுக்காக ஒலிக்கட்டும் சம்பந்தன் எம்.பியின் குரல்

## சபையில் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, செப். 4
எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன், வடக்குக்காக மட்டுமன்றி, முழு நாட்டுக்காகவும் குரலெழுப்பவேண்டும் என்றும், அன்று அமிர்தலிங்கம் செயற்பட்டதுபோல் இனிவரும் நாட்களில் சம்பந்தன் செயற்பட வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அத்துடன், இந்தியாவில் அப்துல் கலாம் ஜனாதிபதியானதுபோல் இலங்கையிலும் தமிழர் ஒருவர் ஜனாதிபதியாகும் சூழ்நிலை உருவாகவேண்டும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழர் ஒருவர் இன்று எதிர்க் கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை அரசியலில் இது முக்கிய திருப்புமுனையாகும். எனவே, வடக்குக்காக மட்டுமின்றி, முழு நாட்டுக்காகவும் சம்பந்தன் குரல் எழுப்பவேண்டும்.

அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம், உழைக்கும் வர்க்கத்தின் உரிமைக்காக இச்சபையில் துணிகரமாகக் குரலெழுப்பினார். ஐக்கிய தேசியக் கட்சியின் தவறுகளை சுட்டிக்காட்டினார். எனவே, சம்பந்தனும் அது போல் செயற்பட வேண்டும்.

இந்தியாவில் தமிழர் ஒருவருக்கு ஜனாதிபதியாக வரக்கூடிய நிலை இருக்கிறது. அப்துல் கலாம் போன்றோர் அப்பதவியை வகித்தனர். இலங்கையிலும் அத்தகைய சூழ்நிலை உருவாகவேண்டும். அதற்கான ஏற்பாடுகள் இடம்பெறவேண்டும்.

அதேவேளை, சர்வதேச விசாரணை இன்று உள்ளக விசாரணையாகியுள் ளது. எந்தவொரு தலைவரையும் காட்டிக்கொடுக்கமாட் டோம். இனியும் இந்த நாட்டில் இனவாதம், மதவாதம் இருக்கக்கூடாது. கூட்டமைப்புக்கு எதிராக களமிறங்கிய புலிகளை மக்கள் தோற்கடித்தனர். அத்துடன், பிரிவினைவாதம் போதித்த எம்.பிக்களையும் அவர்கள் தோற்கடித்துள்ளனர்"–என்றார். (த-சி)

# சர்வதேச விசாரணை கோரும் கையெழுத்து வேட்டை ஆரம்பம்

## யாழ்.பஸ் நிலையம் முன்பாக இன்று

யாழ்ப்பாணம், செப், 04
இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் கையெழுத்துப் போராட்டம் இன்று பி.ப. 4 மணிக்கு யாழ். பஸ் நிலையம் முன்பாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இது தொடர்பில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:-

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நீண்ட காலமாக சர்வதேச விசாரணை, பொறுப்புக்கூறலில் பங்கு பற்றியுள்ளது. இந்த விடயங்களில் முன்னணிக்கு அனுபவம் உள்ளது. அந்தவகையில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணையை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டத்தை ஆரம்பிக்கின்றோம்.

இலங்கை தீவில் இடம்பெற்ற சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்ட மீறல்கள் புரிந்தோருக்கு எதிரான சர்வதேச குற்றவியல் செயன்முறை பொறிமுறை ஒன்றை ஏதுப்படுத்தும்படி நாம் ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்துகின்றோம். அத்தோடு இலங்கை அரசால் உருவாக்கப்படும் எந்தவொரு உள்ளகப் பொறிமுறையையும் விசாரணைகளையும் நாம் உறுதிபட நிராகரிக்கின்றோம் என்பதை வலியுறுத்தி பொது மக்களின் ஆதரவை நிரூபிக்கும் கையொப்பம் திரட்டும் இந்த போராட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது. கையெழுத்துப் போரட்டாம் இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டும்.

இது தனி ஒரு கட்சி சார்பானதல்ல. கட்சிக்கு அப்பாற்பட்டது. தமிழ் மக்களின் பிரச்சினைகள், துன்பங்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது. இது ஒரு திறந்த சபை. இலக்கை அடைவதே நோக்கம். தமிழர் பிரச்சினைகள் திசை மாற்றப்படக்கூடாது. தற்போது வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படும் இந்தக் கையெழுத்துப் போராட்டம் நாட்டின் பிற பாகங்களுக்கு கொண்டு செல்லப்படுதல் தொடர்பில் ஆராயப்படும்.– என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-10, ரி4,106)

## அருள்நெறி விழாவின் பதினேழாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.4
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் அருள் நெறி விழாவின் பதினேழாம் நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் பி.ப 3 மணிமுதல் பி.ப 6 மணி வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு இந்து சமய கலா சார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் திருமதி. ஹேமலோஜினி தலைமை வகிக்கவுள்ளதோடு பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் திக்கரை அறநெறிப் பாடசாலையினரின் பஜனை மற்றும் மாணவர்களான க.சரவணபவன், இ.தாஸ், பூ.ரூபிகா ஆகியோரின் பேச்சு, கிழவன்காடு அறநெறிப் பாடசாலை மாணவர்களின் குழு நடனம், அ.ஜசிந்தினி, அ.ஜெயந்தினி, சி.திவ்வியப்பிரியன் ஆகியோரின் பேச்சு, தொல்புரம் ஆதி முத்து மாரியம்மன் அறநெறிப் பாடசாலை மாணவி ந.பிரியங்காவின் தனிநடனம், வில்லிசை, கைலாசநாதர் வேதசிவாகம அறநெறிப் பாடசாலை மாணவி சி.சாம்பவியின் தனிநடனம், செல்லக்கதிர்காமம் அறநெறிப் பாடசாலை மாணவிகளான ச.திலக்சனா, த.அயந்தா ஆகியோரின் தனிநடனம் போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

(ற-10)

# சம்பந்தனின் நியமனமானது சிறுபான்மைக்குப் பெருமை

## வாழ்த்துச் செய்தியில் விஜயகலா எம்.பி

யாழ்ப்பாணம், செப். 4
ஐக்கிய தேசியக் கட்சியின் நல்லாட்சியின் காரணமாகவே, எதிர்கட்சித் தலைவர்ரக இரா.சம்பந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது நியமனம் தமிழ் பேசும் சிறுபான்மை இன மக்களுக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

புதிய எதிர்க் கட்சித் தலைவராகக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான கூட்டு அரசு அமைக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டில் நல்லாட்சி நிலவி வருகின்றது. இந்த நிலையில் மூத்த தமிழ் அரசியல் தலைவரான இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை தமிழ் பேசும் மக்களுக்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது. நாட்டின் மூன்றாவது அதிகாரமுள்ள பதவி தமிழர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளமை பாராட்டத்தக்க செயற்பாடேயாகும். எமது நல்லாட்சியிலேயே இத்தகைய நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது.

1977 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்தார். 32 வருடங்களுக்குப் பின்னர் தற்போது எமது அரசின் கீழேயே தமிழ் பேசும் ஒருவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது. தற்போதைய நிலையில் எமது நல்லாட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டியுள்ளது. அத்துடன் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் காணப்பட வேண்டியுள்ளது.

எமது அரசின் காலத்துக்குள் இனப்பிரச்சினைக்கும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கையை சம்பந்தனின் நியமனம் எடுத்துக் காட்டியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவராக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நியமிக்கப்பட்டமை தமிழ் மக்கள் தேசிய ரீதியிலான அரசியலில் நம்பிக்கை வைப்பதற்கு ஏதுவானதாகவும் அமைந்திருக்கின்றது. சம்பந்தனின் நியமனத்துக்கு எதிராக இனவாத சக்திகள் பல்வேறு எதிர்ப்புக்களை தெரிவித்துவந்த போதிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவற்றுக்கு செவிசாய்க்காது துணிந்து செயற்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் சம்பந்தனுடன் இணைந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண் உடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதற்காகவே அர்ப்பணிப்புடன் சம்பந்தன் செயற்படுவார் என்று நம்பலாம்– என்று கூறியுள்ளார்.

(த-5)

# சம்பந்தனுக்கு நல்லாசி வேண்டிப் பிரார்த்தனை

மாங்குளம், செப்.4
இலங்கையின் 8ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று எதிர்க்கட்சித் தலைவராகக் கடமையேற்றதமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்இரா.சம்பந்தனுக்கு நல்லாசி வேண்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் பிரார்த்தனைநிகழ்வு இடம் பெறவுள்ளது.

வடமராட்சி மக்களின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேசசபை முன்னாள் தவிசாளர்கள் மற்றும் பிரமுகர்கள் உட்படப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்கவுள்ள இரா.சம்பந்தனின் ஆயுள் பலமாக அமையவும் அவரின் பணிகள் மேலோங்கித் தடையின்றிச் செயற்படவும் நல்லாசி வேண்டி இந்தப் பிரார்த்தனை நடத்தப்படவுள்ளது.

(ற-422)

## கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், செப்.4
வடமராட்சி பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் வீதியோரமான வாய்க்கால் ஒன்றிற்குள் வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்றை பருத்தித்துறை பொலிஸர் மீட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

வாய்க்கால் சுத்திகரிப்பில் ஈடுபட்ட தொழிலாளிகள் கைக்குண்டை இனம் கண்டுயுள்ளனர். இதனை அடுத்து பருத்தித்துறை பொரிஸருக்கு வழங்கிள தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸர் குறித்த கைக்குண்டை மீட்டெடுத்து சென்றனர்.

குறித்த கைக்குண்டு நீண்டகாலத்திற்கு முன்னர் இப்பகுதியில் கைவிடப்படிருக்கலாம் எனவும் அது மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதாகவும் வடமராட்சி பகுதிக்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார். (ற-109)

## சில்லறை குற்றிகள் புழக்கத்தில்

யாழ்ப்பாணம், செப். 4
இலங்கை மத்திய வங்கி சில்லறை நாணயங்களை பெருமளவில் புழக்கத்தில் விட்டுள்ளது என்று யாழ்.வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

குடாநாட்டில் நிலவும் சில்லறைத் தட்டுப்பாடு காரணமாக நுகர்வோர் பல சிரமங்களுக்கு உள்ளாகுவதாக கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பெருமளவில் சில்லறை நாணயங்கள் புழக்கத்துக்கு விடப்பட்டுள்ளது என்றும் வர்த்தகர்கள் தேவையான அளவு சில்லறைகளை வங்கிகளில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேனும் வங்கி சில்லறைகளை வழங்க மறுத்தால் அது தொடர்பாக வணிகர் கழகத்துக்கு அறிவிக்குமாறும் தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி5)

## கிருஸ்ண ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், செப்.4
யாழ்.மிஷன் கிருஷ்ணா அறநெறிப் பாடசாலையின் கிருஷ்ண ஜெயந்தி விழா நாளை நடைபெறவுள்ளது. கோணாவளை வீதி கொக்குவிலில் அமைந்துள்ள பாடசாலையில் காலை 9 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற-10)

# நல்லூர் நாடகத் திருவிழாவில் சிறுவர் நாடகங்கள் மேடையேற்றம்

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் பஞ்ச வர்ண நரியார் சிறுவர் நாடகமும் ஏகாந்தம் வேடமுக நாடகமும் மேடையேறின. நாளைமறுதினம் யுத்த அவலத்தைப் பேசுகின்ற தாலி கல்லறைக்கவிதைகள் நாடகமும் தே.தேவானந்தின் சிரிப்பு மூடை சிறுவர் நாடகமும் மேடையேறுகின்றன. நாடகத் திருவிழா எதிர்வரும் ஒன்பதாம் திகதி நிறை வடைகிறது. எதிர்வரும் நாள்களில் ஓராள் நாடகங்கள் பாரம்பரிய நாடகங்கள் வேடமுக நாடகங்கள் நவீன நாடகங்கள் எனப் பல நாடகங்கள் மேடையேறுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாவின் சாவு குறித்து சரியாகக் கூறமுடியாது

## சொல்கிறார் குமரன் பத்மநாதன்

கொழும்பு, செப் 4

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரணம் தொடர்பில் எவராலும் சரியான தகவல்களை வெளியிடமுடியாது என்று விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் எனப்படும் கே.பி. தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் எவ்வாறு உயிரிழந்தார் என்பது பற்றி தோண்டித் தேடுவதை விடவும், அரசுடன் இணைந்து மக்களுக்குச் சேவையாற்றுவதற்கு அனைவரும் இணைந்துகொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பிரபாகரனின் இறப்புப் பற்றி துல்லியமாகக் கூற எவராலும் முடியாது என அவர் தெரிவித்துள்ளார். இறுதிக்கட்டப் போரின்போது, பிரபாகரனுடன் இருந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் எவரும் உயிருடன் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிலருடன் தாம் தொடர்பு கொண்டுகள நிலைவரங்களை அறிந்து கொண்டிருந்தபோதிலும், நந்திக் கடல் பகுதியில் நடைபெற்ற இறுதிக் கட்டப் போரின்போது எவரும் உயிருடன் இருக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, பிரபாகரன் எவ்வாறு உயிரிழந்தார் எனத் தற்போது கூறுவது சாத்தியப் படாத விடயமாகும். மூன்று தசாப்தகாலமாக நீடித்த போர் காரணமாக இலங்கையர்கள் பெரியளவில் அழுத்தங்களையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்க நேரிட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக்கட்டப் போரின்போது தாமே அதிகளவு தொடர்புகளைப் பேணி வந்ததாகவும், தம்மாலேயே பிரபாகரனுக்கு என்ன நேர்ந்தது என்பதைக் குறிப்பிட முடியாது எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

சிறுவர் இல்லமொன்றைத் தன்னார்வ அடிப்படையில் நடத் திச் செல்வதாகவும் அதற்காக நேரத்தைச் செலவிட விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், மாறாக அரசியல் தேவைகளுக் காக தேவையற்ற கருத்துகளை வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் தமக்குக் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார். (த–சி)

# உரிமையாளருக்குத் தெரியாது காணிகளின் பெயர் மாற்றம்

## யாழ்ப்பாணத்தில் நடக்கும் மோசடிக்கு சட்டத்தரணிகளும் உடந்தையா?

யாழ்ப்பாணம், செப் 4

யாழ்ப்பாணத்தில் தனியாரின் காணிகளை அவர்களுக்கே தெரியாமல் உறுதிமாற்றி எழுதும், எழுதிக் கொடுக்கும் சில சட்டத் தரணிகளின் செயற்பாடு குறித்து விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் செயலைப் புரிந்தார் என்ற குற்றச்சாட்டுடன் தொடர்புடைய கோண்டாவிலைச் சேர்ந்த பெண் சட்டத்தரணி ஒருவர் விஷேட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் காணி உரிமையாளருக்குத் தெரியாமல் உறுதி தயாரித்துப் பெயர் மாற்றம் செய்து அதனை 67 வயது மூதாட்டிக்கு விற்பனை செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளது. தவிர ஏமாற்றப்பட்டதாக உணரும் அந்த மூதாட்டி அந்தக் காணியை 11 லட்சம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்துள்ளார்.

அந்தக் காணியைத் தனக்குப் பெற்றுத்தருமாறு கோரியே அந்த மூதாட்டி யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

யாழ்.நகர் கடற்கரை வீதியில் உள்ள குறித்த காணியையே அதன் உரிமையாளருக்குத் தெரியாது விற்கப்பட்டதாகச் சட்டத்தரணி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த காணியைச் சில வருடங்களுக்கு முன்னர் அதன் உரிமையாளருக்குத் தெரியாமல் ஒருசாரார் அந்தக் காணியை பெயர் மாற்றம் செய்திருந்தனர் என்றும் அதனால் முன்னரும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தே அந்தக் காணியைப் பெற்றுக் கொண்டதாகவும், அந்தக் காணியின் உரிமையாளர் என்று கூறும் ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினரும் யாழ்.நகரிலுள்ள உணவகம் ஒன்றின் நடத்துநருமான ஜெயேந்திரன் என்பவர் தெரிவித்துள்ளார். குறித்த காணி முன்னர் கொழும்பைச் சேர்ந்தவர் என்று கூறப்படும் சட்டத்தரணி ஒருவரின் உதவியுடன் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றும் அவ்வாறு கூறப்படும் சட்டத்தரணியை எங்கு தேடியும் காணவில்லை என்றும் ஜெயேந்திரன் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் குறித்த காணிக்கு அதன் உரிமையாளர் என்ற அடிப்படையில் தான் சென்றபோது தன்னை மற்றொரு குழுவினர் இடைமறித்துத் தகராறில் ஈடுபட்டுள்ளனர். அதுபற்றிய தர்க்கம் நீடித்தபோதே அந்தக் காணிக்கு உரிமையாளர் என்று கூறும் தான் மோசடி நடந்துள்ளது என்பதனை உணர்ந்ததாகவும் ஜெயேந்திரன் தெரிவித்தார்.

அது தொடர்பான வழக்கே தற்போது யாழ்.மாவட்ட நீதிமன்றில் விசாரணையில் உள்ளது. குறித்த காணி சுமார் 5 பரப்புடையது. அந்தக் காணி பலரது பெயருக்கு மாற்றப்பட்டு இறுதியாகக் குறித்த மூதாட்டிக்குக் கைமாற்றப்பட்டுள்ளது என்றும் ஜெயேந்திரன் கூறுகிறார்.

இந்நிலையிலேயே குறித்த காணியைத் தான் கொள்வனவு செய்துள்ளதாகவும் எனவே அதனைத் தனக்குப் பெற்றுத் தருமாறு மூதாட்டி கோரியுள்ளார். இந்த வழக்குத் தொடர் சாட்சியத்துக்காக எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ற–4)

# கண்ணிவெடியில் சிக்கி கிளாலியில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், செப்.4

கிளாலியில் கண்ணிவெடியில் சிக்கி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மீன்பிடிக்கும் நோக்கில் வலைவீசச் சென்றபோதே சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது. அதில் அதே இடத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஜோன் செபஸ்ரியன் (வயது 44) என்பவரே படுகாயமடைந்துள்ளார். (ற–4,ரி3)

# எள்ளுக்காடுச் சிறுமி விவகாரம்: சிறுவனுக்கு தொடர்ந்தும் மறியல்

கொழும்பு, செப்.4

கிளிநொச்சி எள்ளுக்காட்டில் 3 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிறுவனை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.வஹாப்தீன்.

கிளிநொச்சி உருத்திரபுரம் எள்ளுக்காட்டு பகுதியில் கடந்த இரு மாதங்களுக்கு முன் காணாமல் போன 3 வயதுச் சிறுமி கடந்த மாதம் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். சிறுமியை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் சிறுமியின் ஒன்றுவிட்ட சகோதரனான 14 வயதுச் சிறுவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த வழக்கு விசாரணைக்காக நேற்று மூன்றாவது தடவையாக மன்றில் எடுத்து கொள்ளப்பட்டது. இதன் போது எந்த வித விசாரணைகளும் இன்றி குறித்த வழக்கை எதிர்வரும் 16ஆம் திகதிவரை தள்ளி வைத்ததுடன் சிறுவனை தொடர்ந்தும் யாழ்ப்பாணம் அச்சு வேலி சிறுவர் நன்னடத்தை இல்லத்தில் சேர்க்கும் படி உத்தரவிட்டார் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான். (ற–21)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 4

வட்டு. மத்திய கல்லூரியில் பொதுக் கூட்டம் ஒன்று பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அந்தக் கூட்டத்தில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வடமாகாண உயர் அதிகாரிகள் வருகை தரவுள்ளதால் பெற்றோர்களில் தாய் அல்லது தந்தை அல்லது சட்டரீதியான பாதுகாவலர் தவறாது சமுகமளிக்குமாறு பாடசாலையின் அதிபர் திருமதி பி.பஞ்சாட்சரம் கேட்டுக்கொண்டுள்ளார். (ற–4)

# மாற்று திறனாளிகளுக்கு உதவிகள் — ஜெய்ப்பூர்

யாழ்ப்பாணம், செப். 4

வறிய நிலையில் உள்ள மாற்றுத் திறனாளிகளின் தேவைக்கு ஏற்ப உதவிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன என்று யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட வறிய நிலையிலுள்ள மாற்றுத்திறனாளிகள் அவர்களின் தேவைக்கு ஏற்றவாறு செயற்கை அவயவங்கள், நடமாட உதவும் உபகரணங்கள் மற்றும் உள்வள சேவைகளையும் இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் வசதி படைத்த மாற்றுத்திறனாளிகள் இயலுமைக்கேற்ற தொகையைச் செலுத்தி அவற்றினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் மேற்படி சேவையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் வாரநாள்களில் நேரடியாகவோ அல்லது தொலைபேசியூடாகவோ தமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது. (ற–ரி5)

# பெண்களுடன் சேஷ்டை விட்ட இளைஞர்களுக்கு சமூகப்பணி

## பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவு

நெல்லியடி, செப். 4

வடமராட்சி வதிரி சந்தியில் நின்று வீதியால் செல்லும் பெண்களுடன் அ நாகரிகமான முறையில் நடந்து கொள்ளும் மின்னல் குழுவின் அங்கத்தவர்கள் என்ற குற்றசாட்டில் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களையும் சமூக சேவையில் செயற்படுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வடமராட்சி வதிரி சந்தி உட்பட வடமராட்சியின் முக்கிய வீதிகளில் ஒன்று கூடும் கும்பல் பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லும் மாணவிகளுடன் அ நாகரிகமான முறையில் நடந்து கொள்வதாக பொதுமக்களால் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது.

இது தொடர்பில் பெற்றோரும் அந்தப் பகுதியால் பயணிக்கும் மக்களும் தொடர்சியாக விசனம் வெளியிட்டு வந்தனர். வதிரி உல்லியனொல்லை அம்மன் கோயிலுக்கு பின் புறமாகவும், வதிரிச் சந்தியில் உள்ள குளிர்பான நிலையத்துக்கு முன்பாகவும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள ஒழுங்கைகளிலும் இந்தக் கும்பல் பெண்களுடன் சேஷ்டைகளில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் இது தொடர்பில் கவனம் செலுத்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தலைமையிலான பொலிஸ் குழு கடந்த சில மாதங்களுக்கு முன் அதிரடி சுற்றிவளைப்பை நடத்தி பல இளைஞர்களை கைது செய்திருந்தது. இதன் பின்னர் அவர்களின் பெற்றோர் பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் குறித்த குழுவின் அடாவடித்தனங்கள் குறித்தும் பெண்களுடன் அநாகரிகமான முறையில் நடப்பதாக குற்றம் சாட்டியும் சமூக பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவரால் பருத்தித்துறை நீதிமன்றின் கவனத்துக்கு புகைப்பட ஆதாரங்களுடன் சமர்பிக்கப்பட்டிருந்தது. அதையடுத்துக் குறித்த கும்பலை உடனடியாக கைது செய்யுமாறு பருத்தித்துறை நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன் தினம் மாலை 6 மணியளவில் பொலிசார் வதிரிச் சந்தியில் நடத்திய திடீர் சுற்றிவளைப்பில் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் குறித்த சந்தேக நபர்கள் நால்வரையும் சமூக பணியில் செயற்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார். (ற–109)

# நலிவடைந்த குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைக்க மானியம்

## வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.4

வடக்கு மாகாண சமூகசேவைகள் புனர்வாழ்வு அமைச்சு நலிவடைந்த குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைப்பதற்காக மானியம் வழங்கவுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ சமூக சேவைகள் சிறுவர் நன்னடத்தை புனர்வாழ்வு மற்றும் மகளிர் விவகார அமைச்சர் வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் போரால் இடம்பெயர்ந்து நீண்ட இடைவெளிக்கு பின்னர் மீள்குடியமர்ந்துள்ள ஓமந்தை கள்ளிக்குளம் சிதம்பரம் கிராம மக்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். கள்ளிக்குளம் சிதம்பரம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது மீள்குடியேறிய மக்கள் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

கடந்த நான்கு வருடத்துக்கு முன்னர் மீள்குடியமர்ந்த தாங்கள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி வாழ்ந்து வருவதாகவும், வவுனியா நகரத்தலிருந்து வரும் வசதிபடைத்தவர்கள் கள்ளிக்குளம் பகுதிகளிலுள்ள காடுகளை அழித்து காணி அபகரிப்பு செய்வதாகவும், போக்கு வரத்து சிரமங்களை தாங்கள் எதிர்நோக்குவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அங்கு கருத்துத் தெரிவித்த வடக்கு சுகாதார அமைச்சர்,

சுகாதார அமைச்சின்கீழ் அண்மையில் கொண்டுவரப்பட்ட புனர்வாழ்வு, சமூக சேவைகள் அமைச்சின் ஊடாகச் சில வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட – நலிவடைந்த குடும்பங்களுக்கு மலசலகூடங்களை அமைப்பதற்கு மானிய உதவி வழங்கப்படவுள்ளது.

பெண் தலைமைத்துவமுடைய குடும்பங்கள், போரால் அவயவங்களை இழந்தோர் போன்றோருக்கு இந்தத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. மேலதிக விவரங்களுக்கு மாவட்ட வைத்திய அதிகாரி மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர்களை தொடர்பு கொள்ளுங்கள்.

போருக்குப் பின்னரான சூழ்நிலையில் புனர்வாழ்வு, சமூகசேவைகள் அமைச்சின் சேவை மக்களுக்கு மிகவும் அவசியமாகிறது. எனினும் இவ் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் போதமானதாக இல்லை. எனது அமைச்சின்கீழ் கடந்த சித்திரை மாதமே இந்த அமைச்சுக்களின் மேலதிக பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் வடக்கு மாகாண சபைக்கென கொள்வனவு செய்யவிருந்த வாகனங்களுக்கான ஒதுக்கீட்டின் ஒருபகுதியை கௌரவ முதலமைச்சரின் அனுமதியுடன் புனர்வாழ்வு அமைச்சிற்கு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.– என்றார். (ற–402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவைகள் திணைக்களத்தில் சைகை மொழிபெயர்பாளர்கள்

## வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் நியமிக்கப்படுவர் என வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வவுனியா, செப்.4

வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தில் சைகை மொழி பெயர்ப்பாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சமூக சேவைகள் அமைச்சர் வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சரின் ஊடக பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறுதெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

அரச திணைக்களங்களுக்கு சேவை நாடி வரும் வாய்பேச முடியாத, செவிப்புலனற்றவர்கள் தங்களின் தேவைகளை பெற்றுக்கொள்ள பெரிதும் சிரமப்படுகிறார்கள். அவர்கள் வெளிப்படுத்தும் சைகை மொழியை உத்தியோகத்தர்கள் புரிந்துகொள்ள முடியாது திண்டாடுகிறார்கள். இதனை கருத்தில் கொண்டு முதற்கட்டமாக வடக்கு மாகாணத்தின் சகல மாவட்ட சமூக சேவைகள் திணைக்களங்களிலும் சைகை மொழி பயிலுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தேவை ஏற்படும்பட்சத்தில் அரச திணைக்களங்களால் உதவி கோரப்படுமிடத்து திணைக்களங்களுக்கு சென்று உதவுவார்கள். இதனை வவுனியாவை தளமாகக் கொண்டு இயங்கும் 'ஓகாண்' அரச சார்பற்ற நிறுவனம் நடைமுறைப்படுத்தவுள்ளது. இவர்களுக்கான மாதாந்த படிகள் மற்றும் பயிற்சிகளுக்கான நிதியுதவியை நீலன் திருச்செல்வம் நிதியம் வழங்கவுள்ளது. எதிர்காலத்தில் சமூக சேவைத்திணைக்களத்தின் நிரந்தர பணியாளர்களாக உள்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் எதிர்காலத்தில் தேவை ஏற்படும் பட்சத்தில் பிரதேச செயலகங்களில் இவ்வாறான மொழிபெயர்ப்பாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.– என்றுள்ளது. (ற–402)

# சந்தைக் கட்டட தொகுதியை இயங்க வைக்க கோரிக்கை



வவுனியா, செப்.4

வவுனியா ஓமந்தையில் அமைந்துள்ள சந்தைக் கட்டடத் தொகுதி பயன்படுத்தப்படாத நிலையில் இருப்பது தொடர்பில் அந்தப் பகுதி பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஏ–9 வீதிக்கு அருகில் உள்ள இந்தக் கட்டிடத்தொகுதி கடந்த சில வருடங்களாக பயன்படுத்தப்படாது இருந்தது என்றும், பின்னர் அதனை சற்றுப் புனரமைத்து அமைச்சர் ஒருவரின் உதவியுடன் மீள அது திறக்கப்பட்டு சில மாதங்களில் மீண்டும் பயன்படுத்தாத நிலையில் கைவிடப்பட்டுள்ளது என்றும் பொது மக்கள் தெரிவித்தனர்.

விற்பனையாளர்கள் இன்மையாலேயே தாம் குறித்த சந்தைத் தொகுதிக்குச் செல்லவதில்லை என்றும் குறித்த கட்டடத் தொகுதி கால்நடைகளின் உறைவிடமாகவும் பயன்பாடற்ற பகுதியாகவும் உள்ளது என்றும் தெரிவித்த பொதுமக்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த சந்தைப் பகுதியை சிறந்த விற்பனையும் நுகர்வும் நிறைந்த இடமாக மாற்றி நுகர்வுத் தேவையைப் பூர்த்தி செய்ய உதவ வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற–402)

# விபத்தை தடுக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, செப்.4

கிளிநொச்சி – அக்கராயன் பிரதான வீதியின் புதுமுறிப்பு குளத்துக்கு அண்மித்த பகுதியிலிலுள்ள இரு பாலங்களின் அருகே ஆபத்தான குழிகள் காணப்படுவதனால் விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சி – புதுமுறிப்பு ஊடாக அக்கராயன் செல்லும் பிரதான வீதியின் புதுமுறிப்புச்சந்திக்கு அண்மித்த பாலத்தின் அருகே பாரிய குழி காணப்படுவதுடன், வீதியும் மிக ஒடுங்கியதாகவே காணப்படுகின்றது. மிக ஆபத்தான நிலையில் குறித்த பகுதி காணப்படுவதால், இதன் ஊடாகப்பயணிக்கும் வாகனங்களும் பொதுமக்களும் பெரும் விபத்துக்களை எதிர்கொள்ளும் நிலைகள் காணப்படுகின்றன.

இதற்கருகிலுள்ள மற்றுமொரு பாலமும் மிக ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. ஆகவே, இந்தப்பகுதி மக்கள் மீள்குடியேறி ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் இந்த வீதிகள் இதுவரை புனரமைக்கப்படாமல் உள்ளன. இவ்வாறான வீதிகளை புனரமைத்துத்தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

# மூடப்படும் அபாய நிலையில் ஓமந்தை நடராஜானந்தா வித்தி.

## நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலை சமூகத்தினர் கோரிக்கை



வவுனியா, செப்.4

ஓமந்தை இரம்பைக்குளம் நடராஜானந்தா வித்தியாலயம் எந்த விதக் கட்டடவசதியும் இன்றி இராணுவ சோதனை முகாமுக்கு அருகில் இயங்கி வருகின்றது என்று கவலை வெளியிட்டுள்ள பாடசாலைச் சமூகத்தினர், அந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடியமராவிட்டால் எதிர்காலத்தில் பாடசாலை மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது என்றும் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஓமந்தை சோதனை சாவடிக்கு அருகில் உள்ள இந்தப் பாடசாலை 1990 ஆம் ஆண்டு ஆரம்பிக்கபட்டு பின்னர் போர் இடம்பெயர்வால் வவுனியா மறவன்குள பாடசாலையுடன் சேர்ந்து இயங்கியது .

1990 ஆண்டு காலப்பகுதியில் 200க்கு மேற்பட்ட குடும்பங்கள் குறித்த பகுதியில் வசித்தபோதும் 2002ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் 5 குடும்பங்களே மீள்குடியமர்ந்தன. ஏனைய குடும்பங்களும் மீள்குடியமர ஆவலாக உள்ள நிலையில் அவர்களின் 300 ஏக்கர் காணி ஓமந்தைச் சோதனைச் சாவடிக்காக இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. 1990 ஆண்டு காலப்குதியில் இப்பாடசாலையில் 200 மாணவர்கள் கற்று வந்த நிலையில் தற்போது 13 மாணவர்களே கற்று வருகின்றனர். குறித்த பாடசாலையின் கட்டடங்களும் தகர்ந்து போயுள்ளன. இப்பிரதேசதத்தில் தாம் குடியேறவும் இராணுவத்தினர் அனுமதி தர வேண்டும் எனவும் இப்பாடசாலையில் அனைத்து வசதிகளுடன் கல்வி கற்பதற்கு உரிய வசதியை இந்த அரசு ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற–402)

# நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்

## முல்லை, கிளிநொச்சி தொண்டர் ஆசிரியர்கள் கோரிக்கை

ஒட்டுசுட்டான், செப்.4

முன்னைய அரசால் பழிவாங்கப்பட்டு பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனத்தை வழங்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர் பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள்.

கடந்த தடவை தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டபோது தகுதி இருந்த பலரும்கூட அரசியல் செல்வாக்குக் காரணமாக நிராகரிக்கப்பட்டார்கள். பதவியில் இருந்த மகிந்த அரசின் பங்காளிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் வன்னியில் இந்த விடயத்தில் மிக மோசமாக நடந்துகொண்டார்கள். தொண்டர் ஆசிரியராக நீண்டகாலம் பணியாற்றிய பலரைத் தவிர்த்துவிட்டு தங்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு தொண்டர் ஆசிரியர் நியமனங்களை வழங்கினார்கள். இதனால் உண்மையில் நியமனம் வழங்கப்படவேண்டியவர்கள் பாதிக்கப்பட்டார்கள். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த அரசில் நீதி கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இவர்களின் நியமனங்களை வழங்குவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முல்லைத்தீவில் இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவித்திருந்தார் என்றும் அவர்கள் தெரிவிதனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனின் தேர்தல் வாக்குறுதியும் அதுவே. எனவே இனியாவது தமக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற–500)

# வேலை வாய்ப்புக்காக 2014இல் 3 லட்சம் பேர் வெளிநாடு பயணம்

## பொதுசன மற்றும் புள்ளி விவரங்கள் திணைக்களம் தெரிவிப்பு

2014 ஆம் ஆண்டு நாட்டில் இருந்து 3 லட்சத்து 413 உழைப்பாளிகள் வேலைவாய்ப்புக்களுக்காக வெளிநாடுகளுக்குப் பயணமாகியுள்ளனர் என்று பொதுசன மற்றும் புள்ளி விவரங்கள் திணைக்களத்தால் வெளிப்படுத்தப்பட்டுள்ள புள்ளி விவரத் தரவுகள் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கைக்கு அமைய, 2013 ஆம் ஆண்டைவிட 2014 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் தொடர்பாக பயணப்பட்டிருந்தோரில் 6 ஆயிரத்து 195 என்னும் எண்ணிக்கையால் சிறு அதிகரிப்பொன்று தென்படுகிறது. ஆண்கள், பெண்கள் என்ற வகையில் 2014 ஆம் ஆண்டில் 1 லட்சத்து 89 ஆயிரத்து 924 ஆண்களும் 1 லட்சத்து 10 ஆயிரத்து 489 பெண்களும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் தொடர்பாக பயணப்பட்டுள்ளனர். தொழில்துறை சார்ந்த மட்டத்தில் வேலைவாய்ப்புக்கள் தொடர்பாக மிகச்சிறு தரப்பினரே வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் தொடர்பாகச் சென்றுள்ளனர். அவர்களின் தொகை 5 ஆயிரத்து 340 பேர் ஆகும். அதிக தொகையினர் வீட்டுப் பணிப்பெண்களாகச் சென்றிருப்பதோடு, அவர்களின் தொகை 88 ஆயிரத்து 661 பேர் ஆகும். பயிற்றப்பட்ட உழைப்பாளிகள் 73 ஆயிரத்து 039 பேரும் பயிற்சிபெறாத உழைப்பாளிகள் 79 ஆயிரத்து 415 பேரும் கடந்த ஆண்டில் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

அதேபோன்று, எழுதுவினைஞர்கள் மற்றும் அதற்குச் சமாந்தரமான வேலைவாய்ப்புக்கள் தொடர்பாக 29 ஆயிரத்து 237 பேரும் மத்திய மட்டத்து உழைப்பாளிகள் 20 ஆயிரத்து 749 பேரும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் தொடர்பாக பயணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–22)

# வடக்கு, கிழக்கில் தென்னை செய்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை

## தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.4

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் போர் காரணமாக அழிவுற்றுள்ள தென்னைச் செய்கையை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில் 25 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தென்னையைப் பயிரிடும் செயற்றிட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும் என்று தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர் இதாயத் சத்தார் தெரிவித்தார்.

தற்போது தேங்காய் ஏற்றுமதியின் மூலம் வருடாந்தம் தேசிய வருமானத்துக்குக் கிட்டும் 250 மில்லியன் டொலர் வருமானத்தை எதிர்வரும் 5 ஆண்டுகள் காலத்துள் ஒரு பில்லியன் டொலராக அதிகரிப்பதற்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டு உள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் தனிநபர் ஒருவரின் தேங்காய் பாவனை ஆண்டொன்றில் 118 தேங்காய்கள் எனவும், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது, இது மிக அதிகரித்த பெறுமதியைக் காட்டுகின்றது என்றும் குறிப்பிட்ட அவர், இந்த நாட்டின் தென்னை சார்ந்த உற்பத்திகள் தொடர்பாக சர்வதேச வர்த்தகச் சந்தையில் மிக அதிகரித்த கேள்வி நிலவுகின்றது என்றும் தெரிவித்தார்.

உலகில் தேங்காயை உற்பத்தி செய்யும் நாடுகளிடையில் நான்காம் இடத்தில் உள்ள எமது நாட்டின் 2 ஆயிரத்து 900 மில்லியன் என்ற வருடாந்த தேங்காய் உற்பத்தியை 3 ஆயிரத்து 900 மில்லியன் வரையில் அதிகரிப்பது தொடர்பாக ஏராளமான செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

தென்னைப் பயிர்ச்செய்கை சபைக்குச் சொந்தமான 38 நாற்று மேடைகள் மூலமாக வருடாந்தம் 45 லட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்றும் அவற்றுள் பெருந்தொகையானவை தேசிய செயற்றிட்டங்கள் மூலம் மக்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தென்னைச் செய்கையாளர்களுக்கு கப்ருக் செய்கைக் கடன்கள் முறைமையின் கீழ் 30 லட்சம் ரூபா வரையில் நிவாரணக் கடனுதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் ஏற்கனவே ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற–22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் சிறுபான்மையினரது வெற்றியே

## கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

திருகோணமலை, செப்.4

பழுத்த அரசியல்வாதியும் அரசியலில் நீண்ட கால அனுபவம் உள்ளவருமான இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமை இலங்கை அரசியலில்புதியதோர்திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளதுஎன்றுகிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நாசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.



சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்தமையை முஸ்லிம் சமூகம் முழு மனதுடன் வரவேற்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் புதிய நல்லாட்சியில் எதிர்க்கட்சித் தலைவராக சிறுபான்மையினத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள் ளமை இந்த நல்லாட்சியைச் சிறப் பாகக் கொண்டு செல்வதற்கு வழி வகுக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

1977ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டு சிறுபான்மையினத்தவர்களுக்கு பெருமை சேர்த்தார்.

அதேபோன்று 38 வருட காலத்துக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவு செய்யப்பட் டுள்ளமை தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வில் சம்பந்தன் போன்றவர்களின் கருத்துக்களும் முஸ்லிம் தலைவர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு நியாயமான தீர்வு கிடைக்கும் என நாம் நம்புகின்றோம்.

ஆங்கில, தமிழ் மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற சம்பந்தன், சிங்கள மொழியிலும் நன்கு பரிச்சியம் பெற் றவர். ஆழமான அரசியல் அறிவைக் கொண்ட அவர் சிறந்த பேச்சாளாரும் கூட. நாடாளுமன்றத்தின் அவர் வாதிடும் திறமை அலாதியானது. கிழக்கு மாகாணத்தில் பிறந்த சம் பந்தன் எதிர்க் கட்சித் தலைவரானமை, கிழக்கு மண்ணுக்கு பெருமை தருகின்றது. – என்றார். (ற)

## மாயாதுன்னவின் இடத்துக்கு விரைவில் தகுதியானவர்

கொழும்பு, செப்.4

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிய சரத் சந்திர மாயாதுன்னவின் இடத்துக்குத் தகுதியான ஒருவர் நியமிக்கப்படுவார் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு தெரிவான சரத் சந்திர மாயாதுன்ன, நேற்றுத் தமது பதவியிலிருந்து விலகியுள்ளார். இது குறித்து தெரிவிக்கையிலேயே அநுரகுமார மேற்குறித்தவாறு கூறினார்.

மேலும், சரத் மாயாதுன்ன பதவியிலிருந்து விலகியமை அவரது தனிப்பட்ட முடிவென்றும் அநுரகுமார தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணிக்கு இரண்டு தேசியப் பட்டியல் வாய்ப்புக்கள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (ற)



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான அமரர்கள் வி.தர்மலிங்கம், மு.ஆலாலசுந்தரம் ஆகியோரின் 30 ஆவது நினைவு தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் மாலை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தலைமைப் பணிமனையில் கட்சியின் மாவட்டக் கிளைத் தலைவர் பொ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கட்சியின் மூத்த உறுப்பினர்களும், பிரமுகர்களும் கலந்து கொண்டு நினைவுச் சுடர் ஏற்றியதுடன் திருவுருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்தும் மலர் அஞ்சலி செய்தும் அமரர்களை நினைவு கூர்ந்தனர். நிகழ்வில் வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், மாகாண சபை உறுப்பினர்களான ஆனல்ட், பரஞ்சோதி, வலி.தெற்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் பிரகாஷ் மற்றும் கட்சி ஆதரவாளர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற–ரி2,ரி5)

# தமிழர்களின் பிரச்சினைத் தீர்வில் தேசிய அரசு கவனமெடுக்கும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. நம்பிக்கை

யாழ்ப்பாணம், செப்.4

ஐக்கிய தேசியக் கட்சியும்,ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைத்துள்ளன. இந்த அரசு தமிழ் மக்களின் இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான ஒரு காத்திரமான பணியை முன்னெடுக்கும் என்று நம்புகின்றோம். – இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

கடந்த தேர்தல்களில் தமிழ்தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்தமைக்கு மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்ட அவர், வடமாகாணசபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்படும் வருடாந்த நிதி நான்கு கோடியே நாற்பது இலட்சம் ரூபா மக்களுடைய தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

கடந்த 30 வருடகாலத்தில் ஏற்பட்டிருக்கின்ற சொத்தழிவுகள், உயிரழிவுகள், காணாமற்போனோர் விவகாரம், நீண்ட காலமாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விவகாரம், மீள்குடியமர்வு, இராணுவம் அபகரித்துள்ள காணி விவகாரம் போன்றவை இந்த ஐந்து வருட காலத்தில் மிகுந்த சவால்நிறைந்த பணியாக இருக்க போகின்றது. இறுதிப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் தொடர்பாக ஒரு சர்வதேச விசாரணை கோரியே தமிழ் மக்கள் எங்களுக்கு வாக்களித்திருந்தார்கள். ஆனால் எங்களில் இருக்கும் ஒருசிலர் கூறுகிறார்கள் சர்வதேச விசாரணை ஒன்று நடைபெற்று முடிந்து விட்டது. மீண்டும் என்ன ஒரு சர்வதேச விசாரணை என மக்களைக் குழப்புகிறார்கள். எம்மில் சிலர் இப்படியான கருத்தக்களைத் தெரிவிப்பது எமக்கு மன வேதனையளிக்கிறது.

தமிழ் மக்களைக் கொலை செய்தவர்களே விசார்ணை செய்தால் எமக்கு நீதி கிடைக்காது. மகிந்த ராஜபக்ச காலத்திலே ஓர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டு அந்த ஆணைக்குழுவின் அறிக்கை கிடப்பிலே போடப் பட்டுள்ளன. கடந்த 60 வருட காலத்தில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி வழங்கப் படவில்லையென்பதை அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு ஒரு யாப்பு இல்லை. எந்தவிதமான பலமான ஒரு கட்டமைப்பு இல்லை. கூட்டமைப்பின் பெயரால் ஒருகட்சி தன் நலன்சார்ந்து செயல்படுவது தமிழ்தேசிய கூட்டமைப்புக்குள் மனக் கசப்புக்களை ஏற்படுத்துகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேண்டும் என பொது மக்கள் தமிழரசுக் கட்சியையும் சம்பந்தன் ஐயாவையும் வலியுறுத்த வேண்டும் – என்றார் (ற)

## 17 ஆம் திருவிழா

### வெற்றி வேலால் காத்தருள்வாய்

வடிவழகா வல்ல தமிழழகா!!
வேலா உமைசிவ பாலா!!!
நல்லைப் பதியுறை முருகா
உமைச் சுமந் துலாவர
ஊருறவுக ளேராள முண்டு
நோய் துயர் தீராவினையென
உள்ளம் நொந்துருகும்
எமைக் காக்க யாருமுண்டோ?
மயிலேறி வரும் திருமுருகா
அழுதழு தாறாத் துயருனைத்
தொழுதே தீருமென்று
தோளிலாடும் திருக் காவடிகள் காணீரோ
உன்னாசி வேண்டுமென
நீபோன சுவடினிலே
உருண்டு புரண்டு உருகியழுத
தேகவலி உணரீரோ
நாதியற்ற எம்நிலையை
நெஞ்சினிலே நீசுமந்து
இன்னலுறும் எமக்கருள
இன்னுமொரு பொய்கையிலே
தங்கத்தா மரையிலுனைத்
தத்தெடுக்க அருள்வீரோ
பக்தியால் உமைப்பாடி எம்
சக்தியே உன் சித்தமாகி
சரணடைந்த சந்ததியை உன்
வெற்றி வேலால் காத்தருள
விளையாட் டேனையா வேலையா!

சாந்தையூர் வினிஸ்.

### கூர்மைப் புத்தி தருவாய் கந்தா

கந்தன் எங்கள் கந்தனாம்
கணபதியின் தம்பியாம்
செம்மையோடு எம்மைக்காக்க
சிவனார் தந்த கந்தனாம்
விண்ணில் வாழும் கந்தனாம்
வேதமோதும் கந்தனாம்
மண்ணை ஆளும் மன்னருக்கே
மன்னனான கந்தனாம்
கைலை வாழும் கந்தனாம்
கருணை காட்டும் கந்தனாம்
நல்லை நகர் வந்திருந்து
நன்மை செய்யும் கந்தனாம்
தேவர் போற்றும் கந்தனாம்
தேரில் வரும் கந்தனாம்
ஆவலோடு எம்மை அன்பால்
அரவணைக்கும் கந்தனாம்
கந்தா கந்தா முருகையா
கருணைகாட்டும் வேலையா
கந்தா என்முன் வருவாயே
அன்பாய் கருணை தருவாயே
வாசப்பூக்கள் நாம் தருவோம்
வாய்க்கு இனிய பழம்தருவோம்
கற்பூரங்கள் காட்டிடுவோம்
கையை நீட்டிக் கேட்டிடுவோம்
குட்டி எம்மைக் கலைக்காமல்
கூர்மைப் புத்தி தருவாயே!!

*குலனையூர் பாவரன்.*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** இலட்சிய மனப்பான்மையுடன் செயற்படு வீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் சீராக இருக் கும். வெகுநாள் காணாமற் தேடிய பொருள் கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி குறித்த பேச்சு நடக்கும்.

**இடபம்:** பிறருக்கு உதவும் மனப்பான்மை உருவாகும். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். மனைவி வழியில் ஆடம்பரச் செலவு உண்டாகும். மாணவர்கள், கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**மிதுனம்:** கடந்த கால உழைப்புக்கான நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிக ரிக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருளை வாங்கு வீர்கள். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**கடகம்:** உங்களின் வளர்ச்சி கண்டு பிறர் வியப்படைவர். தொழில், வியாபார விடயமாக, வெளியூர் செல்ல நேரிடும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்கு வர்கள். முக்கியமாக வீட்டுக்கு உபயோகமான பொருள் களை வாங்குவீர்கள்.

**சிங்கம்:** உறவினர் எதிர்பார்த்த உதவியைச் செய்வீர் கள். மனைவியின் ஆலோசனை, வளர்ச்சிக்கு துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில், இலாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும்.

**கன்னி:** பொறுப்பை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை கொள்வது நல்லது. பிள்ளைகளின் செயற்பாடு நிம்மதிக்கு வழிவகுக்கும்.

**துலாம்:** தக்க சமயத்தில், நண்பர்களின் உதவி கிடைக் கும். ஆரோக்கியம் பலம் பெறும். சுப காரியத்தில், நல்ல முடிவு ஏற்படும். தொழில், வியாபாரத்தில், புதிய உத்தியால் இலாபம் காண்பீர்கள். பணி விடயமாக, பணியாளர்கள் வெளியூர் செல்வர்.


**விருச்சிகம்:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், அதிக வருமானம் கிடைக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்கி மகிழ் வீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.

**தனுசு:** எவரிடமும் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தினரின் ஆதரவு, நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால், திடீர் செலவு ஏற்படலாம்.

**மகரம்:** உடல் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். கௌரவத்துக்காக ஆடம்பரச் செலவு செய்வீர்கள். வாகனப் பயணத்தில், மிதவேகம் கடைப்பிடிப்பது நல்லது

**கும்பம்:** மனதில் தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நண்பர்களைச் சந்தித்துப்பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கு ஏற்ப இலாபம் கிடைக்கும். இயன்ற அளவில் பிறருக்கு உதவுவீர்கள்.

**மீனம்:** இனிமையுடன் பேசி அனைவரையும் கவர்வீர் கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக் கும். பிள்ளைகளின் நலனுக்காக, பெண்கள் பாடுபடுவார்கள்.



## அரசியலில் குதித்த தனுஷ்

தனுஷ் அரசியலில் குதிப்பது உண்மையில் அல்ல, படத்தில்.


துரை செந்தில்குமார் இயக்கத்தில் அண்ணன், தம்பி என இரு வேடங்களில் நடிக்கிறார் தனுஷ். அதில் அண்ணன் அரசியல்வாதி. அரசியல் பின்னணியுடன் படம் தயாராகிறது. அரசியல் த்ரில்லர் என்கிறார்கள். புதுப்பேட்டையில் அரசியல் இருந்தாலும், தாதா வாழ்க்கைதான் அதில் பிரதானம். இந்தப் படத்தில் அரசியல் பிரதானமாக வருகிறதாம். அண்ணனுக்கு லட்சுமி மேனனையும், தம்பிக்கு ஷாம்லியையும் ஜோடியாக்கியிருக்கிறார்கள்.


இந்தப் படத்தை எதிர்வரும் ஒக்ரோபரில் தொடங்கி டிசம்பருக்குள் முடிப்பதாகத் திட்டம்.

## புலிக்கு பிறந்தது பூனை ஆகுமா?


முதலை வேட்டை என்றதுமே நினைவுக்கு வருவது, எப்போதும் தொலைக் காட்சியில் முதலைகளுடன் வலம் வரும் ஸ்டீவ் இர்வின்தான். முதலைகளின் காதலனாகத் திகழ்ந்த இவர், சில வருடங்களுக்கு முன்னர் விஷமீன் கடித்து உயிரிழந்தமை உலகம் முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. அந்த சோகத்தைப் போக்கும் வகையில் தற்போது உதயமாகியிருக்கிறான் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த குட்டி ஸ்டீவ் இர்வின். இவனது பெற்றோர்களான க்ரெக், ஜூலியா இருவருமே வனவிலங்கு ஆர்வலர்கள்.

புலிக்கு பிறந்தது பூனையாகுமா? 3 வயதிலேயே தனியாக முதலைகளைப் பிடிக்கத் தொடங்கிய குட்டி ஸ்டீவ் இர்வின் சார்லி பார்கருக்கு தற்போது 5 வயது. இவனது பெற்றோர் விக்டோரியா நகரில் பலாரட் என்ற வனவிலங்குப் பூங்காவை நிர்வகித்து வருகின்றனர். பாடசாலைக்குச் செல்லும் சார்லி, பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்ததும் விலங்குகளுக்கு உணவிடுவது, சுற்றுலாப் பயணிகளை காட்டுக்கு அழைத்துச் செல்வது, முதலையைப் பின் பக்கத்திலிருந்து வளைத்துப் பிடிப்பது என்ற ஒரு முழுமையான காட்டு அதிகாரியாகவே மாறியுள்ளான். இதனால், அந்தப் பூங்காவுக்கு வரும் அனைவரும் சார்லியை ஜூனியர் ஸ்டீவ் இர்வின் என்றே அழைக்கின்றனர்.









## கொஞ்சம் சிரிங்க பாஸ்...



**அப்பா:** என்னடா உன்ர அம்மா காலையில இருந்து கதைக்காமல் இருக்கிறா..?

**மகன்:** அம்மா உதட்டுச்சாயம் கேட்டாங்க நான் தெரியாம பெவிக்கலைக் வாங்கி கொடுத்துட்டேன்பா...

**அப்பா:** நீ எனது மகன் இல்லடா.., என்ர சாமிடா....!!!!!!..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோ.சைக்கிள் மோதியதில் மூதாட்டி காயம்

தென்மராட்சி செப்.4

பாதசாரிகள் கடவையை அண்டிய பகுதியில் வீதியைக் கடக்க முற்பட்ட மூதாட்டியொருவரை ஏ–9 வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதிக் காயப்படுத்தியது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை சாவகச் சேரி பஸ் நிலையத்துக்கு முன்பாக நடந் துள்ளது.

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த அருணாசலம் செல்லம்மா ( வயது 75 ) என்பவரே காயமடைந்தவராவார். விபத்தையடுத்து தூக்கி வீசப்பட்டு தலையில் காயமடைந்த மூதாட்டி சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளார்.

(ற–9)


**Majestic** Cineplex Jaffna

கார்கில்ஸ் ஸ்குவெயர்

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில் — CEYLON THEATRES



மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 10.30 / 2.30 6.30



சில்வர் 10.15 / 2.15 / 6.15

ப்ரொன்ஸ்



பஹுபாலி 10.30 / 2.30

வித் ஓர் வித்தவுட் யு 6.30

விசாரணை ☎ 021- 2227712

CeylonTheatres

www.ceylontheatres.lk



## வகுப்புக்கள்

O/L இரண்டாம் மொழி - சிங்களம்

Past paper class (வடமராட்சியில்)

ஆரம்பம் : 05.09.2015

தொடர்பு : 0777115876



## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம்,வவுனியா போன்ற பிரதேசங்களில் வேலை செய்யக் கூடிய மேசன்,சட்டறிங்,கம்பி வேலை செய்பவர்கள், கூலியாள்கள் உடன் தேவை.

தொடர்பு: 077 712 0945

(62675) (12.15.16)



## மணமக்கள் தேவை

* 1974 இல் பிறந்த உத்திரட்டாதி14 பாவமுடைய சொந்த கடை நடத்தும் மண மகனுக்கு 33 வயதுக்குள் மணமகள் தேவை.
* 1976 இல் பிறந்த திருவாதிரை 44 பாவ முடைய 7 இல் செவ்வாய் சூரியன் செவ் வாய் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
* 1985 இல் பிறந்த,கார்த்திகை ,பட்ட தாரி ஆசிரியை மணமகளுக்கு மணமகன் தேவை.

தொடர்பு: 077 715 5572

077 843 5440

077 666 7771

(60589) (12.15.)





# தெல்லிப்பழை அருள்மிகு வறுத்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயம் திருப்பணி

மருதடி விநாயகப் பெருமான் அடியார்களே!

எங்கள் ஆலயத்தில் திருப்பணி வேலைகள் மிக விரைவில் ஆரம்பமாகத் திருவருள் கிட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம் தங்கள் பங்களிப்பையும் நாம் அன்புரிமையுடன் எதிர்பார்க்கின்றோம்.

பணம் அனுப்ப வேண்டிய வங்கிக் கணக்கு

**இலக்கம்: 077507587**

**இலங்கை வங்கி, காங்கேசன்துறைக்கிளை (605) மல்லாகம்**

(62669) (13.15.16)

**பரிபாலன சபையினர்**


# கேள்வி அறிவித்தல்

உள்ளூராட்சி அமைச்சு

மாகாண அடிப்படையிலான குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை

பூநகரி பிரதேச சபை, வடமாகாணம்

| திட்டத்தின் பெயர் | ஒப்பந்த இல |
|---|---|
| மட்டுவில்நாடு மேற்கு சுடலை திருத்தம். | NP/14/45(04)/02/PSDG/2015/01 |
| நாச்சிக்குடா வாராந்த சந்தை அமைத்தல். | NP/14/45(04)/02/PSDG/2015/02 |

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு, கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென மாகாண அடிப்படையிலான குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர், பெறுகைக்குழு, **பூநகரி பிரதேசசபை, வடமாகாணம்,** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டட **அமைப்புக்கான** இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5** இல் காட்டப்பட்டுள்ளது
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பூநகரி பிரதேச சபை, வாடியடி பூநகரி, கிளிநொச்சி(தொலைபேசி: 0243243493), Email** poonakaryps@yahoo.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை 28th September 2015 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பூநகரி பிரதேச சபை, வாடியடி பூநகரி, கிளிநொச்சி** எனும் இடத்திலிருந்து 4th September 2015 ஆம் திகதியிலிருந்து 28th September 2015 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**1000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பூநகரி பிரதேச சபை, வாடியடி பூநகரி, கிளிநொச்சி** எனும் முகவரிக்கு 28th September 2015 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியில் இருந்து 49 (நாற்பத்து ஒன்பது–16th November 2015) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு(Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(04)/02/ PSDG/2015/01 | மட்டுவில்நாடு மேற்கு சுடலை திருத்தம். | 0.877 | 03 மாதங்கள் | C10 அல்லது அதற்கு மேல் | 9000 | 14.12.2015 |
| NP/14/45(04)/02/ PSDG/2015/02 | நாச்சிக்குடா - வாராந்த சந்தை அமைத்தல். | 0.885 | 03 மாதங்கள் | C10 அல்லது அதற்கு மேல் | 9000 | 14.12.2015 |

11. கேள்வி கோரல் பற்றிய முன்னோடிக்கூட்டம் 18th September 2015ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு பூநகரி பிரதேசசபைக்கட்டத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**பூநகரி பிரதேச சபை,**
**01.09.2015**

(சி.18577) (13.15.16)


## தவறிவிட்டது

தருமலிங்கம் வினோதரன் என்பவருடைய வாகன அனுமதிப்பத்திரம், காப்புறுதி அட்டை, வரிஅனுமதிப்பத்திரம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும்.

T.P 077 134 6797

(c 18594)(12.15.)



## காணி தேவை

சாவகச்சேரி மீசாலை தொடக்கம் கைதடி நுணாவில் பகுதிக்கு உட்பட்ட A9 வீதிக்கு அருகில் 5 பரப்புக்கு உட்பட்ட காணி உடனடியாகத் தேவை.

தொடர்பு: 077 684 1330

(62675) (12.15.16)



அதிபர்




செல்லம் Dts 10.30, 2.30, 6.30 — 065 2240064

ராஜா Dts 10.30, 2.30, 6.30, 9.30, p.m — 021 2227332

சினிசிட்டி Dts 10.30, 2.30, 6.30, 9.30

சினிவேள்ட் Dts 10.30 2.30, 6.30, 9.30 — 011 2330017

சரஸ்வதி Dts 10.30, 2.30, 6.30, 9.30

திருகோணமலை Tel 026 2222221


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 | 07 |
| 02 | 08 |
| 1933 | 2015 |

திதி : அட்டமி

கடந்த 07.08.2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர் **அன்னலிங்கம் குமாரசாமி**

அவர்களின்

அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (04.09.2015) வெள்ளிக்கிழமை காலை 07.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 06.09.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு:
0212213263, 0777033039

(62600.11.15)

குடும்பத்தினர்.



# 9ஆம் ஆண்டு நினைவில்



மண்ணில்
27.05.1931

விண்ணில்
04.09.2006

அமரர் **தம்பிராசா அந்தோனிப்பிள்ளை**
(செபரத்தினம்)

குடும்பத்தின் ஒளி விளக்காய்
வாழ்ந்திட்ட எம் தெய்வமே!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உங்களுக்கு ஈடாகுமா?

வாழ்க்கை என்னும் பாதையிலே
நீங்கள் காட்டிய பாசமெல்லாம்
எம்மை விட்டு பிரிந்து எட்டாண்டானதோ?
உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட
உங்கள் நினைவலைகள் என்றென்றும்
எம்முடன் நிலைத்திருக்கும்

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



# ஏழாம் ஆண்டு நினைவுகளுடன்

திருமதி
**தெய்வநாயகி வீரசிங்கம்**



தோற்றம்
15.02.1939

மறைவு
22.08.2008

திதி: அபரபக்க ஷஷ்டி 04.09.2015

அன்னையாய் இருந்து அரவணைத்து வளர்த்தீர்கள்
ஆலமர விழுதுகள் போல் நாம் இங்கிருக்க
காலனவன் உங்களைக் கவர்ந்து கொண்ட போது
ஏதிலிகள் ஆகி நின்றோம் நாம்- அம்மா
ஏழு வருடங்களல்ல ஏழேழு ஜென்மத்திலும் மறவோம்
நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்.

கௌரி கோட்டம்,
அல்வாய்

[62771] [12.15 16]

குடும்பத்தினர்.


# நெல்லியடி ம.க. 15ஆம் திகதியே ஆரம்பமாகும்

யா/நெல்லியடி மத்திய கல்லூரி 3ஆம் தவணைக் காக எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க் கிழமையே திறக்கப்பட வுள்ளது என்று கல்லூரியின் முதல்வர் ஜி.கிருஸ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

இலங்கைபரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுப் பணி கள் எதிர்வரும் 8ஆம் திகதிமுதல் 14ஆம் திகதிவரை இக் கல்லூரியிர் நடைபெற வுள்ளன என்று தெரிவித் துள்ள அவர், கல்லூரி ஆசிரியர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை9 மணிக்கு நடைபெற வுள்ளதால் சகலஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறும் அவர் தெரி வித்துள்ளார். (ற–422)

# மனிதனாக வாழ்வோம் கண்காட்சி இன்று

யாழ்ப்பாணம், செப். 4

நல்லூர் ஆலய வடக்கு வீதியில் உள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத் தும் 'மனிதனாக வாழ்வோம்' கண் காட்சி காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை நடை-பெறவுள்ளது.

நல்லூர் அதிகம்பீர ஸர்வர்ண கலாபன நூதன நவதள குபேர இராஜகோபுர கும்பாபிஷேகமும் (நவகலசாபிஷேகம்) கார்த்திகைத் திருவிழாவும் இன்று நடைபெறுகின்றன. அதைமுன்னிட்டு இந்த கண்காட்சி ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. (ற–10)


# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25 | 02 |
| 04 | 09 |
| 1937 | 2015 |

திருமதி **மகேஸ்வரியம்மா மகாலிங்கம்**

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரியம்மா மகாலிங்கம் 02.09.2015 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கணபதிப் பிள்ளை தம்பதிகளின் பாசமிகு இரண்டாவது மகளும் Dr.அ.மகாலிங்கம் அவர்களின் துணைவியாரும் திருமதி திலகவதியார் மற்றும் காலஞ்சென்ற க.மாதவன், திருமதி தனலட்சுமி ஆகியோரின் அன்பு சகோதரியும், சுந்தர லிங்கம், பரமலிங்கம், கிருஷ்ணலிங்கம், திருமதி இந்துமதி சுதர்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி மஞ்சுளா, திருமதி மைதிலி, காலஞ்சென்ற சுதர்சன் ஆகியோரின் மாமியாரும் டிலானி, கிஷான், சர்மிளா, சிவன், லிலோஜினி, லக்ஷ்மன், லிருக்ஷ்மன், பிரஷன்யா, தக்ஷி, யுவன் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 03.09.2015 (வியாழன்), 04.09.2015 (வெள்ளி), 05.09.2015 (சனி) ஆகிய நாள்களில் வத்தளையிலுள்ள மகிந்த மலர்ச்சாலையில் (210A நீர்கொழும்பு வீதி, வத்தளை) யில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிச்சடங்குகள் 05.09.2015 சனிக் கிழமை பி.ப ஒரு மணிக்கு நடைபெற்று கெரவலப் பிட்டி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே :
0773237274,0112937351

தகவல் :
அ.மகாலிங்கம் (கணவர்),
திருமதி சு.இந்துமதி (மகள்)



# மரண அறிவித்தல்

## கந்தையா குணசிங்கம்

(ஓய்வுபெற்ற விமானப்படை தொழில் நுட்ப உத்தியோகத்தர்)



பிறப்பு 21.07.1937 | இறப்பு 02.09.2015

காரைநகர், களபூமி, சத்திரந் தையைப் பிறப்பிடமாகவும் No.3,6/4, பெற்றிக்கா வீதி, வெள்ளவத்தையை வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா குணசிங்கம் 02.09.2015 கொழும்பில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான கந்தையா - தங்க முத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர் களான சுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், யசோதரை, கிருஜாதேவி, கௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சரஸ்வதி மற்றும் மகாதேவன் (மலேசியா), காலஞ்சென்ற சகாதேவன் (மலேசியா) மற்றும் அமிர்தசிங்கம் (ஆஸ்திரேலியா), தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகுமாரன் (கனடா), சிவசுதன் (லண்டன்),அருண்கரன் (வைத்தியர்) ஆகியோரின் அன்பு மாமனும், அஷ்விகா, சிவானன், நிரோஸன்,தனுசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 591, காலிவீதி, கல்கிசையில் மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக 04.09.2015- 05.09.2015 வைக்கப்பட்டு 06.09.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணி அளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

591, காலிவீதி,
கல்கிசை.

(சி.18592)
(13.15)

தகவல்: மனைவி,
மக்கள், மருமக்கள்.


# மின்கம்பங்களுக்கு இலக்கமிடும் சாவா. நகரசபை

தென்மராட்சி, செப்.4

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் வீதி விளக்கு கள் பொருத்தப்பட்டுள்ள மின்கம் பங்களுக்கு இலக்கம் இடும் பணி கள் நகரசபையால் மேற்கொள் ளப்பட்டு வருகின்றது. வீதி விளக்கு பழுதடையும் வேளைகளில் பொதுமக்கள் முறைப்பாடு செய்வ தற்கு வசதியாகவே இந்த நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த வீதி விளக்குகள் பழுதடை யும் பட்சத்தில் வீதியின் பெயர், மின்கம்ப இலக்கம் ஆகியவற் றைக் குறிப்பிட்டு முறைப்பாடு செய்யுமாறு பொதுமக்களை நக ரசபைச் செயலாளர் கா.சண்முக தாசன் கேட்டுக்கொண்டுள்ளார்.(ற–9)

# போக்குவரத்து விதிகளை மீறிய நால்வருக்கு அபராதம்

தென்மராட்சி, செப்.4

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்கள் செலுத்திய நால் வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 20 ஆயிரம் ரூபா அபரா தம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக் கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற் றுத் தனித்தனியாக பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலை யில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

சாரதிய அனுமதிப் பத்திரமின்றி மது போதையில் வாகனம் செலுத் திய நபரொருவருக்கு 8 ஆயிரம் ரூபாவும், விபத்தை ஏற்படுத்திய ஒருவருக்கு 6 ஆயிரம் ரூபாவும் மேலும் இரு வருக்குதலா 3 ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதிக்கப்பட் டன.(ற–9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுமக்கள் பாதுகாப்பு குழுக் கூட்டம்

யாழ். மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் கலந்துரையாடலும் மாவட்ட பொது மக்கள் பாதுகாப்புக் குழுக் கூட்டமும் எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மு.ப. 9 மணிக்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் கலந்துரையாடலும் மு.ப. 10.30 மணிக்கு பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக் கூட்டமும் இடம் பெறும் என்று யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் அனைத்து திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார். (ந-9)


**பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது**

| பதவி | சம்பளம் |
|---|---|
| *விற்பனை பிரதிநிதி(DSR) | தரகு அடிப்படை Commission basic |
| *சாரதி(Driver) | 1100/= |
| *தொழிலாளர்(Labour) | 900/= |

* வயது எல்லை 30-45

உரிய தகுதியானவர்கள் சுயவிவரக்கோவையுடன் பின்வரும் முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.

தொடர்புக்கு:- பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
31,மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம்.
(62670) (12.15.16.)

**பெயர்மாற்றம்**

கட்டைவேலி, கரவெட்டியைச் சேர்ந்த **அருளையா மகேந்திரதாசன்** ஆகிய நான் எனது பெயரை **"மகே"** என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் இன்று தொடக்கம் சகல ஆவணங்களிலும் எனது புதியபெயராகிய **"மகே"** யைப் பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே சகல ஆவணங்களிலும் ஒப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

மகே
கட்டைவேலி, கரவெட்டி.
(58525.11.15.16)


# தேர்தல்கள் திணைக்களத்தின் ஓர் அறிவித்தல்
# தேருநர் இடாப்புக்களின் மீளாய்வு - 2015

01. 2015 ஆம் ஆண்டிற்காக தேருநர்களைக் கணக்கெடுப்பதற்கான படிவத்தை தாங்கள் இதுவரையில் பூர்த்தி செய்து கிராம அலுவலர்/ விஷேட கணக்கெடுக்கும் அலுவலர் மூலமாக தேர்தல்கள் அலுவலகத்திற்கு ஒப்படைத்திராவிடின்,தயவுசெய்து கிராம அலுவலரின் பரிந்துரையுடன் அல்லது இல்லாமல் உரிய மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு அந்தப் படிவத்தை அனுப்பிவைக்கவும்.

02. வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் படிவங்கள் உங்கள் வீட்டிற்கு கிடைக்கப்பெறவில்லையாயின், கீழேயுள்ள படிவத்தைப் (UE) பூர்த்தி செய்து கிராம அலுவலர் ஊடாக அல்லது நேரடியாக 2015 செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கும் வண்ணம் உரிய மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவிப் பதிவு அலுவலருக்கு அல்லது இராஜகிரிய, தேர்தல்கள் செயலகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும், (இலங்கைக்கு திரும்பி வரவிருக்கும் தற்பொழுது தற்காலிகமாக வெளிநாடுகளில் வதிகின்ற இலங்கைப் பிரசைகளைத் தேருநர்களாகப் பதிவுசெய்வதற்காகத் தகவல்களை வழங்கும்போது வெளிநாட்டில் வதிகின்ற முகவரியையும் இலங்கைக் கடவுச்சீட்டின் இலக்கத்தையும் கட்டாயமாகக் குறிப்பிடுதல் வேண்டும்)

03. 2015 ஜனவரி 08 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதிக் தேர்தலின் போதும், 2015 ஆகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின்போதும் உங்களுக்கு/உங்கள் குடும்ப அங்கத்தவர்களுக்கு வாக்குரிமை இருக்கவில்லையாயின்,2015 ஜூன் மாதம் 01 ஆம் திகதி நீங்கள்/ உங்கள் குடும்ப அங்கத்தவர்கள் வதிந்துள்ள முகவரி, பெயர்கள்/தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் போன்ற தகவல்களை இராஜகிரிய, தேர்தல்கள் செயலகத்தின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளருக்கும் (நாடாளுமன்ற தேர்தல்கள்) பிரதியொன்று சகிதம் உரிய மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகத்திற்கு எழுத்துமூலமாக அறிவித்தனுப்பவும்.

### மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு நகர | 011 - 287 2248 | அம்பாந்தோட்டை | 047 - 225 6248 | குருநாகல் | 037 - 222 2369 |
| கொழும்பு மாவட்ட | 011 - 286 7472 | யாழ்ப்பாணம் | 021 - 222 2655 | புத்தளம் | 032 - 226 5246 |
| கம்பஹா | 033 - 222 2047 | கிளிநொச்சி | 021 - 228 5664 | அநுராதபுரம் | 025 - 222 2551 |
| களுத்துறை | 034 - 222 2266 | மன்னார் | 023 - 222 2289 | பொலன்னறுவை | 027 - 222 2012 |
| கண்டி | 081 - 223 3187 | வவுனியா | 024 - 222 2311 | பதுளை | 055 - 222 2424 |
| மாத்தளை | 066 - 222 2422 | முல்லைத்தீவு | 021 - 206 1426 | மொணராகலை | 055 - 227 6315 |
| நுவரெலியா | 052 - 222 2325 | மட்டக்களப்பு | 065 - 222 4312 | இரத்தினபுரி | 045 - 222 2023 |
| காலி | 091 - 223 4028 | அம்பாறை | 063 - 222 4342 | கேகாலை | 035 - 222 2561 |
| மாத்தறை | 041 - 222 2305 | திருகோணமலை | 026 - 222 2304 | | |

UE } ආකෘතිය / படிவம் / Form

2015.09.01 දින සිට 2015.09.25 දින දක්වා පමණක් වලංගු වේ./ 2015.09.01 ஆந் திகதி முதல் 2015.09.25 ஆந் திகதி வரை மாத்திரம் செல்லுபடியாகும்/ Valid only from 01.09.2015. to 25.09.2015

ඡන්ද හිමි නාමලේඛන පුනරීක්ෂණය / தேருநர் இடாப்புக்களின் மீளாய்வு / Revision of Electoral Registers - 2015

ගෘහ අංකය/ வீட்டு இல. /House No : ............................ ලිපිනය/முகவரி/Address : ..........................................................................

සහකාර ලියාපදිංචි කිරීමේ නිලධාරී/ உதவிப் பதிவு அலுவலர் / Assistant Registering Officer,
මැතිවරණ කාර්යාලය/ தேர்தல்கள் அலுவலகம்/Elections Office, ............................ දිස්ත්‍රික්කය/ மாவட்டம்/District ..........................................

**ඡන්ද හිමි නාමලේඛන පුනරීක්ෂණය / தேருநர் இடாப்புக்களின் மீளாய்வு / Revision of Electoral Registers - 2015**

මාගේ ගෘහයේ පදිංචි පහත නම් සඳහන් තැනැත්තන් 2015 ඡන්ද හිමි නාමලේඛනයට ඇතුළත් කරන ලෙස ඉල්ලා සිටිමි. මගේ නිවසට ගණන් ගැනීමේ ආකෘතියක් ලැබී නැත.

எனது வீட்டில் வதிகின்ற கீழ்க்காணும் பெயர்களையுடையவர்களை 2015 இன் தேருநர் இடாப்பில் உட்சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன். எனது வீட்டிற்கு கணக்கெடுப்பு படிவமொன்று கிடைக்கப்பெறவில்லை.

I request the insertion of the names of following persons who are residing in my house, to the Electoral Register of 2015 . Voters Enumeration Form has not been delivered to my residence.

| ඡන්දහිමියන් ලෙස ලියාපදිංචි වීමට සුදුසුකම් ඇති පදිංචිකරුවන්ගේ නම්/ வாக்காளர்களாகப் பதிவு செய்யத் தகுதியுடைய வதிந்துள்ளவர்களின் பெயர்கள் / Names of residents eligible to be registered as electors | උපන් දිනය பிறந்த திகதி Date of Birth | ජාතික හැඳුනුම්පත් අංකය/ தேசிய அடையாள அட்டை இல./ National Identity Card Number | අවසානවරට ලියාපදිංචි වූ ලිපිනය හා වර්ෂය இறுதியாகப் பதிவு செய்யப்பட்ட முகவரியும் வருடமும் The year and address of last Registration |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

අත්සන/ கையொப்பம் /Signature ..................................

ගෘහ මූලිකයාගේ නම/ பிரதான குடியிருப்பாளரின் பெயர் /Name of Chief Occupant ..........................................................

දිනය/ திகதி /Date ........................ දුරකථන අංකය/ தொலைபேசி இல. / Telephone No: ............................
(අනිවාර්ය නැත/ கட்டாயமல்ல/Optional)

ග්‍රාම නිලධාරීගේ නිර්දේශය/ கிராம அலுவலரின் பரிந்துரை/Recommendation of the Grama Niladhari

..........................................................................................................

දිනය/ திகதி /Date ........................

ග්‍රාම නිලධාරීගේ අත්සන සහ නිල මුද්‍රාව/ கிராம அலுவலரின் கையொப்பமும் பதவி இலச்சினையும்/
Signature and Official frank of Grama Niladhari

(சி.19024) (13.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டடங்களின் தொகை அதிகரிப்பு

## உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்ட பின்னர்

உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்ட பின்னரான காலப்பகுதியில் அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டடங்களின் எண்ணிக்கை அதி கரித்துள்ளது என்று உள்ளூராட்சி அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சிச் சபைகள் இயங்கிய காலத்தில் எந்த வொரு கட்டடம் அமைப்பதாயினும் கட்டட வரைபடம் தயாரிக்கப்பட்டு சுகாதாரத் திணைக்கள அதி காரிகளின் பரிந்துரையின் பின்னர் கட்டட அனுமதி அந்தந்த உள்ளூ ராட்சி சபைகளால் வ்ழங்கப்பட்ட பின்னரே அமைக்கப்படவேண்டியிருந்தது. வீடமைப்பு நகர கட்டளைச் சட்டத்தின் பிரகாரமும் நகரஅபிவிருத்தி அதிகார கட்டளைச் சட்டத்தின் பிரகாரமும் உரிய அதிகாரிகளின் அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு வந்தது. இதற்கு மக்களும் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கியிருந்தனர்.

கடந்த ஜுலை 31 ஆம் திகதியுடன் உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக் காலம் முடிவடைந்ததையடுத்து அவை கலைக்கப்பட்டன. இந்த நிலையில் தற்போது பொது மக்கள் கட்டடங்கள் அமைப்பதற்கான கட்டட அனுமதி பெறுவதைத் தவிர்த்து தாம் நினைத்தவாறு கட்ட டங்களை அமைத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைகளின் கட்டட அனுமதிக் குழுவினரால் அனுமதிக்கப்பட்ட கட்டட வரைபடத்தில் எந்த வொரு மாற்றமும் செய்யப்படக் கூடாது என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், வாஸ்து சாஸ்திரப் பிரகாரமும், கட்டடக் கலைஞர்களின் எண்ணப்படியும் கட்டட அமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டு கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. இது சட்டப்படி குற்றமாகும். கட்டடங்கள் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக அமைக்கப்படவேண்டு மென்பது அவசியமென்பதால் அந்தந்த உள்ளூராட்சி சபைகளிடம் உரிய படிவங்கள் மூலம் விண்ணப்பித்துக் கட்டடங்களை அமைக்குமாறும் மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் உள்ளூராட்சி சபைகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உள்ளூராட்சி சபைகளின் அனுமதிக்காக வழங்கப்படும் கட்டட விண்ணப்பங்கள் உரிய காலத்தில் அனுமதி வழங்கப்படாமல் இழுத் தடிப்புச் செய்யப்படுகின்றது என்றும், உரிய காலத்தில் கட்டடம் அமைக்க முடியாத நிலை ஏற்படுகிறது என்றும் குற்றஞ்சாட்டும் பொதுமக்கள், தாம் நிர்ணயித்த திகதியில் அத்திவாரம் கூடப் போட முடியாத நிலை ஏற்படு கின்றது என்றும் தெரிவித்தனர்.

அனுமதி பெறுவதற்கு உள் ளூராட்சி சபைக்கு அலைந்து திரியும் காலத்தில் கட்டடத்தையே அமைத்து முடித்துவிடலாமெனவும் அதனால் கட்டட அனுமதிபெற முயற்சிப்பதில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ற-9)

# மாடுகளின் காதுகளில் துவாரமிட்டு அடையாளம் காண்பதற்கு உதவுக

## தென்மராட்சிப் பிரதேச மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, செப்.4

தென்மராட்சி பிரதேசத்தில் ரயில் மற்றும் கனரக வாகனங்களால் மோதுண்டு உயிரிழக்கும் மாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அவற்றின் உரிமையாளர்களை இனங்காண்பதற்காக அனைத்து மாடுகளுக்கும் காதில் துவாரம் இடும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று சுகாதாரத் திணைக்களத்தினருக்கும், கால்நடை மருத்துவர் அலுவலகத்திடமும், அந்தந்த உள்ளூராட்சி சபைகளிடமும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏ-9 வீதியில் கடந்த ஒரு வருடத்தில் 300க்கு மேற்பட்ட மாடுகள் ரயில் மற்றும் கனரக வாகனங்களால் மோதுண்டு உயிரிழந்துள்ளன. காதுகளில் துவாரம் இல்லாததால் அவற்றின் உரிமையாளர்கள் தமது மாடெனத் தெரிந்தும் அதனைப் புதைப்பதற்கு பின்னடித்து உரிமை கோராமல் சென்று விடுகின்றனர். அதனால் உடனடியாக அவை புதைக்கப்படாத நிலையில் பழுதடைந்து துர்நாற்றம் வீசும் நிலையில் பிரதேச சபையினால் புதைக்கப்படுகின்றன. இதனால் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகின் றது.

காளை மாட்டுக்கு துவாரம் இடும் மாடுகளின் உரிமையாளர்கள் பசு மாடுகளுக்கு அடையாளம் இட பின்னடித்து வருகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு மாடுகளை வளர்ப்போர் தம்மிடம் உள்ள அனைத்து மாடுகளையும் இனங்காணும் வகையில் கால்நடை மருத்துவர் அலுவலகத்தில் பதிவ செய்து காதுகளில் துவாரம் இட பிரதேச சபையினரும் சுகாதாரத் திணைக்களத்தினரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-9)

# வடமாகாண கைத்தொழில் கண்காட்சி-2015

யாழ்ப்பாணம், செப்.4

வடமாகாண கைத்தொழில் கண்காட்சி மற்றும் போட்டிகள் இன்றும், நாளையும் யாழ். கந்தர்மடம் சைவ பிரகாச வித்தியாலயத்தில் காலை 8 மணி முதல் இரவ 8 மணி வரை நடைபெறவுள்ளன.

வடக்கு மாகாண தொழில் துறை திணைக்களம் வருடாவருடம் தேசிய அருங்கலைப் பேரவையு டனும், புடவைக் கைத்தொழில் திணைக்களத்துடனும் இணைந்து இந்த போட்டிகளை நடத்தி வரு கின்றது.

முதலாம் நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி .விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட செயலர் நா.வேதநாயகனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இறுதி நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண சபை பிரதம செயலாளர் ஏ.பத்திநாதனும் ,சிறப்பு விருந்தினராக வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பாரம்பரிய கைத்தறி நெசவுப் பொருள்கள், கைவினை பொருள்களின் உற்பத்திச் செயன்முறைகளும் இங்கு காண்பிக்கப்படவுள்ளன. அத்துடன் கைப்பணியாளர்களின் கண்கவர் கைவண்ணங்களை மலி வான விலையில் இங்கு பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு சிறைத் தண்டனை

சாரதிய அனுமதி பத்திரமின்றி மது போதையில் வாகனம் செலுத்திய நபரொருவருக்கு ஒரு மாதகால கட்டாய சிறைதண்டனை வழங்கி உத்தரவிட்டார் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான்.

சாரதி அனுமதிப் பத்திரம் இன்றியும் மது போதையிலும் ஏ-9 வீதியில் வாகனம் செலுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரை நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸார் முற்படுத்தினர்.

வழக்கு விசாரணையின்போது குற்றஞ் சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவருக்கு ஒரு மாதகால கட்டாய சிறை தண்டனையும் 15 ஆயிரம் அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் எம்.ஐ வஹாப்தீன். (ற-21)


காவலாளி தேவை

வீரசிங்கம் மண்டத்திற்கு இரவுக்காவலாளி தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். செயலாளர்,யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை,வீரசிங்கம் கட்டடத்தொகுதி 2 ஆம் மாடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 15.09.2015 இற்கு முன்னதாக சுயமாக விண்ணபத்தைத் தயாரித்து விண்ணப்பிக்கவும்.

021 222 2324 (c 18595 )(12.15) செயலாளர்


# விபத்தில் வயோதிபர் காயம்

வலி.வடக்கு, செப்.4

ஓட்டோ, சைக்கிள் விபத்தை அடுத்து வயோதிபர் ஒருவர் முகத்தில் படுகாயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு சுன்னாகம் எரிபொருள் நிரப்ப நிலையத்துக்கு அண்மையில் காங்கேசன்துறை வீதியில் இந்த விபத்து நடந்துள்ளது.

அளவெட்டி கிழக்கைச் சேர்ந்த செல்லத்துரை அருணாசலம் (வயது-78) என்பவரே காயமடைந்தவராவார்.

கொழும்பில் இருந்து ரயில்மூலம் வந்து பெற்றோல் நிரப்பு நிலையத்தில் விட்டுச் சென்றிருந்த சைக்கிளை எடுத்துக் கொண்டு பிரதான வீதிக்கு வந்த வேளையில் வேகமாக வந்த ஓட்டோ அவரை மோதியது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-86)


CASL Examination

பரீட்சை நிலைய இடமாற்ற அறிவித்தல்

05.09.2015 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் இடம்பெறவிருக்கும் Chartered Accountancy Srilanka இன் பரீட்சை நிலையம் யாழ்ப்பாணம் மங்கையற்கரசி தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து, யாழ்ப்பாணம் சன்மார்க்க மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

மேலதிக விவரங்களுக்கு :

021 492 7456

077 748 7849

(c18590,11,15,16)


# 'நண்பி'குறும்படம் திரையிடல் நிகழ்வு

அண்மையில் வெளியிடப்பட்ட செந்தூரன் மகேந் திரனின் 'நண்பி' குறுந்திரைப்படத்தின் மற்றுமொரு திரையிடல் நிகழ்ச்சி நாளை மறுதினம் , ஞாயிற்று கிழமை , மாலை 4:30 மணிக்கு, சாவகச்சேரி - கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி4)

# திருநாவுக்கரசு ம. கல்லூரிக்கு புதிய அதிபர்

தென்மராட்சி, செப்.4

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அதிபராக நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய அதிபர் க.இரவீந்திரா நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். அவரது இடத்துக்கு சரசாலை வடக்கு ஸ்ரீகணேசா வித்தியாலய அதிபர் திருமதி ச.தர்மகுலசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அதிபராக கடமையாற்றிய வ.நடராஜா சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதையடுத்து வெற்றிடமாகக் காணப்பட்ட அதிபர் பதவிக்கு க.இரவீந்திரா வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலத்தில் ஏற்பட்டுள்ள அதிபர் பதவி வெற்றிடத்திற்கு தென்மராட்சி கல்வி வலயத்தில் கடமையாற்றும் தகைமையுள்ளவர்களிடமிருந்து வலயக் கல்வி அலுவலகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (ற-9)


சுகாதார,சுதேச மருத்துவ,சமூக சேவைகளும் புனர்வாழ்வும் , நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சு- வடமாகாணம்

குறுந்திரைப்படப் போட்டி - 2015

வடமாகாணத்தில் சிறுவர் மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் சமூக பிரச்சினைகள் தொடர்பாக சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய குறுந் திரைப்படங்களை தயாரிப்பதற்கான போட்டிக்கு ஆர்வமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேர்ந்தெடுக்கப்படும் தரமான படைப்புகளுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் மேலதிக விவரங்களை

- அலுவலக நேரங்களில் 021 222 0804 இலக்கத்தில் உதவிச் செயலாளரைத் தொடர்பு கொள்வதன் மூலமும்
- அலுவலக நாள்களில் அமைச்சு அலுவலகத்தில் நேரடியாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

செயலாளர்

சுகாதார,சுதேச மருத்துவ,சமூக சேவைகளும் புனர்வாழ்வும்,நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சு,வ.மா சுகாதாரக் கிராமம், பண்ணை,யாழ்ப்பாணம்.

(C 18591)(12:15)


# வாழைப்பழத்தின் விலை சந்தையில் திடீர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 4

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சந்தைகளில் வாழைப்பழத்தின் விலை, கடந்த சில நாள்களாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

கதலிப் பழம் ஒரு கிலோகிராம் 100 ரூபா தொடக்கம் 130 ரூபா வரையிலும், இதரை 1 கிலோகிராம் 70 ரூபா முதல் 80 ரூபா வரையிலும், கப்பல் ஒரு கிலோகிராம் 140 ரூபாய் முதல் 150 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றன. மருதனார் மடம், திருநெல்வேலி, சங்கானை ஆகிய சந்தைகளி லேயே இவ்வாறு வாழைப்பழங்கள் விற்பனை செய்யப்ப டுகின்றன.

யாழ். மாவட்டத்திலுள்ள ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றதாலும், திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகள் இம்மாதத்தில் அதிகம் இடம்பெறுவதாலும் கதலி வாழைப் பழத்தின் விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

விலை அதிகரித்தமையையடுத்து அதிகளவானோர் கதலி வாழைப்பழ உற்பத்தியில் அதிக நாட்டம் காட்டுகின்றமையால், இதரை உற்பத்தி குறைவடைந்து அதனுடைய விலையும் அதிகரித்துள்ளது என்றும் வியாபாரிகள் கூறுகின்றனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புதிய மைல் கல்லை எட்டிய அப்பிள்


ஸ்மார்ட் கைபேசிகளுக்கு அடுத்தபடியாக ஸ்மார்ட் கைக் கடிகார வடிவமைப்பில் பல்வேறு நிறுவனங்கள் போட்டி போட்டுக் களமிறங்கியுள்ளன. இதில் மொபைல் சாதனங்களை வடிவமைத்து தொழில்நுட்ப உலகில் தனக்கென ஓர் இடத்தைத் தக்க வைத்துள்ள அப்பிள் நிறுவனமும் காலடி பதித்துள்ளது.
இதன் பிரகாரம் அந்த நிறுவனம் இரண்டாவது காலாண்டுப் பகுதியில் சுமார் 3.6 மில்லியன் ஸ்மார்ட் கடிகாரங்களை விற்பனை செய்துள்ளதாக அறிவித்துள்ளது.
எனினும் அப்பிள் நிறுவனத்தினால் இரண்டாவது இடத்தையே பிடிக்க முடிந்துள்ளது. 4.4 மில்லியன் வரையான ஸ்மார்ட் கடிகாரங்களை குறித்த காலப் பகுதியில் விற்பனை செய்த பிஃட்பிட் நிறுவனம் முதலாவது இடத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை– ஐபோன் மற்றும் ஐ பாட் சாதனங்களை விடவும் தமது ஸ்மார்ட் கடிகார விற்பனையில் அதிகரிப்பு காணப்படுவதாக அப்பிள் நிறுவனத்தில் பணிபுரியும் ரிம்குக் என்பவர் தெரிவித்துள்ளார்.

## வேர்ட் லென்ஸ்
### என்னும் வழிகாட்டி நண்பன்

நாம் எங்காவது மொழி தெரியாத ஊர்களுக்குச் சென்றால் விலாசம் கூட கேட்க முடியாமல் திணறிப்போவோம். ஒரு வேளை நாம் செல்ல வேண்டிய இடத்துக்கு எப்படிப் போவது என்று எங்காவது எழுதப்பட்டிருந்தாலும் மொழி தெரியாமல் அலைந்து கொண்டிருப்போம். அப்படிப்பட்டவர்களுக்காக உருவாக்கப்பட்டது தான் வேர்ட் லென்ஸ் (Word Lens).
அமெரிக்காவை சேர்ந்த கியூஸ்ட் விஷுவல் என்ற நிறுவனம் இணைய வசதி இல்லாமலேயே ஒரு மொழியில் உள்ள வாசகங்களை மற்றொரு மொழிக்கு மாற்றும் மென் பொருளைக் கண்டு பிடித்துள்ளது.
எடுத்துக்காட்டாக, நீங்கள் சாலையில் சென்று கொண்டிருக்கிறீர்கள். அப்போது ஒரு பலகையில் இந்தியில் எழுதப்பட்டுள்ளது. அந்த வாசகத்தை நீங்கள் புகைப்படம் எடுத்தால் நீங்கள் விரும்பிய மொழியில் அந்த வாசகத்துக்கு அர்த்தம் கிடைக்கும். இத்தகைய சிறப்புவாய்ந்த இந்த மென்பொருளுக்கு அந்த நிறுவனம் வைத்த




பெயர்தான் வேர்ட் லென்ஸ். இந்தநிலையில் வேர்ட் லென்ஸ் மென் பொருளைத் தங்களுடன் இணைத்துக் கொள்வதற்காக கூகுள் நிறுவனம் கடந்த 2014 ஆம் ஆண்டு மே மாதம் கியூஸ்ட் விஷுவல் நிறுவனத்தை வாங்கியது. பின்னர் தனது கூகுள் மொழிமாற்றி (Google Translate) மென்பொருளில் வேர்ட் லென்சை இணைத்துக் கொண்டு பல்வேறு மொழிகளை இலவசமாக மாற்றிகொள்ளும் வசதியை வாடிக்கையாளர்களுக்குத் தந்தது. முதலில் ஸ்பானிஸ் மொழியில் இருந்து ஆங்கிலத்துக்கும்–ஆங்கிலத்தில் இருந்து ஸ்பானிஸ் மொழிக்கும் மொழி பெயர்க்கும் வகையிலேயே இது வடிவமைக்கப்பட்டது. தற்போது 27 மொழிகளை மொழிபெயர்க்கும் வகையில் இந்த மென்பொருள் மேம்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## நவீன விமானத்தின் டெமோ வெளியீடு

நாஸா நிறுவனம் சாதாரண விமானங்களைக் காட்டிலும் 1000 மடங்கு வேகம் கொண்ட ஹொரிசோன்ஸ் விமானங்களை வடிவமைப்புச் செய்வதில் முனைப்புக் காட்டி வருகின்றது. இந்த நிலையில் கூகுள் நிறுவனத்தைச் சேர்ந்த கிளே பேவர் என்பவர் ஏனைய சாதாரண விமானங்களின் வேகத்துடன் ஹொரிசோன்களின் விமானங்களின் வேகத்தை ஒப்பிட்டு அறியக் கூடிய வகையில் ஜி.ஐ. எவ். கோப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். இதில் போயிங் 747, எஸ்.ஆர்.டி. 71 பிளக் பேர்ட் ஆகிய விமானங்கள் 11,278 மீற்றர்கள் உயரத்தில் பறக்கும்போது காணப்படும் வேகத்துடன் ஹொரிசோன்ஸ் விமானத்தின் வேகம் ஒப்பிடப்பட்டுள்ளது. இதன்படி போயிங் 747 விமானம் மணிக்கு 550 மைல் வேகத்திலும், எஸ்.ஆர்.டி. பிளக் பேர்ட் மணிக்கு 2,700 மைல் வேகத்திலும் பயணிக்கும்போது ஹொரிசோன்ஸ் விமானம், மணிக்கு 36,000 மைல்கள் வேகத்தில் பயணிக்கக்கூடியதாகக் காணப்படுகின்றது. இந்த வேகத்தில் பயணிக்கும்போது சான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து நியூயோர்க்கை 5 நிமிடங்களில் சென்றடைய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# 149ஆவது பொலிஸ் தினம்: மட்டக்களப்பில் நிகழ்வுகள்




மட்டக்களப்பு, செப்.4
'சட்டமும் ஒழுங்கும் தாய்நாட்டின் உயிர் மூச்சு ' எனும் தொனிப் பொருளில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 149ஆவது பொலிஸ் தினம் நேற்று வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் நடத்தப்பட்டது.
பிரதான வைபவம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனை வளாகத்தில் நடைபெற்றது.
மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் யூ.கே.திசாநாயக்கா தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.தங்கேஸ்வரி, சர்வமதத் தலைவர்கள் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.
இதன்போது, மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனைக்கு முன்னால் பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றதுடன், பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோனின் பொலிஸ் தின செய்தியும் வாசிக்கப்பட்டது.
காத்தான்குடி பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த 149 ஆவது பொலிஸ் தின நிகழ்வு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆரியபந்து வெதகெதர தலைமையில் பொலிஸ் கொடி ஏற்றப்பட்டு பொலிஸ் அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது.
அதனைத் தொடர்ந்து இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 149 ஆவது பொலிஸ் தினம் பற்றி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் பொலிசாருக்கு விளக்கமளிக்கப்பட்டது. பொலிஸ் தினத்தை நினைவு கூரும் வகையில் மரங்களும் நடப் பட்டன.
இந்த நிகழ்வில் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆரியபந்து வெதகெதர, காத்தான்குடி பொலிஸ் நிலைய மோட்டார் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி துஷார ஜெயலால்,குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி உட்பட ஆண், பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற–10)

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் சிறப்புற பணியாற்றியவர் அமரர் அமிர்தலிங்கம்

### கல்முனை மாநகரசபையில் அனுதாபப் பிரேரணை நிறைவேற்றம்

அம்பாறை, செப்.4
கல்முனை மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக் காலத்தில் அமரர் அருள்நாயகம் அமிர்தலிங்கம் அந்தப் பதவிக்குப் பெருமை சேர்க்கும் வகையில் சிறப்புற செயலாற்றினார். அவரது மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். –
இவ்வாறு கல்முனை மாநகரசபையின் பதில் மேயரும், முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித்தலைவருமான ஏ.எல். அப்துல் மஜீத் கூறினார்.
கல்முனை மாநகரசபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான அமரர் அருள் நாயகம் அமிர்தலிங்கத்தின் மறைவுக்கு அனுதாபப் பிரேரணை ஒன்றை சபையில் முன்மொழிந்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
கல்முனை மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் சபை சபா மண்டபத்தில் நடைபெற்றபோது பதில் மேயர் அப்துல் மஜீத்தினால் முன்மொழியப்பட்ட இந்த அனுதாபப் பிரேரணை தமிழரசுக்கட்சி உறுப்பினர் எஸ். ஜெயக்குமாரின் வழி மொழிதலுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.
பதில் மேயர் அப்துல் மஜீத் அனுதாபப் பிரேரணையை சபையில் முன்மொழிந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:–
எமது சபையின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து அண்மையில் அமரத்துவம் அடைந்த அருள்நாயகம் அமிர்தலிங்கம் தமது பொறுப்புணர்ந்து மிக நேர்மையுடனும் சிறப்புடனும் செயலாற்றி வந்தார்.
தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரான அமரர் அமிர்தலிங்கம் கொள்கைப் பற்றாளராகவும் அரசியல் பண்பும் முதிர்ச்சியும்மிக்கவராகவும் திகழ்ந்தார்.
தமிழினம் அரசியல் ரீதியாக சமத்துவத்துடன் உரிமை பெற்று வாழ வேண்டும் என்ற இலட்சியவேட்கையுடன் செயற்பட்ட அவர் இந்தப் பிராந்தியத்தில் தமிழ், முஸ்லிம் நல்லுறவுக்காகவும் இன சௌஜன்யத்துக்காகவும் முன்னின்று செயற்பட்ட பெருந்தகையாவார்.
அவரது இழப்பு சபைக்கு மட்டுமன்றி எமது பிரதேசத்துக்கே பேரிழப்பாகும் – என்றார்.
முஸ்லிம் காங்கிரஸ், உறுப்பினர் ஏ.ஏ.பசீர் பிரேரணை மீது உரையாற்றுகையில்,
சமூகம் சார்ந்த விடயங்களில் மிக உறுதியுடன் செயற்பட்டுவந்த அமரர் அமிர்தலிங்கம் சபைமூலம் தமிழ் மக்களுக்கான உரிய பங்குகளைப் பெற்றுக்கொடுப்பதிலும் கரிசனையுடன் செயற்பட்டு வந்தார்.
முஸ்லிம் காங்கிரஸ் கல்முனை மாநகரசபையில் ஆளும் தரப்பாக வந்த சில சமயங்களில் ஏற்பட்ட நெருக்கடியான கால கட்டங்களில் தமது அணியினரின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்றுத்தந்து நிர்வாகத்தை முன்னெடுக்க உதவினார்.
இன்று நல்லதொரு பண்பாளனை, நண்பனை முஸ்லிம் சமூகம் இழந்து நிற்கின்றது – என்றார்.
உறுப்பினர்கள் பலரும் இந்த அனுதாபப் பிரேரணை மீது உரையாற்றியதுடன் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ற–30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குஜராத்தில் படேல் சமூகத்தினர் தங்களை மிகப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கூறி இடஒதுக்கீட்டுக்காக போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டத்தின் விளைவாக, கடைகள் முழு அடைப்பு, கல்வீச்சு, பஸ் எரிப்பு என வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. (ஐ)

# அகதிகளை பிரிட்டனுக்குள் அனுமதியுங்கள்

***ஜேர்மனி, ஆஸ்திரியா நாடுகள் வேண்டுகோள்***

பேர்லின்,செப்.4
அகதிகளைப் பிரிட்டனுக்குள் அனுமதிக்கவில்லை என்றால் ஐரோப்பிய ஒன்றியத்தில் சீர்திருத்தம் மேற்கொள்ள முடியாது என்று ஜேர்மனி மற்றும் ஆஸ்திரியா எச்சரிக்கை விடுத்துள்ளன.

வடக்கு ஆபிரிக்கா மற்றும் சிரியாவில் இருந்து ஏராளமான அகதிகள் ஐரோப்பாவுக்குள் வருகின்றனர். எனினும் பிரிட்டன் அவர்களைச் சிறிதளவு மட்டுமே ஏற்றுக் கொள்வதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் அகதிகளை அதிகளவு பிரிட்டனுக்குள் அனுமதிக்கவில்லை என்றால் ஐரோப்பிய ஒன்றியத்தில் சீர்திருத்தம் மேற்கொள்ள நினைக்கும் பிரிட்டனின் எண்ணம் நிறைவேறாது என்று ஜேர்மனி மற்றும் ஆஸ்திரியா நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பாக ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சல் மேர்கலின் செய்தித் தொடர்பாளர் ஸ்ரீபன் மாயர் கூறியதாவது, அகதிகள் விடயத்தில் தனக்குச் சம்பந்தம் இல்லாதது போல் பிரிட்டன் செயல்படுவது சரியல்ல.

இவ்வாறு அவர்கள் செயல்பட்டால் ஐரோப்பிய ஒன்றியத்தில் சீர்த்திருத்தம் மேற்கொள்ளவேண்டும் என்ற பிரிட்டனின் எண்ணத்தில் பின்னடைவு ஏற்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று ஆஸ்திரியாவின் ஜனாதிபதி வெர்னர் பெமெனன் கூறுகையில், பிரிட்டனுக்கு என்று தனிப்பட்ட அட்டவணை இருந்தால் நாங்கள் ஏன் அவர்களுக்காகக் கஷ்டப்பட வேண்டும். பொறுப்பு என்பது ஒருவருக்கு மட்டும் சொந்தமானதல்ல என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த திங்களன்று இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சல் மெர்கல் பிரிட்டன் குறைந்தது 10 ஆயிரம் அகதிகளையாவது தங்கள் நாட்டில் ஏற்றுகொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 'ஐ.எஸ்'க்கு எதிராக அமெரிக்கா தாக்குதல்

வொஷிங்டன்,செப்.4
உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்க இராணுவம் இரகசியத் தாக்குதலில் இறங்கியுள்ளது. சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக ஆள் இல்லா விமானம் மூலமான இரகசியத் தாக்குதலை அமெரிக்கா தொடங்கியுள்ளதாக வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக மத்திய புலனாய்வு அமைப்பும் சிறப்பு அதிரடிப்படையும் இணைந்து ஏற்கெனவே தாக்குதல் நடத்தி வருகின்றன.



இந்த இரகசியத் தாக்குதல் திட்டத்தின் மூலம் சிரியாவில் ஐ.எஸ். இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் குறிவைக்கப்படுகின்றனர். இதற்காக மத்திய புலனாய்வு அமைப்பு தனது அமெரிக்கப் படைகளையும் ஆளில்லா விமானங்களையும் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து திரும்பப் பெற்றுள்ளது.

இந்த வீரர்கள் அனைவரும் சிரியாவில் தற்போது குவிக்கப்பட்டுள் ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## மொஸ்கோவில் தீ விபத்து; 3000 மக்கள் வெளியேற்றம்

மொஸ்கோ,செப்.4
ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் டொமொடெடோவோ சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்தத் தீ விரைவாகச் சுமார் 15 சதுர மீற்றர் தூரத்துக்குப் பரவியது. இதனால் விமான நிலையப் பாது காப்பு அதிகாரிகள் சுமார் 3ஆயிரம் பயணிகளை உடனடி யாக விமான நிலையத்தில் இருந்து வெளியேற்றினர். 40 இற்கும் மேற்பட்ட விமானங்கள் புறப்படும் நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டது. தீ விபத்து குறித்து அதிகாரி ஒருவர் கூறுகையில், விமான நிலையத்தில் கட்டுமான வேலை நடைபெற்றது. அப்போது இந்தத் தீ விபத்து ஏற் பட்டது எனத் தெரிவித்துள்ளார். தீ விபத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும், வெளியேற்றப்பட்ட பயணிகள் விமான நிலையத்துக்குள் அனு மதிக்கப்படுவார்கள் என்றும் மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது. (ஐ)

## பாகிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு சாவுத் தண்டனை

இஸ்லாமாபாத்,செப்.4
பாகிஸ்தானில் தீவிரவாதிகள் 5 பேருக்கு நேற்று இராணுவ நீதிமன்றம் சாவுத்தண்டனை விதித்துள்ளது. அவர்கள் 5 பேரும் பெண்கள் பாடசாலை ஒன்றில் தாக்குதல் நடத்தியவர்கள். மேலும் பல்வேறு கொலைச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள். பாகிஸ்தானில் கடந்த வருடம் இராணுவ சிப்பாய்களின் பிள்ளைகள் படிக்கும் பாடசாலையில் புகுந்து 150 மாணவர்களை தீவிரவாதிகள் சுட்டு கொன்றனர். இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் தீவிரவாதிகளுக்குக் கடும் தண்டனை வழங்கப்பட்டு வருகிறது. ஏராளமான பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 5 வருடங்களில் காஸாவில் மனிதர்களால் வாழ முடியாது

### ஐ.நா. எச்சரிக்கை

குஜுஸா,செப்.4
மத்திய கிழக்கின் காஸாவில் தற்போதைய கெடுபிடிகள் நீடித்தால் ஐந்து வருடங்களுக்குள் அவ்விடம் மனிதர்கள் வசிக்க முடியாத இடமாக மாறிவிடும் என்று ஐ.நா.வின் புதிய அறிக்கை ஒன்று எச்சரித்துள்ளது. இஸ்ரேல் விதித்துள்ள தடைகள் மற்றும் அண்மைய காலத்தில் அங்கு செய்யப்பட்ட மூன்று இராணுவ நடவடிக்கைகள் காரணமாக காஸாவின் சமூகப் பொருளாதாரக் குறியீடுகள் மோசமாகப் பாதிக்கப் பட்டுள்ளதாக அபிவிருத்தி தொடர்பான ஐ.நா. நிறுவனம் எச்சரித்துள்ளது.



காஸாவை இஸ்ரேல் கைப்பற்றிய கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களில் முன்னெப்போதும் இல்லா[illegible] வில் நிலைமை மோச[illegible] உள்ளதாக அவ்வமைப்பு குறிப்பிட்டுள்ளது. உணவு, உறைவிடம், குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளும் இல்லாமல் காஸாவில் மக்கள் பலர் வாடுவதாகவும், அங்கு வேலையில்லாத திண்டாட்டம் தலை விரித்தாடுவதாகவும், பொருளாதார உற்பத்தி என்று எதுவுமே இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[illegible] தீர்வாக இருக்க முடியாது என அந்த அமைப்புச் சுட்டிக்காட்டுகிறது. (ஐ)

## முட்டையின் மேல்புறத்தில் அல்லாவின் அடையாளம்

அயர்லாந்து,செப்.4
அயர்லாந்தைச் சேர்ந்த இஸ்லாமிய தம்பதியினர் வாங்கிய முட்டையின் மேல்புறத்தில் அல்லா என்ற வார்த்தையின் வடிவம் பதிந்துள்ளது.



அயர்லாந்தைச் சேர்ந்த அனிஷா ஜீசாப்– பாரித் தம்பதியர் வீட்டில் கேக் தயாரிப்பதற்கு திட்டமிட்டனர். அதன் பொருட்டு, கணவர் பாரித் கடைக்கு சென்று 1.0 அமெரிக்க டொலர் கொடுத்து முட்டை வாங்கியுள்ளார். வாங்கிய முட்டையை வீட்டுக்குக் கொண்டு வந்து பார்த்தபோது, முட்டையின் மேல்புறத்தில் அல்லா என அரேபிய எழுத்தின் வடிவம் தெரிந்துள்ளது. இதுகுறித்து அனிஷா கூறியதாவது, இந்த வடிவம் முட்டையில் எவராலும் செதுக்கப்படவில்லை, இந்த அடையாளம் உலக சமாதானத்துக்காக அழைப்பு விடுக்கப்பட்டு இருப்பதாக நாங்கள் உணர்கிறோம் என்றும் உண்மையில் இந்த முட்டை எங்களுக்கு கிடைத்ததால் நாங்கள் அதிர்ஷ்டசாலிகள் எனவும் கூறியுள்ளார். தற் போது இந்த முட்டையை பாதுகாப்பாக ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்திருக்கிறோம், எவர் வேண்டுமானாலும் இதனைப் பார்த்துச் செல்லலாம் எனக் கூறியுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரீஸ் நாட்டுக்குள் அகதிகள் படையெடுப்பு

## இரு நாள்களில் 4,250 பேர் தஞ்சம்

ஏதென்ஸ்,செப்.4
உள்நாட்டுப்போர் நடந்து வரும் சிரியா,ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து ஐரோப்பாவுக்கு அகதிகள் சென்று தஞ்சம் புகுவது அதிகரித்து வருகிறது. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அகதிகள் வந்து குவிவது ஐரோப்பிய நாடுகளுக்கு பெரும் தலைவலியாக அமைந்துள்ளது. இந்த நிலையில், லெஸ்போஸில் இருந்து ஆயிரத்து 749 அகதிகளுடன் ஒரு கப்பல், கிரீஸ் நாட்டின் தலைநகரான ஏதென்ஸ் அருகில் உள்ள பிரேயஸ் துறைமுகத்தை நேற்று முன்தினம் சென்றடைந்தது. அதேபோன்று நேற்று மற்றொரு கப்பலில் 2 ஆயிரத்து 500 அகதிகள் அங்கு சென்றடைந்தனர்.



இதற்கிடையே மத்திய கிழக்குப் பகுதி மக்கள் பலர், ஹங்கேரி நாட்டில் உள்ள ரயில் நிலையம் ஒன்றின் வெளியே தவிப்பதாகவும், அவர்கள் ஐரோப்பிய யூனியனுக்குள் நுழைவதைப் பொலிஸார் தடுத்து விட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன. கடந்த வாரத்தில் மட்டும், கிரீஸ் நாட்டில் 23 ஆயிரம் அகதிகள் குவிந்திருப்பதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. இந்த வருடம் இதுவரை அந்த நாட்டில் ஒரு லட்சத்து 60 ஆயிரம் அகதிகள் குவிந்துள்ளனர். இது தொடர்பாக கிரீஸ் நாட்டின் ஜனாதிபதி புரோகோபிஸ் பாவ்லோபவுலோஸ், பிரான்ஸ் ஜனாதிபதி பிராங் கோயிஸ் ஹாலண்டேயுடன் தொடர்பு கொண்டு பேசினார். அகதிகள் பிரச்சினை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் அளவில் கூடி விவாதிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)



### கர்ப்பிணியைக் கட்டிவைத்து தாக்கிய கிராம மக்கள்

பீஜிங்,செப்.4
சீனாவில் கர்ப்பிணிப் பெண் ஒருவரை கிராமத்தவர் தொலைபேசிக் கம்பத்தில் கட்டி வைத்து தாக்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சீனாவின் தைஷோ நகருக்கு அருகில் உள்ள கிராமத்தில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் நடந்து சென்றுள்ளார். இந்த நிலையில் அந்தப்பெண் இதற்கு முன்னர் அந்தக் கிராமத்தில் திருடியுள்ளதாகவும் தற்போது மீண்டும் திருட வந்துள்ளதாகவும் கிராம மக்கள் சந்தேகப்பட்டனர். கம்பத்தில் கட்டி வைத்துச் சரமாரியாகத் தாக்கியுள்ளனர். மேலும் ஆண் ஒருவர்அவரது முகத்தில் காலால் தாக்கியதில் அவர் மயக்கமடைந்ததாகக் கூறப்படுகிறது. அதன் பின்னர் அங்கிருந்தவர்கள் அவரை மருத்துவமனையில் அனுமதித்தனர். இதற்கிடையே அந்தப் பெண் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டமை உண்மைதான் என்று அந்தப் பகுதியை சேர்ந்த பொலிஸாரும் தெரிவித்துள்ளனர். எனினும் கர்ப்பிணிப் பெண் ஒருவரைக் கம்பத்தில் கட்டி வைத்துக் கொடூரமாகத் தாக்கிய சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

### பொருளாதார சிக்கலில் கனடா

ரொறான்ரோ,செப்.4
கனடா நாட்டின் பொருளாதார வளர்ச்சி மந்த நிலையில் செல்வதாக அண்மைய புள்ளிவிவரங்கள் தெரிவித்துள்ளன. கடந்த ஏப்ரல், ஜூன் ஆகிய மாதங்களுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில், மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 0.5 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. தொடர்ச்சியாக கடந்த இரண்டு காலாண்டுகளாக வீழ்ச்சிப் போக்கைக் கொண்டிருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, முதலாவது காலாண்டில் 0.8 வீத வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை எதிர்கொள்ள கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹார்பருக்கு இந்த வீழ்ச்சி நிலையானது பெரிய நெருக்கடியைத்தோற்றுவிக்கும் எனஎதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

### நெதர்லாந்தில் புதிய முயற்சி

நெதர்லாந்து,செப்.4
பல பரிணாமங்களைக் கொண்டுள்ள புகையிரதப் போக்குவரத்தானது தற்போது மின்சாரத்தில்



இயங்குவது வரைக்கும் முன்னேறியுள்ளது. ஆனால், இதனையும் தாண்டி 100 சதவீதம் காற்றாலைகளைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் சக்தியில் புகையிரதங்களை இயக்க நெதர்லாந்தில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் முதற்கட்டமாக 2018 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 890 கிலோமீற்றர்கள் தூரத்துக்கு காற்றாலையின் உதவியுடன் புகையிரதங்களை இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நெதர்லாந்தில் நாள்தோறும் 1.2 மில்லியன் பயணிகள் புகையிரதம் ஊடாகப் பயணம் செய்வதாகவும், மணித்தியாலத்துக்கு 1.4 ரெறா வாட்ஸ்சில் உருவாக்கப்படும் காற்றலை மின்சக்தி மூலம் இவர்களுக்கான புகையிரதப் பயணங்களை ஒழுங்கு செய்வதனால் 20 சதவீதம் காபனீரொட்சைட் வாயுவின் வெளியேற்றத்தைத் தவிர்க்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



**ஆயிரம் வார்த்தைகளால் சொல்ல முடியாத சோகத்தை வெளிப்படுத்தும் உலகை உலுக்கிய படம்:**
துருக்கியின் கடற்கரைப் பகுதியில் 3 வயது குழந்தை உட்பட பல அகதிகளின் உடல்கள் கரை ஒதுங்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஒரு பெண் உட்பட 5 பேரின் உடல்கள் கரை ஒதுங்கின எனக் கூறப்படுகிறது. இதில் உச்சக்கட்டமாக 3 வயதுக் குழந்தையின் உடலும் கடற்கரையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

## சீன இராணுவத்தில் ஆட்குறைப்பு; ஜனாதிபதி ஜி ஜின்பிங் தகவல்

பீஜிங்,செப்.4
இராணுவப் பலத்தை அதிகரித்துக் கொண்டிருந்த சீனாவில் தற்போது 3 லட்சம் இராணுவ வீரர்களை ஆட்குறைப்பு செய்யப்போவதாக ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார். உலகத்தில் அதிக அளவு மக்கள் தொகையை கொண்ட சீனா பக்கத்து நாடுகளை அச்சுறுத்தும் வகையில் இராணுவத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. ஒவ்வொரு வருடமும் இராணுவத்துக்கென வரவு செலவுத் திட்டத்தில் அதிகப்படியான நிதி ஒதுக் கப்படும். சீன மக்களுக்கு எதிரான [illegible] ஆக்கிரமிப்பு மற்றும் உ[illegible] எதிர்ப்புப் போரில் வெற்றி பெற்ற 70 ஆவது ஆண்டு நினைவு தினம் கொண்




டாடப்பட்டது. அதில் கலந்து கொண்ட ஜனாதிபதி இந்தத் தகவலை வெளியிட்டார். பொருளாதார உயர்வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க இருப்பதாலும், திறமான வீரர்களைக் கொண்டு வலிமையான இராணுவத்தை உருவாக்கும் நோக்கிலும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ நாமத்தின் பெருமை

கலாநிதி. பாலகைலாசநாத சர்மா,
முதுநிலை விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.



வேதத்தின் சாரம்சமாக இருப்பது ஸ்ரீருத்திரம். ஸ்ரீருத்திரத்தில் சங்கர ஸ்வரூபத்துக்கு அடுத்த படியாக சிவஸ்ரூபம் சொல்லப்பட்டிருக்கிறது.

சாதாரணமான சனங்கள் தெரிந்தும் தெரியாமலும் ஜன்மாந்திரங்களில் செய்த பாவத்தைப்போக்க சுலபமான உபாயம் எமது சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறதா? என அறிய முற்படுகின்றார்கள். ஒரே வழிதான் உண்டென்று தெரிகிறது. நாம் சாஸ்திரங்களை நம்புகின்றோம். கோயிலுக்குப் போகின்றோம். மற்ற மதத்தவர்களில் சிலர் உங்கள் மதத்தில் பாவத்தை பரிகரிக்க வழி இல்லை. எங்களிடம் இருக்கிறது. கொஞ்சம் தீர்த்தம் தெளித்தால் பாவம் எல்லாம் போய்விடும். ஆகையால் எங்கள் மதத்துக்கு வாருங்கள் என்று சொல்லுகிறார்கள்.

அதைக் காட்டிலும் சுலபமான மார்க்கம் எமது மதத்தில் இருக்கிறதென்று தெரிந்துகொண்டிருந்தால், கூப்பிடுகிறவர்களைப் பார்த்து, முதலில் எங்களைக் கூப்பிடும் பாவத்துக்குப் பரிகாரம் பண்ணுங்கள் என்று சொல்லுவோம். பாவ, பரிகாரத்துக்கு சுலபமான வழிபாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சுகாசாரியர் ஏழு நாளில் பரீட்சித்துப் பாகவதத்தை உபதேசித்தார். அந்தப் பாகவதத்தில் தாட்சாயணியின் கதை வருகிறது. அதில் மோட்சம் அடைய ஓர் உபாயம் சொல்லப்பட்டிருக்கிறது.

தாட்சாயணி என்பது அம்பிகையின் பெயர். பார்வதியாக வருவதற்கு முன்பு தக்கனுக்குப் புத்திரியாக அம்பிகை அவதரித்தபொழுது தாட்சாயணி எனும் பெயருடையவளாக இருந்தாள். தக்கன் சிவனை நிந்தித்தான். அதனால் அவனுக்குப் பெண்ணாக இருப்பது கூடாதென்று நினைத்து தேகத்தை விட்டு விட்டுப் பார்வதியாக அவதரித்தாள். தக்கன் சிவத் துவேஷம் உடையவனாக இருந்தான். சிவ என்பதற்கு பரமமங்களம் என்று அர்த்தம். பரிமளம் என்று அப்பையதீதர் ஒரு கிரந்தம் (நூல்) எழுதியிருக்கிறார். வாசஸ்பதிமிச்ரர் பாமதி என்று ஒரு கிரந்தம் எழுதியிருக்கிறார். அதனுடைய வியாக்கியானம் கல்பதரு என்பது. அதனுடைய வியாக்கியானம்தான் பரிமளமென்பது. அந்தப் பரிமளத்தை ஒருவர் கண்டனம் செய்தார். அவர் கண்டனம் செய்தாரென்று எவரோ வந்து அப்பையதீதரிடம் சொன்னார்கள். அந்தப் பெரியவர் மூக்கைப் பிடித்துக்கொண்டார். பரிமள கண்டனம் செய்தால் அபரிமளந்தானே உண்டாகும்! அது போல தக்கன் சிவஸ்ரூபத்தைத் துவேசித்தான். சர்வமங்கள மூர்த்தி சிவன். சிவனிடம் துவேசம் வந்தால் அவர்களிடம் அசிவந்தான் இருக்கும். அதாவது அமங்களம் அகல்யாணம் தான் இருக்கும்.

தாட்சாயணி தக்கனைப் பார்த்து என்ன பாவம்! நீ சிவத்துவேசம் பண்ணுகிறாய். உனக்கு அமங்களம்தான் வந்துசேரும் என்று சொல்லுகிறாள். இந்தக் கருத்துப்பட சுலோகத்தின் பின்பாதியில் நல்லது சொல்லி யிருக்கிறது. முன்பாதியில் தக்கன் சமாசாரம்.

இந்தச் சுலோகம் அம்பிகையின் வாக்கியம். எவராவது முற்காலத்தில் உடன்கட்டை ஏறினால் அவர்களுடைய துணியை வைத்து ஆராதனம் செய்வார்கள். அவர்கள் ஆத்ம ஞானியின் நிலையை அடைந்தவர்கள். எல்லாவற்றையும் தியாகம் பண்ணும் சக்தி இருப்பதால் அவர்கள் பூஜிக்கப்படுகிறார்கள்.

அம்பிகை அந்த நிலையிலிருந்து சொன்னது இது. அந்தச் சமயத்தில் சொன்ன சத்தியத்துக்கு விலையேயில்லை. அக்கினி குண்டத்தில் பாதி விரத்தியத்தை காப்பாற்றிக்கொள்ளச் சரீரத் தியாகம் செய்யும் பொழுது சொன்ன வார்த்தையைவிட சத்தியமான வேறு வார்த்தை கிடையாது.

பாவத்தை ஒரே கணத்தில் துவம்சம் பண்ணும் ஒரு வஸ்து உண்டு. அந்த வஸ்துவை பல இடங்களுக்குப் போய்த் தேடவேண்டாம். இரண்டு எழுத்துக்களான பெயர் அது. சகல வேதங்களுக்கும் மத்தியில் இருப்பது அது. அதுவே வேதங்களின் ஜீவரத்தினம். கோயிலில் மகாலிங்கம் போலவும், தேகத்தில் உயிர் போலவும் அது வேதங்களின் மத்தியில் இருக்கிறது. அது என்ன? சிவ எனும் மங்களம் பொருந்திய நாமம். அதை என்ன செய்ய வேண்டும்?– சிவ என்று வாக்கினாற் சொல்ல வேண்டும். யார் சொல்ல வேண்டும்?– மனிதனாகப் பிறந்தவன் சொல்ல வேண்டும். ஊமையாக இல்லாத எவனும் சொல்லலாம். அதைச் சொல்லாவிட்டால் நாக்கினால் செய்யக்கூடியதை இவன் செய்யவில்லை. இவனுக்கு நாக்குக் கொடுத்ததில் பிரயோஜனமில்லை என்று பரமேஸ்வரன் திரும்ப வாங்கிவிடுவான். ஆகையால் எல்லோரும் அதைச் சொல்லியாக வேண்டும். சண்டாளனும் சொல்ல வேண்டும். அந்தளவு தூரம் சிவநாம உச்சாடணம் முக்கியமானதும் பெருமைமிக்கதுமாகும்.

அதை ஒருதரம் சொன்னாற்போதும். கவனமாகச் சொல்ல வேண்டும். வேறொரு காரியத்துக்கு நடுவிலும் சொல்லலாம். சொன்னால் கணத்திலேயே அது பாவத்தைப் போக்கிவிடும்.

இந்த விடயம் பாகவதத்தில் சொல்லியிருப்பது விசேடம். சிவபுராணத்தில் சொல்லப்பட்டிருந்தால் தோத்திரம் என்று சொல்லிவிடலாம். பாகவதத்திலேயே விஷ்ணு தோத்திரம் இருந்தால் அது அவ்வளவு விசேஷமானதல்ல. அதிலும் இது உத்தமத்திலும் உத்தமமான காலத்தில் சொன்னது. சுகாசாரியார் பரீஹித்துக்குச் சொல்லும் சத்தியவாக்கியம்.

பரமேஸ்வரனுடைய கீர்த்தியை நாம் வாக்கினால் சொல்லுவதனாலும், கேட்பதனாலும் பவித்திரர்களாகிறோம். அவருடைய ஆஜ்ஞையை எவரும் மீறமுடியாது. அவரால் எல்லாம் சுற்றுகின்றன. அகம்பாவமாக இருக்கும்பொழுது அவர் சிரிக்கிறார். காளகூட விஷம் பாற்கடலில் உண்டானபொழுது அதைச் சாப்பிட்டு அவர்களை ரட்சித்தார். சகல தேவதைகளும் பரமேஸ்வரனுடைய குழந்தைகள்.

பரமேஸ்வரனை நாம் நேரிற்பார்த்து நமஸ்காரம் செய்யவேண்டாம். அவருடைய நாமமே போதும். எமக்கு நன்றாகத் தெரிந்தது அது. எம்முடைய மதத்தில் பாவபரிகாரத்துக்கு சுலபமான மார்க்கம் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது இந்த நாமஸ்கரணந்தான். பிரதோஷகாலத்தில் இந்த நாமாவைச் சொன்னால் போதும். பெரியவர்கள்–சிஷ்யர்கள் சாயங்காலத்தில் இதைச் சொல்லுவது வழக்கம்.

> பாவ, பரிகாரத்துக்கு சுலபமான வழி பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சுகாசாரியர் ஏழு நாளில் பரீட்சித்துப் பாகவதத்தை உபதேசித்தார். அந்தப் பாகவதத்தில் தாட்சாயணியின் கதை வருகிறது. அதில் மோட்சம் அடைய ஓர் உபாயம் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்பேர்ப்பட்ட சர்வேஸ்வரன் சகல வேத சாஸ்திரங்களின் தாற்பரியமாகிய ஓங்கார ஸ்வரூபமாக இருக்கிறார். ஓங்காரந்தான் எல்லாத் தத்துவங்களுக்கும் முடிவானது.

பரமேஸ்வரன் ஓங்காரம். சர்வரூபப் பிரம்மமும ஓங்காரந்தான். சர்வதேசங்களும் ஓங்காரத்தைச் சொல்லுகின்றன. அதனுடைய அர்த்தத்தை விளங்கும் ஓர் உபநிஷத்தே தனியாக இருக்கிறது. அதற்கு மாண்டுக்யோபநிஷத் என்று பெயர். சிவஸ்ரூபந்தான் பரப்பிரம்மம். சாயங்கால வேளைகளில் சிவத்தியானம் செய்யவேண்டும். பிரதோஷ காலத்தில் ஈசுவர தரிசனம் செய்ய வேண்டும். ஈசுவரன் கோயிலில் பிரதோஷ காலத்தில் எல்லாத் தேவர்களும் வந்து ஈசுவர தரிசனம் செய்கிறார்கள்.

பரமேஸ்வரனுடைய நாமமாகிய சிவ, வேதத்தின் மத்திய ஸ்தானத்தில் இருக்கிறது. சாங்கிய சாஸ்திரத்தில் ஈசுவரன் மூன்று கண்ணுள்ளவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அமரமும் அப்படியே சொல்லுகிறது. லோகத்தில் ஈசுவரன் என்ற பெயர் சிவனுக்கே வழங்கப்படுகிறது.

அவன் மஹாபுருஷன். இவ்வாறு பரமேஸ்வரனுடய நாமத்தின் பெருமை சுருதியில் கர்மகாண்டமாகிய ஸ்ரீ ருத்திரத்திலும், ஞானகாண்டமாகிய மாண்டூக்யோ உபநிடதத்திலும் ஏனைய சூத்திரங்களிலும் புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. பிரம்ம சூத்திரத்தில் சிவ என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஈசானான் என்னும் சப்தத்துக்கு எது அர்த்தமோ அது தான் பரமேஸ்வரரூபம். இவ்வளவுக்கு பரம தாற்பரியமாக ஒன்று இருக்கிறது. அதுதான் இந்த இரண்டு எழுத்து சிவ என்பதையே கொஞ்சம் நீட்டி சிவா என்று சொன்னால் அது அம்பிகையின் பெயராகும் என்று வேதம் சொல்கிறது.

பரமசிவனுக்கு இரண்டு சரீரங்கள் இருக்கின்றன. ஒன்று பரம மங்கள ஸ்வரூபம் மற்றொன்று எலும்பொன்றை அணிந்து கொண்டு ஜடாதாரியாக இருக்கிற ஸ்வரூபம். சர்வமங்கள என்பது அம்பாளின் பெயர்.

அந்த அம்பாள் தான் உயிர். இந்த இரண்டு ஸ்வரூபங்களும் லோகத்தில் எல்லோருக்கும் பிதாவாகவும் மாதாவாகவும் இருக்கின்றன. ஆகையால் நாம் சகலரும் சிவத்தியானம் செய்ய வேண்டும். நல்லகதியை அடைய சுலபமான வழி அதுதான்.

காயத்திரி, அக்னி, ரட்ஷகன் என்னும் மூன்றிலும் பிரகாசிக்கிறது சிவன் தான். காயத்திரியின் பரம தாற்பரியமாயிருப் பவர் அவரே. சூரியனிடத்தில் பிரகாசிப்பவர் அவர் தாம். ரட்சிப்பவரும் அவர்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீருத்திரத்தில் பரமேஸ்வரன் அக்கினி ஸ்வரூபமாகி இருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அடுத்த ஜன்மம் வந்தாலும் சாஸ்திரம் இதுவாக இருக்க வேண்டும்.ஸ்வாமி ஸ்ரீசந்திர மௌலீசுவரராக இருக்க வேண்டும் என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. சிவ என்ற இரண்டு அகரங்களை எப்பொழுது சந்தர்ப்பம் நேர்ந்தாலும் உச்சாடணம் பண்ணிக் கொண்டு இருக்க வேண்டும். எந்த ஜன்மம் வந்தாலும் அதை மறக்காமல் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் ஜன்மமேயில்லாத பரமசாந்த நிலை உண்டாகும்.

தற்போதைய காலம் கலியுகமாகும். கலியுக தர்மத்தில் பஜனையும், நாம சங்கீர்த்தனையும், நமோச்சாரணமும் அவசியம் செய்யப்பட வேண்டுமென சிவ மஹாபுராணமும், விஷ்ணு புராணமும் உறுதியாகக் கூறுகின்றன. குறிப்பாக சிவபூமி எனச் சிறப்பிக்கப்பட்ட இலங்கையில் சிவவழிபாடு மேன்மைப் பட்டுக் காணப்படுகின்றது. சிவனையே எமது சமயக் கடவுளாகவும் உலகின் முழுமுதற் கடவுளாகவும் கொள்ளும் நம்பிக்கை மேலோங்குகின்றது. சிவனை நம்பி சிவ, சிவா என்று எப்போதும் நாமோச்சாடணம் சொல்லும் சைவர்கள் நிலைத்திருக்கிறார்கள். சிவ நாம உச்சாடணமே போதும் என்ற நிலைப்பாடு வழிபாட்டு நெறியில் வளர்ந்து வருகின்றது. வழிபாட்டு முறையில் எல்லோரும் சேர்ந்து சிவ பஜனை, சிவநாமோச்சாரணம், சிவாய நமஹ, நமசிவாய என்று மன அடக்கத்துடன் உச்சரிக்கும்போது அது வலிமைபெற்ற வழிபாடாகிப் பரிணமிக்கின்றது. அத்துடன் சிவவழிபாட்டில் சிவத்தொண்டு செய்தல், ஒழுங்குப்படுத்தல், அடியார்களைப் பேணல், அடியார்களின் நலன் கொள்ளல், அன்னதானமிடல், கல்வி கேள்விகளுக்கு வித்திடல், சமுதாய நலம் பேணல் போன்ற சிவ கைங்கரியமான சிவத்தொண்டுகளும் தற்காலத்தில் மிகவும் அவசியம் வேண்டப்படுகின்றன. இவற்றுக்கு முன்னோடியாகச் செயற்பட்டு வருகின்ற உயர்ந்த சமய அமைப்பாக விளங்குவது அகில இலங்கை இந்து மாமன்றமாகும். இந்து மாமன்றத்தின் ஒரு பகுதியாகக் காணப்படும் சிவதொண்டர் அணியினரும் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு உந்துசக்தியாக இருப்பது மட்டுமன்றி அவற்றை வாழ்வியல் பயன்பாட்டில் நடைமுறைப்படுத்தி எமது இந்து மதத்தின் சிறப்பையும், பெருமையையும் நிலைநாட்டி வருகின்றனர் என்பதையும் தெளிவாகக் காணமுடிகின்றது.

நன்றி :இந்து ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனை மரங்களைக் காப்பாற்றுவதற்கு வெற்றிலைக்கேணியில் எவருமில்லையா?

யாழ்.மாவட்டத்தின் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெற்றிலைக்கேணிக் கிராமம் பனை வளம் கொண்ட கிராமமாக ஒரு காலத்தில் விளங்கியது. எனினும் கடந்த ஒரு வருடகாலமாக பனை மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இப்போது ஊரில் ஒரு மரக்காலை தோன்றி இருப்பதுடன், பல பனை மரங்களும் தொடர்ந்து தறிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தறிக்கப்படும் பனை மரங்கள் அனைத்துக்கும் முறையான அரச அனுமதி பெறப்படுகின்றனவா என்பது தெரியவில்லை. வெளிப்படையாகப் பார்க்கும்போது, அதிகாரிகள் வந்து மரங்களை நேரடியாகப் பார்த்து அவற்றைத் தறிப்பதற்கு அனுமதி வழங்குவதைக் காணமுடியவில்லை. அப்படியே முறையான அனுமதி கொடுக்கப்பட்டால்கூட வியாபார நோக்கத்துடன் ஒரு பிரதேசத்தில் தொடர்ச்சியாகப் பனை மரங்களைத் தறிப்பது சரியானதுதானா என்கிற கேள்வியும் எழுகிறது. ஒரு பக்கத்தில் பனைவளத்தைக் காக்கவேண்டும், அதற்காக பனை விதைகளை நடவேண்டும் என்று கூறப்பட்டுக் கொண்டிருக்கையில் மற்றொரு பக்கத்தில் பயன்தரு பனைகளை அழிப்பதை எப்படி ஏற்றுக்கொள்வது?

அதுமட்டுமன்றி அரச அனுமதியின்றி அரச சாராய விற்பனையும் எமது பகுதியில் அண்மைக் காலமாக அதிகரித்திருக்கிறது. இது தொடர்பாக எத்தனையோ தடவைகள் மருதங்கேணி பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுவந்தபோதும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என் பது கவலையளிக்கிறது.

பனம்பழ சீசன் தற்போது ஆரம்பித்துள்ள நிலையில் பழக்குலைகளுடன் மரங்கள் தறிக்கப்பட்டு வீழ்ந்து கிடப்பது மிகுந்த மனவேதனையளிக்கிறது. எனவே பனை வளத்தைக் காப்பதற்கு உரியவர்கள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு எமது கிராமத்து வளம் பாதுகாக்கப்பட உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*– வெற்றிலைக்கேணி, கிராம மக்கள்.*

## தமிழர்களுக்கு என்ன நன்மை?

எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் நியமிக்கப்பட்டுவிட்டார். பௌத்த சிங்களப் பேரினவாதிகளில் ஒரு தரப்பினர் எதிர்ப்பலைகளை வெளியிட்டு வந்தபோதும், சில முற்போக்குச் சிங்களச் சக்திகள் சேர்ந்து அவரை எதிர்க்கட்சித் தலைவராக்கிவிட்டன. இது நல்லதுதான். சிறப்பானதுதான். சிங்களத் தலைமைகளிடம் ஏற்பட்டிருக்கக் கூடிய சில மாற்றங்களை உணர்த்துவதாகத்தான் இருக்கின்றது.

ஆனால், சிங்களத் தலைமைகளிடம் ஏற்பட்ட மன மாற்றம் என்பதற்கு அப்பால் இந்தப் பதவியால் தமிழர்களுக்கு என்ன நன்மை விளைந்துவிடப்போகின்றது? இது பற்றி சிங்களத் தலைமைகளும் ஏதும் சொல்லவில்லை. தமிழ்த் தலைமைகளும் வாயைத் திறக்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்பது தொடர்பில் கூட்டமைப்புக்குள்ளேயே கருத்து முரண்கள் நிலவுகின்றன என்பது வேறுவிடயம். இருந்தாலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியையும் ஏற்றுக்கொண்டதன் மூலம் தமிழர்களுக்கு ஏற்படப்போகும் நன்மைகளைப் பற்றிக் கூட்டமைப்புத் தலைமை மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும்.

அந்தப் பதவிகளைத் தாம் ஏற்றுக்கொண்டதன் பின்னணி பற்றியும் விளக்கவேண்டும். இல்லையேல் கூட்டமைப்பின் இந்த நகர்வுகளை விமர்சிப்போரின் பின்னாலேயே மக்கள் திரள்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

கண்ணன்,
பருத்தித்துறை.




### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## இனவாதிகளை இனியும் விட்டுவைக்கக்கூடாது

பிவித்துறு ஹெல உறுமயவின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில நாடாளுமன்றத்தில் இனவாதம் பேசியபோது நன்றாக வாங்கிக் கட்டிக்கொண்டார். அவரது உரையை இடைமறித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆட்சேபனை தெரிவித்தார். ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூச்சலிட்டு உதய கம்மன்பிலவுக்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். உதய கம்மன்பிலவுக்கு ஆதரவாக அவரது சகாக்களான மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட வாய்திறக்க வில்லை. வேறு வழியின்றிப் பேச்சை முடித்துக்கொண்டு உதய கம்மன்பில தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. இனவாதம் பேசிய ஒருவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கூச்சல் எழுப்பப்பட்டிருக்கிறது. இலங்கை அரசியலில் இது ஓர் ஆரோக்கியமான திருப்பமாகும். அதேசமயம் எதிரணியில் உள்ளவர்களுக்கும், மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இது ஒரு பாட மாக அமையவேண்டும்.

ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தலிலும், ஒகஸ்ட் 17 பொதுத் தேர்தலிலும் மஹிந்த தோல்வி அடைந்ததற்கான காரணம் வெளிப்படையானது. ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்து தனது சொந்த ஊருக்குச் சென்று தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தனது தோல்விக்குத் தமிழ், முஸ்லிம் வாக்காளர்கள்தான் காரணம் என்பதை மஹிந்த பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருந்தார். மஹிந்த அரசின் தமிழர் விரோதப் போக்கு காரணமாகவும், பொது பலசேனாவின் முஸ்லிம் விரோத நடவடிக்கைகள் காரணமாகவும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் - முஸ்லிம் சிறுபான்மை மக்களின் வாக்குகளை மஹிந்த இழந்தார். இது ஒரு பாடமாக இருக்கும் என்றே நாம் எதிர்பார்த்தோம். மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருந்துவார்கள் என்றே எதிர்பார்த்தோம். ஆனால் கடந்த பொதுத் தேர்தல் பிரசாரத்தின்போதும், இவர்களது ஆயுதம் மீண்டும் இனவாதமாகத்தான் இருந்தது. ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தபோதிலும், இனவாதத்தை இவர்கள் கைவிடத் தயாராக இருக்கவில்லை. சிங்கள பௌத்த வாக்கு வங்கியை முழுமையாக நம்பிக் களமிறங்கினர். ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதற்கு எத்தகைய யுக்திகளைப் பயன்படுத்தினார்களோ அதே யுக்திகளையே பொதுத் தேர்தலிலும் பயன்படுத்தினர். மாற்ற முயற்சிக்கவில்லை. தற்பொழுது அதிலும் தோல்வியடைந்து எதிர்க்கட்சி வரிசைக்குச் சென்றுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடாத வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் சிறுபான்மை தமிழ்-முஸ்லிம் வாக்குகளை இழந்ததே மஹிந்த தரப்பினரின் பொதுத் தேர்தல் தோல்விக்கும் காரணமாகும்.

இப்படியான நிலையில்தான் நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வில் கன்னியுரை ஆற்றுகையில் இனவாதத்தைக் கக்கி அரச தரப்பிடம் நன்கு வாங்கிக் கட்டிக்கொண்டுள்ளார் உதய கம்மன்பில. கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கையின் எட்டாவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு இடம்பெற்றது. சபாநாயகரின் தெரிவைத் தொடர்ந்து கட்சித் தலைவர்கள் தமது கருத்தைத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதாவது சபாநாயகர் தெரிவு குறித்து கருத்துத் தெரிவிக்கவே சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இனவாதம் பேச அல்ல. ஆனால், இனவாதம் கக்கினார் உதய கம்மன்பில. ஆயுதம் தூக்கிப் போராடியவர்கள் அதன் மூலம் சாதிக்க முடியாததை சமஷ்டி முறையிலும், அரசியல் ரீதியாகவும், சட்டத் திருத்தங்கள் ஊடாகவும் சாதித்துக்கொள்ள நாடாளுமன்றம் வந்துள்ளனர் என்று கூறினார். பிரிவினையை நிராகரித்து ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வை வலியுறுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே இவர் குறிவைத்துத் தாக்கியுள்ளார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கான அரிய வாய்ப்பு தற்பொழுது உருவாகியுள்ளது. இதனைக் குழப்புவதற்கு இனவாதிகள் முயற்சிக்கிறார்கள். மைத்திரி - ரணில் தலைமையிலான இந்த அரசு இனவாதிகளை இனியும் விட்டுவைக்காமல் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ரணில் - சிறிசேன தேசிய அரசு புதிய வரலாற்றுக்கு வழிகோலுமா?

உண்மையாக ஒன்றுபட்ட இலங்கை நாட்டைக் கட்டி எழுப்புவதற்கான செயற்பாடுகளுக்குரிய சட்டங்களை இயற்றுவதும் அவ்வாறான தீர்மானங்களை எடுப்பதும் நாடாளுமன்றத்திலுள்ள உறுப்பினர்களின் பொறுப்பாக இருக்க வேண்டும் என்று நேற்று முன்தினம் புதிய நாடாளுமன்ற அமர்வை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டிருந்தார்.

முப்பது வருட கால போர் முடிந்த நிலையில் நாட்டின் சகல சமூகங்களுக்கிடையிலும் நல்லிணக்கம் ஒன்று கட்டியெழுப்பப்படாமையின் காரணமாகவே இவ்வாறான ஒரு கருத்தை அவர் தெரிவிக்க வேண்டி ஏற்பட்டது.

போரின் உச்சமான கொடூரத்தை நிதர்சனமாகவே அனுபவித்து நொந்துபோன மக்கள் தொடர்பில் எந்த வித அக்கறையோ அனுதாபமோ காட்டாது, தாம் போரில் வென்றுவிட்டதாகத் தம்பட்டம் அடிப்பதிலும், உள்ளூரில் தங்கள் தரப்பினை உயர்த்திக் கொள்ளவும் எடுக்கப்பட்ட முயற்சிகள், நாட்டு மக்கள் மத்தியில் நல்லுறவையோ நல்லிணக்கத்தையோ ஏற்படுத்துவதற்கு உரிய முறையில் திசை திருப்பப்படவில்லை. மாறாக தமிழர் தரப்பினரை பல்வேறு வகையிலும் ஓரம் கட்டுவதோடு அச்ச உணர்வை வளர்த்து நிரந்தரமாகவே அடக்குமுறைக்குள் வைத்திருக்கும் எத்தனங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன் ஒரு பகுதியே வடக்கு கிழக்கில் இராணுவத்தை இடம் விடாமல் நிலை நிறுத்தியிருந்தமையும் அவர்கள் தயவிலேயே மக்கள் தமது அன்றாடக் கடமைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ளும் படி செய்யப்பட்டிருந்தமையும் எனலாம். இராணுவ புலனாய்வாளர்கள் அரசியல் செயற்பாடுகளில் தலையிட்டு குழப்பியமை மட்டுமல்லாது ஊடக நிறுவனங்களும் கூட அந்த நிட்டூரக் கொடுமைகளை அனுபவிக்க நேர்ந்தது.

இடம்பெயர்ந்தவர்கள், போரில் உறவுகள், உடல் உறுப்புகள், உடைமைகளை இழந்தவர்கள் என்று அந்தக் கொடுமையின் அடையாளங்களைச் சுமந்து கொண்டு மக்கள் வாழ்ந்த நிலையில்தான் தெய்வாதீனமாக ஜனாதிபதித் தேர்தலும், இப்போது பொதுத் தேர்தலும் நடந்து முடிந்துள்ளன. அதன் பயனாக தேசிய அரசொன்று இன்று பதவியேற்றுள்ளது. இவ்வாறானதொரு மாற்றத்துக்குக் காரணமாய் இருந்துள்ள சிறுபான்மையினர் தமக்கு இந்த அரசின் மூலமாகுதல் நியாயம் கிடைக்குமா, நீதி நிலை நாட்டப்படுமா என்று ஏங்கி நிற்கிறார்கள்.

போர் ஓய்ந்த பின்னரும் பெரும்பான்மையினரின் உணர்ச்சிகளை இனம், மதம் வாயிலாகத் தூண்டி பயன் பெற்றுக் கொண்டவர்கள், அதனை இன்னமும் கைவிட முடியாமல் தவிக்கிறார்கள்.

எதுவானாலும் நாட்டில் நல்லாட்சியொன்றை உருவாக்க ஜனாதிபதிக்கு மக்கள் அளித்த ஆணையின் மூலம் இப்போது நாட்டின் இரண்டு பெரும் கட்சிகள் இணைந்த தேசிய ஒற்றுமைக்கான அரசொன்று நிறுவப்பட்டிருப் பதும், அதன் மூலம் புதிய தேசம் ஒன்றைக் கட்டியெழுப்ப அவர்கள் உறுதி பூண்டிருப்பதும் ஜனாதிபதியின் உரையின் மூலம் புலப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே நடைமுறையில் இந்த ஆட்சியிருக்கும் என்பதால் அந்தக் கால அவகாசத்தில் புரையோடிப் போய்க் கிடக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு சகலரும் ஏற்றுக் கொள்ளும் விதத் தில், குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகள் நிறை வேறும் விதத்தில் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் என்று எதிர் பார்ப்பதில் நியாயமுண்டு. அந்த வகையிலேயே ஜனாதி பதியின் உரையும் கோடி காட்டுவதாக இருக்கின்றது.

நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் தேர்தல் முறைமையை மாற்றி அமைக்கும் நோக்கில், ஏற்கனவே நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 20 ஆவது திருத் தத்தை அடிப்படையாகக் கொண்டு விருப்பு வாக்களிப்பு நடை முறையை ஒழிப்பது இந்த அரசின் முதல் முக்கிய பணிகளில் ஒன்றாக இருக்கும் என்றும் ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

தேர்தல் முறை மாற்றமுறும்போது இப்போதைய நேரடி வாக்களிப்பு மற்றும் விகிதாசார வாக்களிப்பு என்ற வகையில் ஒரு கலப்புத்தேர்தல் முறைபற்றி ஏற்கனவே கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. விருப்பு வாக்கு என்பது கட்சி வேட்பாளர்களுக்கு இடையிலேயே போட்டி பொறாமைகளைத் தோற்றுவிக்கவும், மோதல்களுக்கு வழிவகுக்கவும் காரணமாய் இருப்பதாகப் பலரும் கருதுகிறார்கள். எதுவாக இருந்தாலும் சிறிய கட்சிகளும் சிறுபான்மைக் கட்சிகளும் புதிய தேர்தல் முறையினால் பாதிப்புக்குள்ளாகாமல் இருக்க வேண்டும். அந்த வகையில் சகலருக்கும் ஏற்புடைய வகையில் தேர்தல் முறை மாற்றங்கள் அமையுமெனில், அது வரவேற்கத்தக்கதே.

நாட்டின் நலன் கருதியும், நாட்டு மக்களின் நல்லிணக்கத்தை நோக்கியும் நல்ல பல திட்டங்களும் சட்டங்களும் இப்போதைய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கான வாய்ப்புக்கள் இப்போது பிரகாசமடைந்துள்ளன. அந்த வகையில் புதிய அரசும், நாடாளுமன்றமும் ஒரு புதிய சகாப்தத்தை - ஒரு புதிய வரலாற்றைத் தோற்றுவிக்கும் என்று எதிர்பார்க்கலாமா? பொறுத்திருந்து பார்ப்போம்.



# கூட்டமைப்பினரின் ஒற்றுமையே தமிழர்களுக்கு வழி காட்டும்

● சாம் ரமேஸ்குமார்.

> கடவுளை அடைவதற்குத்தான் மூன்று விநாடியே ஒழிய, சாதாரணமான தமிழர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒரு விநாடியே போதுமானது. கூட்டமைப்பினர் முயற்சி செய்வார்களா?

மிகவும் பழமையான, தமிழர்களின் பாரம்பரியத்தைக் கொண்ட கட்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சி விளங்குகிறது. அது பல தளங்களைத் தாண்டி வந்தாலும், இறைவனிட்ட காலத்தின் சுழற்சியால், கடந்த 2001 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் புதிய தோர் வடிவம் எடுத்தது. அதன் நீட்சியாக 2001 ஆம் ஆண்டில் இருந்து 2015 ஓகஸ்ட் 17 வரை நான்கு நாடாளுமன்றத் தேர்தல்களைச் சந்தித்து, வடக்குகிழக்கு தமிழர்களின் வெற்றியையும், பலத்தையும் சர்வதேசத்துக்கு விளக்கும் குறியீடாக இருந்து வருகின்றது.

தமிழர்களின் உரிமைப் போராட்டம் மூன்று தசாப்த காலமாக ஆயுத பலத்துடன் பயணித்த போது, சர்வதேசத்தின் ஆதரவுடன் இலங்கை அரசால் 2009 ஆம் ஆண்டு அந்தப் போராட்டம் முற்றாகத் துடைத்து அழிக்கப்பட்டது. போர் 2009 ஆம் ஆண்டு இறுதித் தறுவாயை நெருங்குவதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உதயமாகியது. ஜனநாயகமா...? போராட்டமா...? என்று தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே கேட்கின்றபோது ஜனநாயகமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குறியீடாக எஞ்சி நிற்கின்றது.

இங்கு நாம் மிகவும் ஆழ்ந்து கவனிக்க வேண்டியது, மகாபாரதத்தில் பாண்டவர்கள் அமைதி வழியில் தங்கள் உரிமைகளைக் கௌரவர்களிடம் கோரி நின்றார்கள். ஆனால் கௌரவர்களோ ஐந்து வீட்டைத் தானும் பாண்டவர்களுக்குக் கொடுக்க மறுத்தார்கள். அகிம்சையே வடிவெடுத்த பாண்டவர்கள் ஒரு போதும் போரை விரும்பியதில்லை. காலத்தின் கட்டளையால் தர்மத்தை நிலை நாட்டுவதற்காக, இறைவனாகிய கிருஸ்ணனால், பாண்டவர்கள் போர்க் களத்துக்குள் வரவழைக்கப்பட்டார்கள். இந்தச் சம்பவம் அமைதியில் இருந்து போரை நோக்கி நகர்கின்றது.

ஆனால் தமிழர்கள் ஆரம்பத்திலிருந்தே தந்தை செல்வாவின் காலத்தில் அமைதி வழியில் போராடினார்கள். பின்பு வடக்கு, கிழக்கில் பல விடுதலை அமைப்புக்கள் எழுச்சி கொண்டன. அவர்கள் தமிழர் உரிமைக்காக ஆயுத வழியில் போராடினார்கள். இறுதியில் எஞ்சி நின்றது பலம் வாய்ந்த அமைப்பொன்றே. அதன் பலமும் முற்றாக 2009ஆம் ஆண்டு மழுங்கடிக்கப்பட்ட பின்னர் மீண்டும் அமைதி வழியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் உரிமைக்காகக் குரல் கொடுக்கின்றது. முதலில் அமைதி வழியில், பின்னர் ஆயுத வழியில், அதன் பின்பு அமைதி வழியில் என தமிழர்களின் உரிமைப் போராட்டம் நகர்கின்றது. இதில் மகாபாரத பாண்டவர்களுக்கும், தமிழர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், பாண்டவர்கள் போர் வழியில் விடுதலை பெற்றார்கள். தமிழர்கள் அகிம்சை வழியில் ஒரு நிரந்தரமான தீர்வை நிச்சயம் பெறுவார்கள். இதுவே இறையியலின் விருப்பமாகவும் உள்ளது. அதற்கான காலம் தற்சமயம் கனிந்துள்ளது. பாண்டவர்களின் பிரச்சினையும் தமிழர்களின் பிரச்சினையும் ஒன்றே.

இலங்கை சிவபூமி என்பதால் தற்போதைய அமைதி நீடித்து நிலைக்கும் என்பதே எல்லோரின் எதிர்பார்ப்பாகும். ஏனெனில் நல்லாட்சியின் கதாநாயகனாக, இந்த ஆண்டின் ஜனவரி 8ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரகாசிக்கத் தொடங்கி விட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூட, மைத்திரிபால சிறிசேன ஒரு சிறந்த ஜனநாயகவாதி என்று பாராட்டியுள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராஜதந் திரத்துடனும், விவேகத்துடனும் கையாண்டு தமிழர் உரிமையை வென்றெடுக்க வேண்டும் என்பதே தமிழர்களின் விருப்பமாகவுள்ளது.

கடந்த ஆகஸ்ட் 17ஆம் திகதி நடந்த எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களைப் பெற்று வடக்கு, கிழக்கில் வெற்றி வாகை சூடியது. இந்த வெற்றி உதட்டளவோடு மட்டும் நில்லாது, உள்ளன்போடும் தமிழர் விடிவுக்காய் பாடுபட 16 தமிழ் பிரதிநிதிகளும் முன்வர வேண்டும். அரசியல்வாதியாக இருந்தாலும் சரி, ஆன்மிகவாதியாக இருந்தாலும் சரி அவர்களின் எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றுக்கும் ஒற்றுமை இருக்க வேண்டும். இவை மூன்றும் இல்லாவிடில், ஆன்மிகவாதிக்கு அகநாசமும், அரசியல்வாதிக்கு புறநாசமும் ஏற்பட்டு விடும் என்பதற்குச் சிறந்த உதாரணம் அண்மையில் இரண்டு தடவை தோல்வியுற்ற மகிந்த ராஜபக்ச ஒருவரே. மாபெரும் மகானாகிய இராமகிருஸ்ண பரமஹம்சர் கூறுகிறார் நீ மூன்று விநாடி உன் மனதளவில் பரிசுத்தமாக இருந்தால், நீ கடவுளை நிச்சயம் காணலாம் என்று. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒரே ஒரு விநாடி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டுமென்று மனதளவில் ஒற்றுமையாய் இருந்து, பரிசுத்தமாய் நினைத்தால் நிச்சயமாக ஒரு நிரந்தரமான தீர்வை எட்டிவிடலாம். கடவுளை அடைவதற்குத்தான் மூன்று விநாடியே ஒழிய, சாதாரணமான தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு விநாடியே போதுமானது. கூட்டமைப்பினர் முயற்சி செய்வார்களாயின் இது சாத்தியமே.

ஒற்றுமையே பலம். அதுவே தவம். என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உணரத் தலைப்பட்டால் தமிழ் மக்களுடைய விடுதலைச்சூரியனின் எழுச்சி வெகு தொலைவில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.ஈழத்தமிழ்மணி



# திருகோணமலையில் அரசியல் அதிகாரங்களை இழந்துவிடப்போகிறார்களா தமிழர்கள்?

வடக்கு, கிழக்கின் பிரதானமான மாவட்டமாகவும் தமிழ் மக்களின் தாயகத் தலைநகரமெனத் தமிழ் அரசியல் தலைமைகளினால் வர்ணிக்கப்படுவதுமான திருகோணமலை மாவட்டத்தின் அரசியல் ரீதியான பிரதிநிதித்துவங்கள் தமிழர்களால் இழக்கப்பட்டு வருகின்றமை மிகவும் வேதனையான விடயமாக மாறி விட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இரண்டு தொகுதிகளில் 1970 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் தமிழர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களா கத் தெரிவு செய்யப்பட்டனர். திருகோணமலைத் தொகுதியிலிருந்து ஒருவரும், மூதூர்த் தொகுதியிலிருந்து ஒருவருமாக இரண்டு பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் தமிழ் மக்களைப் பாதிக்கக் கூடியவாறு எதிர்பாராத மாறுதல்கள் ஏற்பட்டன. முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவத்தையும் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தையும் உறுதிப்படுத்துகின்ற வகையில் உருவாக்கப்பட்ட மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதி சிங்கள அரசினால் திட்டமிட்டுப் பிரிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கென சேருவில தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது.

சிறிமாவோ அரசின் இறுதிப் பதவிக் காலத்தில் அரசினால் கொண்டு வரப்பட்ட புதிய தேர்தல் தொகுதி நிர்ணய அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் மூன்று இன மக்களுக்கும் மூன்று தொகுதிகள் அமையவேண்டுமென அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவரான காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதியுமான ஜே.ஆர். ஜெயவர்த்தனா தேர்தல் நிர்ணய கமிஷன் முன்பு எடுத்துரைத்திருந்தார். இதனை அன்றைய காலகட்டத்தில் தமிழ் தலைமையும் அங்கீகரித்திருந்தது. வன்னியில் முல்லைத்தீவு தேர்தல் தொகுதி வேண்டுமென்ற கோரிக்கையை அடிப்படையாக வைத்து தமிழ்த் தலைமை கேட்டுக் கொண்டதன் பயனாக சேருவில தொகுதியை சிங்கள மக்களுக்காக விட்டுக்கொடுத்து விட்டு தமிழ்த் தலைமையானது முல்லைத்தீவு தொகுதியைப் பெற்றுக்கொண்டது.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த வேட்பாளரான லீலாரட்ண என்பவர் போட்டியிட்டு வெற்றியீட்டினார். ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 1977 ஆம் ஆண்டில் திருகோணமலை மாவட்டத்தில் மூன்று இனங்களுக்கான மூன்று தேர்தல் தொகுதிகளையும் ரி.எம்.எஸ்ஸாக வர்ணித்திருந்தார். திருகோணமலைத் தொகுதிக்கான தமிழர் பிரதிநிதித்துவத்தை 'ரி' யாகவும் மூதூர் தொகுதிக்கான முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை 'எம்' மாகவும் சேருவில தொகுதிக்கான சிங்களப் பிரதிநிதித்துவத்தை 'எஸ்' ஆகவும் வர்ணித்து அவர் பெருமைப்பட்டுக் கொண்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் சேருவில தேர்தல் தொகுதி சிங்கள மக்களுக்காக உருவாக்கப்படுகின்றபோது அந்தப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்கின்ற சந்தர்ப்பத்தை இழக்கின் றார்கள் எனத் தமிழர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கு சிறிமாவோ அரசு செவிசாய்க்கவேயில்லை. மூதூர் தொகுதியிலும் சேருவில தொகுதியிலும் பாரம்பரியமாக வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் பேசும் மக்கள் தனிமைப்படுத்தப் பட்டார்கள். அவர்களின் அரசியல் உரிமைகள் அந்நியப்படுத்தப்பட்டன.

1977 ஆம் ஆண்டு மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதி பிரிக்கப்பட்ட போது மூதூர், சேருவல தொகுதிகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள 65க்கு மேற்பட்ட தமிழ்க்கிராம மக்கள் தங்களுக்குரிய நாடாளுமன்ற உறுப்பினரை தெரிவு செய்கின்ற வாய்ப்பை இழந்துள்ளனர். 1970 ஆம் ஆண்டு தொடக்கம் 1977 ஆம் ஆண்டுவரை மூதூர் தொகுதியின் இரண்டாவது நாடாளுமன்ற உறுப்பினராக காலஞ்சென்ற அ.தங்கதுரை இருந்துள்ளார்.

1989 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்த சுயேச்சைக்குழு மூன்று தேர்தல் தொகுதியில் ஓர் ஆசனத்தையும் போனசாக மற்றுமொரு ஆசனத்தையும் சேர்த்து இரண்டைப் பெற்றிருந்தது. 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி போட்டியிட்டு தமிழர் பிரதிநிதித்துவம் ஒன்றைப் பெற்றுக்கொண்டது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் உட்பட நான்கு தமிழ்க் கட்சிகளுக்கும் மக்கள் அளித்த வாக்குகளை ஒன்று சேர்த்து பார்க்கின்றபோதும் தமிழ் மக்களின் வாக்குகள் குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் இரா.சம்பந்தன் போட்டியிடாததும் தமிழ் மக்களுக்கான பிரதிநிதித்துவத்தை இழப்பதற்குக் ,காரணமாக இருந்தது எனலாம்.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளரான சம்பந்தன் வெற்றியீட்டியிருந்தார். தமிழருக்கான ஒரு பிரதிநிதித்துவம் திருகோணமலை மாவட்டத்தில் கிடைத்திருந்தது. 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் மட்டும் தமிழரசுக்கட்சி போட்டியிட்டபோது இரண்டு பிரதிநிதிகளைத் தமிழ் மக்கள் தெரிவு செய்திருந்தனர்.

இந்தத் தேர்தலில் இரா. சம்பந்தன் 47,735 விருப்புவாக்குகளைப் பெற்று முதலாவது பிரதிநிதியாகவும் க.துரைரட்ணசிங்கம் 34,773 விருப்புவாக்குகளைப் பெற்று இரண்டாவது பிரதிநிதியாகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். 2004 ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட வாக்கு வீதத்தை விட 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர்களின் வாக்குப் பதிவு வீழ்ச்சியடைந்ததன் காரணமாகவே போனஸ் ஆசனத்தை வேறொரு கட்சியான ஐக்கியதேசியக் கட்சிக்கு பறிகொடுக்க வேண்டிய நிலையேற்பட்டது. இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராகப் போட்டியிட்ட இரா.சம்பந்தன் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருந்தார். இவருக்குக் கிடைத்த விருப்புவாக்குகள் 24,488ஆகும். திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு 33,268 வாக்காளர்கள் மட்டுமே வாக்களித்திருந்தனர். 2010 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிப்பதில் அக்கறையற்று இருந்தமையினால் ஒரு பிரதிநிதித்துவத்தை மட்டுமே பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றாவது இடத்துக்குதள்ளப்பட்டது வரலாற்றில் தமிழ் மக்கள் செய்த மாபெரும் தவறு ஆகும்.

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஈரோஸ் அமைப்பு முதலாவது இடத்திலும் இரண்டு பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொண்ட நிலையில் 1994 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி இரண்டாவது இடத்தில் ஒரு பிரதிநிதித்துவத்தையும் 2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி மூன்றாவது இடத்தில் தள்ளப்பட்டு ஒரு பிரதிநிதித்துவத்தைத் தானும் பெறமுடியாமல் தோல்வியைத் தமிழர்கள் பெற்றுக் கொண்டனர். சிறிலங்கா சுதந்திரக்கட்சி, முஸ்லிம் காங்கிரஸ்கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து போட்டியிட்டதில் போனஸ் ஆசனம் உட்பட மூன்று ஆசனங்கள் அதற்குக் கிடைத்தன.

கடந்த பொதுத்தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போனஸ் ஆசனத்துடன் இரண்டு ஆசனங்களைப் பெற்றது. அதைப் போன்றதொரு

> **1989 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்த சுயேச்சைக்குழு மூன்று தேர்தல் தொகுதியிவ் ஒரு ஆசனத்தையும் போனசாக மற்றுமொரு ஆசனத்தையும் சேர்த்து இரண்டைப் பெற்றிருந்தது. 1994 ஆம் ஆண்டு நடை பெற்ற பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி போட்டியிட்டு தமிழர் பிரதிநிதித்துவம் ஒன்றைப் பெற்றுக்கொண்டது. திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, இலங் கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் உட்பட நான்கு தமிழ்க் கட்சிகளுக்கும் மக் கள் அளித்த வாக்குகளை ஒன்று சேர்த்து பார்க்கின்றபோதும் தமிழ் மக்களின் வாக்குகள் குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்தன.**

வாய்ப்பை இந்த முறை தமிழர்கள் தவறவிட்டுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இரண்டு ஆசனங்கள் கிடைப்பதற்கு 2004 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது காட்டிய ஒற்றுமையைக் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் காட்டியிருந்தால் போனஸ் ஆசனத்தை பெறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும். 2004 இல் பொதுத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான துரைரட்ணசிங்கமும் இந்த முறை போட்டியிட்டிருந்தார். திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 45,894 வாக்குகளைப் பெற்றிருந்தது. ஆனால் போதிய வாக்குகள் கிடைக்கப் பெறாமையால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு போனஸ் ஆசனம் உட்பட இரண்டு ஆசனங்கள் கிடைத்தன. தமிழ் மக்கள் அதிகளவில் வாக்களித்திருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டு ஆசனங்களைப் பெற்றுக் கொண்டிருக்க முடியும். தமிழர்கள் இந்த முறையும் அதே தவறைச் செய்துள்ளனர்.

திருகோணமலை தமிழர் பாரம்பரியம் கொண்ட பிரதேசமாகும். சிங்களக் குடியேற்றங்களால் பல்லின கலாசாரங்களைக் கொண்ட பிரதேசமாக கடந்த 50 வருடங்களாக மாற்றப்பட்டு வருகிறது திருகோணமலை மாவட்டத்திலுள்ள நகராட்சி மன்றம் மற்றும் பிரதேசசபைகளில் சிங்கள, முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவங்கள் ஒவ்வொரு தேர்தல்களிலும் அதிகரித்துக் கர்ணப்படுகின்றன. தமிழ் மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதித்துவங்களில் வீழ்ச்சியேற்பட்டு வருகின்றது. 2012 இல் நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் வாக்காளர்கள் அளித்த வாக்குகள் வீதம் குறைந்தமையால் குறைந்த தொகையான உறுப்பினர்களை மட்டும் மக்கள் தெரிவு செய்திருந்தனர். மேலும் ஓர் உறுப்பினரைத் தெரிவு செய்கின்ற சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இழந்திருந்தது.

மேலும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள தென்னமரவாடி, கன்னியாவெந்நீரூற்றுப் பிரதேசங்கள் பெரும்பான்மை சமூகத்தினரின் கைகளுக்குள் அகப்பட்டு விட்டன. இனிவரும் காலங்கள் தமிழ் மக்கள் தேர்தல்களில் ஒன்றுபட்டு வாக்குகளைப் பயன்படுத்தாவிடில் அரசியல் அதிகாரங்களை முற்றுமுழுதாக இழப்பதுடன் திருகோணமலை மாவட்டத் தமிழர் பாரம்பரிய பூமியையும் இழக்க நேரிடும் என்பதை அங்கு வாழ்கின்ற தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | | | 3 | | | | |
| | 1 | | 4 | | 9 | 7 | | |
| | | | | | | | | 2 |
| | | 9 | | | | 2 | | 1 |
| 4 | | 2 | | | | | 8 | |
| | | 1 | 5 | | | | | 6 |
| | | | | | | | | 5 |
| | | | 6 | 5 | 4 | | | |
| | 7 | | | | | 8 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 4 | 8 | 9 | 6 | 1 | 2 | 5 |
| 5 | 8 | 9 | 7 | 2 | 1 | 6 | 3 | 4 |
| 1 | 6 | 2 | 5 | 4 | 3 | 9 | 7 | 8 |
| 9 | 2 | 1 | 4 | 3 | 5 | 8 | 6 | 7 |
| 3 | 7 | 6 | 9 | 1 | 8 | 5 | 4 | 2 |
| 8 | 4 | 5 | 2 | 6 | 7 | 3 | 9 | 1 |
| 2 | 9 | 8 | 3 | 5 | 4 | 7 | 1 | 6 |
| 6 | 5 | 3 | 1 | 7 | 2 | 4 | 8 | 9 |
| 4 | 1 | 7 | 6 | 8 | 9 | 2 | 5 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதி யான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என் றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண் டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல் யமானது.

## எமது உடலின் குருதியைச் சுத்தம் செய்வது எப்படி?



குருதி சுத்தமில்லாமல் இருந்தால் உடல் அசதி, காய்ச் சல், வயிற்றுப் பொருமல், சுவாசக் கோளறுகள் ஏற்படும். அதனால் உடலின் அடிப்படைச் சக்தியான குரு தியைச் சுத்தமாக வைத்துக் கொள்வது அவசியமா கும். இயற்கை உணவுகள் மூலம் குருதியைச் சுத்தமாக வைத்துக் கொள்வது எப்படி? குருதியை விருத்தி செய்வது எப்படி என் பதைப் பார்ப்போம்.

பீட்ரூட் கிழங்கு சாப்பிட்டு வந்தால் புதிய குருதி உற்பத்தியாகும். இது தவிர, செம்பருத்திப் பூவை வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர வெட்டைச் சூடு தீர்ந்து குருதி விருத்தியாகும். முருங்கைக் கீரையை துவரம் பருப்புடன் சமைத்து ஒரு கோழி முட்டை உடைத்து விட்டுக் கிளறி நெய் சேர்த்து 41 நாள்கள் சாப்பிட்டு வர குருதி விருத்தியாகும்.

நாவல் பழம் தினமும் சாப்பிட் டால் கூட குருதி விருத்தி ஆகிறது. இஞ்சிச் சாற்றுடன் தேன் கலந்து சாப்பிட்டால் குருதி சுத்தப்படுத்தப்படுகிறது. தக்காளிப்பழம் சாப் பிட்டு வந்தால் கூட குருதி சுத்தமாகும். ஆனால், வாத நோய் உள்ளவர்கள் அதனைத் தவிர்த்தல் நல்லது.

இலந்தைப் பழம் சாப்பிட்டால் அது, குருதியைச் சுத்தம் செய் வது மட்டுமில்லாமல், சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ளும். பசியையும் தூண்டும் தன்மை கொண்டது. இன்றைய காலகட்டத்தில் பெரும் அச்சுறுத்தல் இரத்தக் குழாய் அடைப்பு. இதனை இலேசாகத் தவிர்த்துவிடலாம் என்கிறது இயற்கை வைத்தியம். தினமும் ஒரு கோப்பை தயிர் சாப்பிட்டுவந்தால் போதும், குருதிக்குழாய் அடைப்பு நீங்கும். இதற் கடுத்தது இரத்தஅழுத்தம். இதனை முற்றிலுமாகப் போக்க வழி உண்டு. கொதிக்க வைத்து ஆறிய நீரில் சீரகப் பொடி 12 நேரம் ஊறவைத்து குடித்து வந் தால்போதும்ஒரு கோப்பை மோரில் எலுமிச்சம் பழச்சாறு பிழிந்து விட் டுச் சாப்பிட்டால் இரத்த அழுத்தம் சீர்படும். அகத்திக் கீரையை வாரம் 2 முறை சாப்பிட்டு வந் தாலும் இரத்தக் கொதிப்பு குணமாகும். இரத் தக்கட்டு, சுளுக்கு நிவர்த்தியாக, மஞ்சள், உப்பு, சுண்ணாம்பு ஆகியவற்றை வெந்நீர் விட்டு அரைத்து அந்த விழுதைச் சூடு காட்டி சுளுக்கின்மீதுபற்றுப் போட் டால் போதும். விளாம் பழம் சாப்பிட்டால் குருதி யில் உள்ள கிருமிகள் அழிந்து போகும்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### தூய்மையான மனதோடு இறைவனைப் பற்றிக் கொள்ளுங்கள்

எப்போதும் வெற்றி பெறுவது அன்பு மட்டுமே. அன்புடன் ஒப்பிடும் போது நூல்களும், அறிவும், யோகமும், தியானமும், ஞான ஒளியும் அதற்கு ஈடாகா.

வரம்பு கடந்த ஆற்றல் கொண்ட இறைவனைத் தூய்மையான மனதோடு பற்றிக் கொள்ளுங்கள். அவரைச் சார்ந்து நின்று வாழுங்கள். உங்களை வெல்ல எவராலும் முடியாது.

கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு அன்பையும், உதவி யையும், சேவையையும் மற்றவர்களுக்கு கொடுத்துப் பழகுங் கள். இதற்காக எதையும் எதிர்பார்க்கவேண்டாம்.




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 40 | 60 | 40 –60 | 40 | 50 | 35 |
| கத்தரி | 90 | 80 | 80 | 80 | 50 –60 | 60 | 60–80 | 45 |
| கரட் | 90 | 140 | 160 | 100 | 140 | 160 | 120–140 | 140 |
| மரவள்ளி | 60 | 50 | 50 | 40 | 40 | 50 | 80 | 40 |
| பயிற்றை | 40 | 40 | 40 | 20 | 50 | 30 | 100–120 | 60 |
| பாகல் | 100 | 100 | 100 | 80 | 100 | 120 | 100 | 60 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 80 | 120 | 80 | – | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 120 | 110 | 100 | 130 | 100–120 | 100 |
| சி.வெங்காயம் | 70 | 100 | 60–100 | 100 | 80 | 120 | 100–120 | 60 |
| பூசணி | 40 | 40 | 40 | 30 | 30 | 40 | 50–60 | 30 |
| தக்காளி | 80 | 80 | 70 | 70 | 70 | 60 | 80–100 | 45 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 | 40 | 40 | 50–60 | 30 |
| கீரை | 20 | 30 | 30 | 10 | 30 | 20 | 35–40 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 20 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 140 | 140 | 140 | 140 | 120 | 120–140 | 140 |
| புடோல் | 40 | 40 | 40 | 30 | 40 | 40 | 60–80 | 30 |
| போஞ்சி | 80 | 80 | 80 | 80 | 70 | 80 | 80–100 | 40 |
| வெண்டி | 30 | 40 | 40 | 40 | 60 | 60 | 50 | 25 |
| போஞ்சி | 160 | 140 | 140 | 160 | 160 | 200 | 120–140 | 140 |
| லீக்ஸ் | 90 | 110 | 100 | 80 | 80 | 120 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 50 | 60 | 60 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 80 | 90 | 90 | 80–100 | 100 |
| தேசிக்காய் | 70 | 120 | 120 | 60 | 120 | 140 | 160 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 20 | [illegible] | 10 |
| கறிமிளகாய் | 140 | 100 | 100 | 120 | 140 | 120 | 120–140 | 20 |
| இராசவள்ளி | 250 | 230 | – | 160 | 100 | – | 180 | 80 |

## நாளை


ஆவணி—19
சனிக்கிழமை
05.09.2015

திதி: ஸப்தமி
மு.ப.09.58 வரை
நட்சத்திரம்: கார்த்திகை
காலை 06.48 வரை
சுபநேரம்:
[illegible] வரை
இராகுகாலம்:
09.05–10.35 வரை




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 700 | 700 | 700 | 600 |
| நண்டு | 300 | 400 | 400 | 400 | 250 | 400 |
| கணவாய் | 600 | 600 | 600 | 600 | 600 | 650 |
| பாரை | 650 | 500 | 500 | 600 | 600 | 420 |
| சுறா | 600 | 600 | – | 700 | – | – |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 450 | – |
| விளை | 700 | 450 | 400 | 500 | 400 | 350 |
| முரல் | 300 | 400 | 350 | 550 | 350 | – |
| கும்பிளா | 450 | 450 | 400 | 400 | 400 | 350 |
| கிழாக்கன் | 550 | 800 | 300 | 400 | – | – |
| ஒரா | 400 | 350 | – | 300 | 500 | 350 |
| திரளி | 250 | 300 | 200 | 200 | 250 | 300 |
| நகரை | 200 | 300 | 200 | 300 | – | 300 |
| சூடை | 150 | 200 | 150 | 200 | 100 | 80 |
| ஓட்டி | 300 | 300 | 200 | 250 | 150 | 250 |
| திருக்கை | 150 | 300 | 300 | 300 | 300 | 140 |
| பாலை | 400 | 350 | 350 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | – | 300 | 300 | 250 |
| கொய் | 100 | 200 | 100 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 250 | – | 250 | 400 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆங்கில எழுத்துக்களின் பெயர்ப் பலன்கள்

## 'T' எழுத்தை பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்கள் சமுதாயத் தொண்டர்கள்

'T' என்ற எழுத்தை தங்கள் பெயர் தொடக்க எழுத்தாகக் கொண்டவர்கள் தாங்கள் கூறுவதே வேதம் என்பர். பிறர் தங்களிடம் யோசனை கேட்பதை விரும்புவர். அதே நேரம் பிறரிடம் நல்ல பெயர் வாங்க, நான்கு பேரைக் கேட்டுச் செய்வது நல்லது என்று பேச்சுக்குச் சொல்லி வைப்பர். இந்த எழுத்தின் மேல் சூரியக்கதிர்கள் பட்டு இடமும் புறமும் சிதறுவதால், இவர்களால் எதிலும் ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க முடிவதில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று அதிரடியாகப் பேசும் இவர்கள் சமுதாயத்தின் மீதும், இயற்கையின் மீதும் அபரிமிதமான பற்று வைத்திருப்பர். மக்கள் மத்தியில் புதுமையான விடயங்களைப் பரப்பிக் கொண்டேயிருப்பர். வெளியூர் சென்று வந்தால், அங்குள்ள நிலை மைகளை எல்லாம் விவரமாகத் தெரிந்து வந்து மற்றவர்களிடம் பெருமையடிப்பர். சுதந்திரமாக இருக்க விரும்புபவர்கள். எவராக இருந்தாலும் தானாக வலிய முன்வந்து உதவிசெய்து நற்பெயர் பெறு வர். முக்கிய நிகழ்ச்சிகள் எங்கு நடந்தாலும் அதில் பங்குபெற விரும்புபவர். தானாகவே போய் முன் வரிசையில் அமர்ந்து விடுவர். அது மட்டுமல்ல. அந்த நிகழ்ச்சி சிறப்பாக நடக்கவும் உதவி செய்வர். அரசுக்கே ஆலோசனை கூறும் அளவுக்கு இவர்களுக்கு அறிவு அதிகம். சரித்திர காலச் சுவடுகளை அறிந்து கொள்வதில் ஆர்வம் அதிகம். மேலும், கேள்வி கேட்டுத் துளைத்துக் கொண்டே இருப்பர். குழந்தைப் பருவத்தில் அது உளறலாகக் கூட இருக்கும். ஆனால் பிற்காலத் தில் இவர்களுக்கு இது தான் உரமாக அமைந்து வாழ்வை விருத்தியடையச் செய்யும். அசை போடுவதிலும், ஆய்வு செய்வதிலும் அலாதிப் பிரியம் இவர்களுக்கு, திரைப்படத்துறையிலும், அரசியலிலும், அரச உயர் பதவிகளிலும் அதிக பங்கு கிடைக்கும். இரும்பு, இரசாயனம், சட்டத்துறை,




வானவியல், கார் தொடர்பான தொழில்களில் ஜாம்பவானாக இருப்பர்.
நண்பர்கள் இவரைக் கண்டாலே விலகி ஓடுவர். ஆனால், இவர்கள் அவர்களை வலுக்கட்டாயமாகப் பிடித்துக் கொண்டு. அவர்களுக்காகச் செலவழிப்பதைக் கௌரவமாக எடுத்துக்கொண்டு பணத்தைச் செலவிடுவர். விளையாட்டுத் துறையில்அதிகஆர்வம் காட்டுவர். வறுத்து, பொரித்த மசால் உணவுகளை விரும்பி உண்பர். அழகு சாதனப் பொருள்கள் மேல் ஒரு கண் இவர் களுக்கு.
எப்பொழுதும் பரபரப்பும் மிடுக்கும் சுறு சுறுப்பும் நிறைந்த இவர்கள் சமூக சேவைக் காக வீட்டையே மறந்துவிடுவதும் உண்டு. எவராவது இவர்களுக்கு உதவி புரிந்தால், அதற்கு மாற்றாக அதிகம் அவர்களுக்குச் செய்ய வேண்டும் என நினைப்பர். தான்தோன்றித்தனமாக நடப்பவர்களை இவர்களுக்குப் பிடிக்காது. "உங்களால் முடியாதது ஏது மில்லை" எனப் புகழ்ந்தால் போதும். அந்த புகழ்ச்சி வார்த்தை களில் மதிமயங்கி, அவர்களுக்காகஎதைவேண்டுமா னாலும் செய்வர். நாட்டுப்பற்று மிகுந்த இவர்களால் சமுதாயத்துக்கு அதிக நன்மையே. சற்று பிடிவாதம் அதிகம். விட்டுக்கொடுத்துப் போனால் வெற்றி மேல் வெற்றிதான்.

# ஆண்- பெண் மனோநிலை வேறுபாடுகள்

ஆண்களும், பெண்களும் மனோதத்துவ ரீதியாக ஒரே மாதிரியானவர்கள் அல்ல, அவர்களுக்குள் ஏராளமான வேறுபாடுகள் இருக்கின்றன. இந்த உண்மை எம்மில் பலருக்குத் தெரியாது. நாம் ஆண்களாக இருந்தால், சின்ன விடயங்களைக்கூட இவர்களால் ஏன் புரிந்துகொள்ளவில்லை என்று எரிச்சல்படுவோம். பெண்களும், இந்த ஆண்கள் ஏன் முரட்டுப் பிடிவாதம் பிடிக்கிறார்கள் என்று சலிப்பார்கள். எரிச்சலும் சலிப்பும் உரசலுக்குக் கொண்டு போகும். கண்டு கொள்ளாமல் விட்டால் உரசல் விரிசலாகும். எண்ணங்களில், மனத் தேவைகளில் உறவு எதிர்பார்ப்புகளில்,, பிரச்சினைகளை அணுகும் விதத்தில், கருத்துக்களை வெளிப்படுத்தும் முறையில், பழகும் பாணியில், ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே நாம் எதிர்பார்க்கவே முடியாத வேறுபாடுகள் இருப்பதாக அறிஞர்கள் சொல்கிறார்கள். ஆண்கள் விரும்புபவை, மதிப்பவை அதிகாரம், பதவி, திறமை, வெற்றிகள். பெண்களோ அவற்றுக்கும் அதிகமாக அன்பு, உறவுகள், தாங்கள் பிறரால் மதிக்கப்படும் விதம் ஆகியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறார்கள். பெண்கள் சின்னச் சின்ன விடயங்களில் சந்தோஷம் பெறுகிறார்கள். பெண்களின் மனோபாவங்கள் ஆண்களிடமிருந்து வித்தியாசமானவை. அவர்களுக்கு மல்லிகைப் பூவும், வைர நெக்லஸும் ஒன்று தான். பரிசுகளின் விலை மதிப்பைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. இரண்டுமே அவர்களுக்கு அன்பின் அடையாளங்கள். இரண்டுமே ஒரே மகிழ்ச்சி தருகின்றன. ஆணோ, பரிசின் விலைக்கு ஏற்ற சந்தோஷத்தை எதிர்பார்க்கிறான். ஆண்கள், பெண்கள் இருவரும் உயர் அதிகாரிகள் தரும் பாராட்டுதல்களை, அங்கீகாரத்தை எதிர்பார்க்கிறார்கள், ஆண்களுக்கு இவை வருடம் ஒரு முறை சம்பள, பதவி உயர்வுகளாக இருந்தால் போதும். பெண்கள் இவற்றுக்கும் மேலாகத் தேடுவது உயர் அதிகாரிகள் தரும் பாராட்டு வார்த்தைகளை. இந்த அங்கீகாரம் அடிக்கடி கிடைத்தால், தங்கள் வேலைகளில் அதிக அர்ப்பணிப்போடு ஈடுபடுகிறார்கள்.

மன அழுத்தம் வரும்போது, ஆண் பெண் ஆகிய இருவரின் நடைமுறைகளையும் கவனித்துப் பாருங்கள். வித்தியாசம் வெளிப்படையாகத் தெரியும். ஆண்கள் பெரிய பிரச்சினைகள் குறித்து மட்டுமே மனைவியோடு பேசுகிறார்கள். பெண்களுக்கோ, சின்ன விடயத்தைக் கூடக் கணவரிடம் பகிர்ந்து கொள்ளா விட்டால் தலைவெடித்துவிடும். மனைவியிடம் பிரச்சினை பற்றிப் பேசும் போது கணவன், அவள் தீர்வு சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். ஆனால் மனைவியோ கணவன் தான் சொல்வதைக் கேட்க வேண்டும் என்று மட்டுமே எதிர்பார்க்கிறாள். அவன் தனது பேச்சைக் கவனமாகக் கேட்காமல் தொலைக்காட்சி பார்க்கிறான், பத்திரிகை படிக்கிறான் என்று நினைத்தால் மனம் உடைந்துபோகிறாள். அவன் கவனமாகக் கேட்கவேண்டும் என்பதுதான் அவள் ஆசை. அவன் தீர்வுகள் சொன்னால், அவள் ஆழ்மனம் அதை எதிர்க்கிறது. மன அழுத்த நேரங்களில் ஆண்கள் எதிர்பார்ப்பது தீர்வுகளை. பெண்கள் அதைவிட அதிகமாக எதிர்பார்ப்பது, தமது குறைகளை யாராவது கவனமாகக் கேட்பதை. பெண்களுக்கு மதிப்புக் கொடுங்கள். அவர்களைச் சமமாக நடத்துங்கள். தாம் உடல் வலிமையிலோ, மன உறுதியாலோ ஆண்களுக்குத் தாழ்வானவர்கள் என்னும் எண்ணம் பெண்களது மனங்களில் தோன்றாமல் கவனித்துக்கொள்ளுங்கள். நாசூக்காக, நேர்மையாகப் புகழுங்கள். அவர்கள் பேசுவதைக் கவனமாகக் கேளுங்கள். கேள்விகள் கேளுங்கள். இந்தக் கேள்விகள் அவர்களைச் சோதிப்பவையாக இருக்கக்கூடாது: அவர்கள் கருத்துக்களை விளக்கும் வாய்ப்புகளாக இருக்க வேண்டும்.

**“ ஆண்கள், பெண்கள் பற்றி வைத்திருக்கும் அனுமானங்கள் என்ன தெரியுமா? பெண்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவார்கள். தங்கள் அழகையும், அழுகையையும் காட்டி ஜெயிக்கப் பார்ப்பார்கள் என்பதாகும்! பெண்களே, இது உண்மையல்ல என்று உங்கள் அணுகுமுறையால் நிரூபியுங்கள். அறிவு பூர்வமாக விவாதியுங்கள்.**



பெண்களிடம் இரண்டு ஆயுதங்கள் உண்டு. ஒன்று மேக்கப், இன்னொன்று கண்ணீர். இவை இரண்டையும் அவர்கள் ஒரே சமயத்தில் பயன்படுத்தமுடியாது. இந்த அடிப்படையில் பெரும்பாலான ஆண்கள், பெண்கள் பற்றி வைத்திருக்கும் அனுமானங்கள் என்ன தெரியுமா?

பெண்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவார்கள். தங்கள் அழகையும், அழுகையையும் காட்டி ஜெயிக்கப் பார்ப்பார்கள் என்பதாகும்! பெண்களே, இது உண்மையல்ல என்று உங்கள் அணுகுமுறையால் நிரூபியுங்கள். அறிவு பூர்வமாக விவாதியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்ணம் தீட்டலாம் வாங்க



# பூசணியும் யானையும்!




ராமுவும் கோவிந்தனும் அடுத்தடுத்த வீடுகளில் குடியிருப்பவர்கள். ராமு, செல்வாக்கும் செல்வமும் மிக்க வியாபாரி. கோவிந்தனோ ஏழை விவசாயி. கோவிந்தன் தனது நிலத்தில் பூசணிக் கொடிகளைப் பயிரிட்டிருந்தான்.அதில் ஒருபூசணிக் காய் மிகப் பெரிய அளவில் விளைந்திருந்தது. அதைக் கண்டவுடன் கோவிந்தனுக்கு, அதை நாட் டின் அரசனுக்குப் பரிசாகக் கொடுத்தால் என்ன என்று தோன்றியது. உடனே அதை எடுத்துக் கொண்டு போய் அரசனிடம் பரிசாகக் கொடுத் தான். கோவிந்தனின் நல்ல குணத் தைப் பாராட்டிய அரசன், அவனுக்கு 100 தங்கக் காசுகளைப் பரிசாகக் கொடுத்தான். இதைப் பற்றிக் கேள்விப்பட்ட ராமுவுக்குப் பொறாமை யாக இருந்தது. ஒரு பெரிய பூசணிக் காயைக் கொடுத்ததற்கே அரசன் 100 தங்கக் காசுகளைப் பரிசளித்திருக்கிறானே! எனவே நாம் அதை விடப் பெரிதாக ஒரு யானையைப் பரிசாகக் கொடுத்தால், அதி கூடியளவு தங்கம் தருவான் தானே, என்று பேராசைப்பட்டான். அவன் நினைத்த படியே ஒரு யானையை விலைக்கு வாங்கிக் கொண்டுபோய் அரசனுக்குப் பரிசாக அளித்தான். இவனை எப்படித் திருத்து வது என்று யோசித்த அரசன் ஒரு தீர்மானத்துக்கு வந்தான். யானை யையே வாங்கக்கூடிய அளவுக்குச் செல்வம் கொண்ட ராமுவுக்கு தான் கொடுக்கும் தங்கக் காசுகள் தேவையில்லையே! என்று யோசித்த அரசன், கோவிந்தன் கொடுத்த பெரிய பூசணிக் காயை ராமுவுக்கே பரிசாகக் கொடுத்து விட்டான்.

## பொது அறிவுத் தகவல்கள்

1.இந்தியாவில் இரு தலைநகரங்களைக் கொண்ட ஒரு மாநிலம் காஷ்மீர்.
2.ஆக்டோபஸின் ஆயுட் காலம் 3 ஆண்டுகள்.
3.உலோகங்களில் அதிக நிறை கொண்டது அலுமினியம்.
4.ராஜநாகத்தின் விஷம் மிகக் கொடியதாகும். அதன் ஒரு கிராம் நிறையுடைய விஷம் 150 பேரைக் கொல்லப் போதுமானது.
5.உலகின் மிகப்பெரிய கண்ணாடி ஜன்னல் நியூயோர்க் நகரில் உள்ள கென்னடி சர்வதேச விமான நிலையத்தில் உள்ளது. அதன் நீளம் 300 அடி. உயரம் 23 அடி.
6.வியர்வையில் கந்தகச் சத்து இருப்பதால் வெள்ளி ஆபரணங்கள் கறுத்துப் போய்விடுகின்றன.
7.கறையான் அரிக்காததும், காளான் உண்டாகாததும், இரும்புத்துரு ஏறாததும் தேக்குமரம் மட்டுமே.
8.ஈ, ஒரு நிமிடத்தில் 2 ஆயிரம் தடவை இறக்கை அடித்துப் பறக்கிறது.

## தமிழ் மொழி



இது தமிழர்களினதும், தமிழ் பேசும் வேற்று இனத்தவர்களினதும் தாய்மொழி ஆகும். தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தின் முதன்மையான மொழிகளில் ஒன்றும் செம்மொழியும் ஆகும். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடு களில் அதிக அளவிலும், தென்னாபிரிக்கா, மொரிசியஸ் பிஜி, ரீயூனியன், டிரினிடாட் போன்ற நாடுகளில் சிறிய அளவிலும் தமிழ் பேசப்படுகிறது. 1997ஆம் ஆண்டுப் புள்ளி விவரப்படி உலகம் முழுவதிலும் 8 கோடி (80 மில்லியன்) மக்களால் பேசப்படும் தமிழ், ஒரு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு பேசும் மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் பதினெட்டாவது இடத்தில் உள்ளது. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டு களுக்கும் மேல் பழைமை வாய்ந்த இலக்கிய மரபைக் கொண்டுள்ள தமிழ் மொழி, தற்போது செம்மொழி அந்தஸ்தைப் பெற்றுள்ள ஒன்றாகும்.

# பதற்றமா ? கவலையை விடுங்கள்

1. எமது எண்ணங்களே எமது வாழ்வின் அடிப்படை. எமது நேர்மறை எண்ணங்கள் எமக்கு நற்பலனையும், எதிர்மறை எண்ணங்கள் தோல்வியையும் உண்டாக்குகின்றன. தவறு செய்துவிடுவோமோ என்ற அச்சத்துடன் செய்யும் வேலைகள் தவறாகவேதான் முடியும். எனவே எதிர் மறையான சிந்தனைகள் தோன்றும்பொழுது கவனமாக உங்கள் மனத்தை வேறு நேர்மறை எண்ணங்களுக்குத் திருப்புங்கள். ஆரம்பத்தில் கொஞ்சம் கடினமாக இருக்குமானாலும் கொஞ்ச நாளில் உங்கள் மனம் தானாகவே நேர்மறைக்கு மாறிவிடக் காண்பீர்கள்.

2. ஒரு தாளைக் கையில் எடுத்துக்கொள்ளுங்கள். உங்களிடம் உள்ள குறைபாடுகள் என்னென்ன? எந்தெந்த விடயங்கள் உங்களுக்குப் பதற்றத்தைத் தூண்டுகின்றன எனப் பட்டியலிடுங்கள். பின் நிதானமாக அந்தக் காகிதத்தைக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் எறியுங்கள். இந்தக் குறைபாடுகள் எம்மை விட்டு வெகு விரைவில் நீங்கி விடும் என்றும், இனி இந்தச் சூழல் என்னை அச்சுறுத்தாது. இத்தகைய சூழலை எதிர்கொள்ளும் தெம்பு எனக்கிருக்கிறது என்றும் திடமான குரலில் உங்களுக்கு நீங்களே சொல்லிக்கொள்ளுங்கள். சுய அறிவுரை என்ற இந்த முறைமை, ஆழ்மனத்தில் உங்களைப் பற்றி நீங்களே பதித்து வைத்திருக்கும் தவறான விம்பத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துவிடும்.

3. உங்களிடம் உள்ள திறமைகள் மற்றும் உங்கள் நிறைகள் என்னென்ன என்பதைப் பட்டியலிடுங்கள் (குறைந்தபட்சம் பத்து). எனக்கு எந்தத் திறமையுமே இல்லை என்று பதில் சொல்லாதீர்கள். எறும்பும் தன் கையால் எட்டுச் சாண் என்றார் அவ்வைப்பிராட்டி. நினைவு வைத்துக்கொள்ளும் திறனா, கணக்கில் புலியா, வேகமாக ஓட வல்லவரா, சமையலில் திறமைசாலியா, பிறருக்கு உதவும் குணமும் மனமும் உள்ளவரா? என்னென்னவெல்லாம் உங் களுடைய நல்ல குணங்கள் அல்லது திறமைகள் என்று கருதுகிறீர்களோ அவை எல்லாவற்றையும் பட்டியலிட்டுப் பாருங்கள். உங்கள் மனம் சோர்வடைகையில் அப்பட்டியலை எடுத்துப் படித்துப் பாருங்கள்.

4. நீங்கள் என்னென்ன செய்ய விரும்புகிறீர்கள் அல்லது வாழ்வில் உங்கள் இலக்கு என்ன? அதைச் சற்று ஆழமாக யோசியுங்கள். அந்தப் பதற்றம் அதற்கு எந்த வகையில் தடையாக இருக்கும் என்பதைச் சிந்தித்து, இதில் இருந்து நான் வெளியில் வந்தே தீருவேன். என் இலக்[illegible] என்று இரவில் ப[illegible] உரக்கச் சொல்லிக்கொள்ளுங்கள்.





5. காலை எழுந்தவுடன் கண்ணில் படக்கூடிய இடத்தில், நல்ல ஆரோக்கியமான பொன்மொழிகள், உற்சாகமூட்டும் சுவரொட்டிகள் போன்றவை இருக்குமாறு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். இரவு படுக்கைக்குச் செல்லு முன்னர், சிறியதோ பெரியதோ, உங்களுக்கு நடந்த நன்மை ஒன்றை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

[illegible] ஏதாவது பரபரப்பாகச் செய்து கொண்டு இருங்கள். தனியாக இருக்கையிலும், வேலையில்லாமல் இருக்கையிலும் எமது மனக்குரங்கு பல கிளைகளில் தாவித் தாவிச் செல்லும். அவ்வாறு அந்தக் குரங்கு தாவும் பல நினைவுக்கிளைகள் எதிர் மறையானதாக இருக்கும். எனவே மனதை அலைபாய விடாமல் ஒரு நிலைப்படுத்த வேண்டுமானால் உடலுக்கும் மனதுக்கும் வேலை கொடுத்துக்கொண்டே இருப்பது அவசியம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

## நெல்லியடி நவீன சந்தை புதிய கட்டடத்தொகுதியிலுள்ள கடைகள் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2015

கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட கடைகளினை உள்ளூராட்சித் திணைக்களத்தின் 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக ஒரே முறையில் செலுத்தக்கூடிய ஆகக் கூடிய கேள்வித் தொகையினை இச் சபைக்கு செலுத்துபவர்களுக்கு ஐப்பசி -2015 மாதம் தொடக்கம் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது.

1. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி :- 23/09/2015 பி.ப.3.00மணி
2. கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி :- 25/09/2015 ந.ப 12.00மணி
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 25/09/2015 பி.ப. 2.00மணி
4. கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தபால் உறையானது அரக்கு முத்திரையிடப்படல் வேண்டும். இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் கடை இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு உரிய காலத்திற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலமாகவோ சேர்க்கப்படல் வேண்டும்.
5. கேள்விப் படிவத்தினை தலைமை அலுவலகத்தில் தேசிய அடையாள அட்டையை காண்பித்து உரிய படிவக் கட்டணம், மீளளிக்கப்படும் வைப்புப் பணம் என்பவற்றைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
6. எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு.
7. விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 05 வருடங்களுக்கு ஒரு முறை வாடகைப்பணம் மீளாய்வு செய்யப் படும். இம் மாற்றத்திற்கேற்ப வாடகைக் கட்டணம் மாற்றம் அடையும்.
8. அரச நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் இக் கேள்வி நடைமுறைக்கமை வாக விண்ணப்பிக்கலாம்.
9. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திரக் கேள்விக்காரர் தமது கேள்வித் தொகைக்கு மேலதிகமாக 11 சதவீதம் பெறுமதி சேர்வரியாகவும் (VAT) 02 சதவீதம் தேசத்தை கட்டியெழுப்புதல் வரியாகவும் (NBT) வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.
10. மாதாந்த வாடகைப் பணத்தை அடுத்து வரும் மாதம் 10 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப்பணமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களிற்கு வாடகைப் பணங்களைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் மறு அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
11. கடந்த காலங்களில் தவறுநர் பட்டியலில் அட்டவணைப் படுத்தப்பட்டோர் அல்லது. இச் சபைக்கு குத்தகையாக, வாடகையாக, வரியாக நிலுவையில் உள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவராவார்.
12. குத்தகைக்கு பெற்ற கடையின் மின்சார இணைப்புக் கட்டணங்கள் மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.

மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நாள்களில் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி அட்டவணை

| தொ.இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப் படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் (VAT,NBT வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (VAT,NBT வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| Ground Floor | | | | | |
| 1 | GF1 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 2 | GF2 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 3 | GF3 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 4 | GF4 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 5 | GF5 | 1,320,000.00 | 13,200.00 | 1,000.00 | 5500.00 |
| 6 | GF6 | 1,320,000.00 | 13,200.00 | 1,000.00 | 5500.00 |
| 7 | GF7 | 1,320,000.00 | 13,200.00 | 1,000.00 | 5500.00 |
| 8 | GF8 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| 9 | GF9 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| 10 | GF10 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| 11 | GF11 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| 12 | GF12 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| 13 | GF13 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| 14 | GF14 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| UPPER FLOOR | | | | | |
| 15 | UF15 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 16 | UF16 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 17 | UF17 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 18 | UF18 | 780,000.00 | 7,800.00 | 1,000.00 | 3250.00 |
| 19 | UF19 | 780,000.00 | 7,800.00 | 1,000.00 | 3250.00 |
| 20 | UF20 | 780,000.00 | 7,800.00 | 1,000.00 | 3250.00 |
| 21 | UF21 | 780,000.00 | 7,800.00 | 1,000.00 | 3250.00 |
| 22 | UF22 | 720,000.00 | 7,200.00 | 1,000.00 | 3000.00 |
| 23 | UF23 | 480,000.00 | 4,800.00 | 1,000.00 | 2000.00 |
| 24 | UF24 | 480,000.00 | 4,800.00 | 1,000.00 | 2000.00 |
| 25 | UF25 | 720,000.00 | 7,200.00 | 1,000.00 | 3000.00 |
| 26 | UF26 | 720,000.00 | 7,200.00 | 1,000.00 | 3000.00 |
| 27 | UF27 | 720,000.00 | 7,200.00 | 1,000.00 | 3000.00 |

**க.கனகதுரை**
**செயலாளர் - வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**
**03/09/2015**

(C/18599)(10.15)

### பெயர்மாற்றம்

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த திருப்பாதம் சிவநேசம் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை திருப்பாதம் சிவனேஸ்வரி என பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்ப மிடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**திருப்பாதம் சிவனேஸ்வரி.**

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### சுண்டுக்குளி சனசமூக நிலையம்
### 85 ஆவது ஆண்டு விழா

**யோ. றொனிக்கள்**
அவர்களின் அனுசரணையுடன்
மாவட்ட ரீதியிலான
**மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி**



காலம்: 11.09.2015 (வெள்ளிக்கிழமை)
நேரம்: காலை 6.00 (நிலைய முன்றல்)
விண்ணப்ப இறுதித் திகதி 10.09.2015
தொடர்புகளுக்கு:
ம.இளங்கோ 0777 444378
தே.வினோத் 0777 185325
சி. யசிகரன் 077 078 8930

(62686)(10)

### 60ஆவது பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்



**துரையப்பா சுப்பிரமணியம்**

அவர்களின் 60ஆவது அகவையைப் பூர்த்தி செய்வதையிட்டு சகல செல்வங்களும் பெற்று நீடூழி வாழ்கவென அக்கராயன்குளம் முத்துமாரி அம்மன் (காட்டம்மன்) ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

Happy BirThday

வாழ்த்துவோர்:
மனைவி, பிள்ளைகள்
மதன், மீரா, சுஜன்
மருமகன் (ரவி)

(62687)(10)

### அறிவித்தல்

**நல்லூர் பிரதேச சபை, நல்லூர் உப அலுவலகம்**
**ஆதனப் பெயர்மாற்றம்**
**573/42 அரியாலைவீதி, வட்டாரம் - 12**

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் -12 அரியாலை வீதியிலுள்ள இல 573/42 எனும் ஆதனம் எமது பதிவேட்டில் **சொந்தக்காரர் உ.கோ.பரமசாமி கணேசலிங்கம்** எனும் பெயரில் உள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று அரியாலை இறை மண்டக்கன் வளவு நிலப்பரப்பு 07 ஆறுமுகம் அருளானந்தம் பெண் செந்தினியும் ஆகியோர் தங்களது 2ஆம் பேரினது மாதா காலஞ்சென்ற சு.சாங்கோசன் பெண் சற்குணவதியின் பிதா காலஞ்சென்ற மாணிக்கவாசகர் சோமசுந்தரத்தின் முதுச ஆதனமாக இருந்து 2ஆம் பெயரின் மாதாவான சற்குணவதியை பிதாவழி முதுசமாக வந்தடைந்தது என்றும் அவரால் 2ஆம் பெயரிற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது என்றும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான திருமதி சுதா கஜேந்திரகுமார் அவர்களால் வரையப்பட்ட 550/01.06.2013ஆம் இலக்க பிரகடன உறுதிமூலம் வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் குறித்த உறுதி மற்றும் அதன் தாய் உறுதிகள் அனைத்தும் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக தொலைந்து விட்டது என்றும் உறுதி எழுதிய காலம், நொத்தாரிசுவின் பெயர் தெரியாததால் காணிப்பதிவகத்தில் விண்ணப்பித்து அவற்றை பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்பு இந்த ஆதனம் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான திருமதி சுதா கஜேந்திரகுமார் அவர்களால் வரையப்பட்ட 551/01.06.2013ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் ஆறுமுகம் அருளானந்தமும் பெண் செந்தினியும் என்பவர்களிடமிருந்து பரமசாமி கணேசலிங்கம் என்பவரை வந்தடைந்தது.

யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று அரியாலை இறை மண்டக்கன் வளவு நிலப்பரப்பு 05 இது பிரசித்த நொத்தாரிசு சு.செ.மகாதேவன் என்பவரால் வரையப்பட்ட 6746/26.10.1982ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் சுப்பையா அருளம்பலம் தங்கம்மா என்பவர்களிடமிருந்து பரமசாமி கணேசலிங்கம் என்பவரை வந்தடைந்தது.

நல்லூர் பிரதேச சபை நல்லூர் உப அலுவலக ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் இந்த இரு ஆதனங்களையும் சேர்த்து ஒரே இலக்கமான 573/42 எனும் இலக்கம் வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் ஆதனப்பதிவேட்டில் குறித்த ஆதனத்தினை தனது பெயரிற்கு மாற்றம் செய்து தருமாறு பரமசாமி கணேசலிங்கம் என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

இந்த ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பரமசாமி கணேசலிங்கம் என்பவரிற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எவ்வித பிரச்சினைக்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**2015.08.26**

**திருமதி தி.அன்னலிங்கம்**
**செயலாளர்**
**நல்லூர் பிரதேச சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10.04.1920 | 02.09.2015 |



## திருமதி. செபரத்தினம் வேதநாயகம்

இளவாலை பத்தாவத்தையை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாவும் கொண்ட திருமதி.செபரத்தினம் வேதநாயகம் அவர்கள் 02.09.15 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் மறைந்த வேதநாயகம் விதானையார் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லப்பரிகாரியார் தம்பதிகளின் ஏக புதல்வியும், சின்னையா, காலஞ்சென்றவர்களான இராசையா, தம்பி ஐயா, இன்னாசிமுத்து, பொன்னையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திரகுமாரன் (கனடா), தவகுமாரன், காலஞ்சென்றவர்களான சந்திரகுமாரன், வசந்தகுமாரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (05.09.2015) யாழ்ப்பாணம், சேந்தாங்குளம் புனித ஆரோக்கியநாதர் குடும்ப சேமக்காலையில் திருப்பலி ஆராதனைகளை தொடர்ந்து மதியம் 12.30 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல் : தவகுமாரன் ( மகன் ) தொ.பேசி : 0718132743**

# மரண அறிவித்தல்

## சின்னையா பொன்னுத்துரை



குருந்து வீதி தையிட்டி, தெற்கை பிறப்பிடமாகவும் தாவடி வடக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா பொன்னுத்துரை நேற்று (03.09.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவி சின்னையா - செல்லாட்சி தம்பதியரின் பாசமிகு புதல் வனும் காலஞ்சென்ற வர்களான சிவகுரு, இரத்தினம், நல்லதம்பி, செல்லம்மா, இராசையா ஆகியோரின் அன்புத் தம்பியும் செல்லம் மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வர்களான பொன்னுத்துரை, மகேஸ்வரி, சின்னம்மா, பாலசிங்கம், சற்குணநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் தயாபரன் (ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி), விஜிதா (லண்டன்), துவாரகன் (லண்டன்), கவிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயரூபி (ஆசிரியை, யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கருணாகரன் (லண்டன்), கௌசிகா (லண்டன்), துவாரகன், ஜனனி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபிராம் (லண்டன்), விஷ்ணுகரன் (லண்டன்), வைஷ்ணவி (லண்டன்), லக்ஷாயினி, கவிநயா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2015) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் (உழவர் வீதி, தாவடி வடக்கு, கொக்குவில்) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாவடி வடக்கு,
கொக்குவில்.

தகவல் :
பொ.தயாபரன் (மகன்)

# மரண அறிவித்தல்

## தொம்மைப்பிள்ளை அமிர்தநாதர்



சில்லாலை தெற்கைச் சேர்ந்த தொம்மைப்பிள்ளை அமிர்தநாதர் 01.09.2015 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தொம்மைப்பிள்ளை றோசமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வெலிச்சோர் - ஆனாசி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற இசபேலம்மா (செல்லம்மா) வின் அன்புக் கணவரும் இராசசிங்கம் (ஜேர்மனி), புனிதம் (சுவிஸ்), புஸ்பம் (இந்தியா), பங்கிராசா (இந்தியா), யோகராசா (பிரான்ஸ்), யோகராணி (சுவிஸ்), ரூபான் (சுவிஸ்), றஞ்சன் (சுவிஸ்), றஞ்சினி (சில்லாலை), செல்வராணி (பிரான்ஸ்), றாஜீ (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பவளம், செல்வம் காலஞ்சென்ற அன்ரனி மற்றும் பிறேமினி, சுமதி, அன்ரனி, பெற்றினா, இந்து, றஞ்சன், றெஜீமன், ஜேம்ஸ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான யாக்கோமுத்து, அருளப்பு, சூசைப்பிள்ளை மற்றும் ஞானம்மா, எலிசபேத் ஆகியோரின் அன்பு சகோதரரும் அலன், அலெக்ஸா, கலிஸ்ரா, யூலியா, றெக்னோ, றெஜீனோ, றெக்சன் காலஞ்சென்ற டினேஸ் மற்றும் டிலக்சி, டிலானி, ஜசிந்தா, நிறைஞ்சன், றெஜிஸ், ஜென்சன், பற்றிஸ், றொபின், கொவின், றமினா, அலிசா, காவியன், இலக்கியன், ஜென்சி, டெல்சன், சுஜினா, சகானா, வெரோனி, அலெக்ஸியா, அலெக்ஸன் ஆகியோரின் அன்புப் பேரனும் சாயு, சிறிவர்ஷன் ஆகியோரின் பூட்டனும் ஆவார.

அன்னாரின் நல்லடக்கம் இன்று 04.09.2015 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெற இருக்கும் இரங்கல் திருப்பலியை தொடர்ந்து பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி ரூபி செல்வமணி சபாரட்ணம்



தெல்லிப்பளையைப் பிறப்பிடமாக வும் வளன்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரூபி செல்வமணி சபா ரட்ணம் நேற்று 03.09.2015 வியாழக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லத்துரை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வர்களான திரு.திருமதி சின்னத்தம்பு றொபேட் தம்பதியினரின் மருமகளும் சின்னத்தம்பு றொபேட் சபாரட்ணத்தின் அன்பு மனைவியும் றூபேஸ் ஜெயக்குமார் (வளிமண்டல திணைக் களம்), தயாறஞ்சினி (சவுதி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மிகாயா தர்ஷாயினியின் (ஆசிரியர்) மாமியாரும், செல்வரட்ணம், கிறேஸ் செல்வமலர் (கொழும்பு) ஆகி யோரின் சகோதரியும், ஜோயல் றொஷானின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (05.09.2015) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று இராஜபாதை வீதி, கோப்பாயிலுள்ள கானான் ஜெப ஆலய கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

951/10, வளன்புரம்,
கொழும்புத்துறை.

தகவல் : கணவர்.
0778544595

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை கந்தசாமி



மலர்வு: 10.03.1940
உதிர்வு: 01.09.2015


வேலணையைப் பிறப்பிடமாகவும் தொண்டமானாறு செல்வசந்நிதியை வசிப்பிடமாகவும் எமது சங்கத்தின் நீண்ட கால உறுப்பினரும் பார்வையற்றோரின் கல்வி வளர்ச்சிக்காக எமது நிறுவனத்தின் அங்கமாக கல்வி நிதியத்தை ஆரம்பித்து வைத்தவருமாகிய வேலுப்பிள்ளை கந்தசாமி 01.09.2015 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(04.09.2015) வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணியளவில் கைதடியில் உள்ள யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் தொழிற்பூங்கா வளாகத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல .28 ,1 ஆம் ஒழுங்கை, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 7336, 077 3741201

தகவல்
யாழ் விழிப்புலனற்றோர் சங்கம்

# மரண அறிவித்தல்



## பாலசுப்பிரமணியம் நித்தியானந்தா குருக்கள்

ஏறாவூரைப் பிறப்பிடமாகவும், கண்டி குறிஞ்சிக்குமரன் கோயிலில் 26 வருட சேவையையும் ஆற்றி, தற்பொழுது உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் நித்தியானந்தா குருக்கள் 02.09.2015 புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் பரமேஸ்வரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், செல்வமதியின் பாசமிகு கண வரும், வினோ, குறிஞ்சிக்குமரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரிபுராவின் மாமனும், பத்மநாதக்குருக்கள், ஞானானந்தக்குருக்கள், காலஞ்சென்ற செவ்வந்தி ஐயா (கிருஷ்ணானந்தன்) ஆகியோரின் பாச மிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2015) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
உடுப்பிட்டி.

தகவல்: **குடும்பத்தினர்.**
T.P: 077 4832248

(C/18602) (10)

## தேசிய

கரிப்பு தொடர்பான பிரேரணை மீது உரையாற்றியபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். தேசிய அரசில் அமைச்சரவை அதிகரிப்பு யோசனையை விவாதிக்க அனுமதி அளித்து சபாநாயகர் விடுத்த அறிவிப்பை வரவேற்பதாக ரணில் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சரவையில் அல்லாது நாடாளு மன்றில் இருந்து அங்கு அமைக்கப்படும் தெரிவுக் குழுக்களில் பங்கேற்றுத் தேசிய அரசுக்கு ஆதரவு வழங்க முடியும். அரசுடன் சேர முடியாதவர்கள் பழைய யுகம் போன்று கோஷங்களுடன் இருக்க முடியும். வரலாற் றைப் பற்றிக் கதைப்பதானால் கதைத் துக்கொண்டே இருக்கலாம். ஆனால் எதிர் காலப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க கூடிய நிலைக்குச் செல்லவேண்டும்.

நாம் முன்னோக்கிச் செல்வதா அல்லது ஒரு இடத்தில் தேங்கி நிற்பதா என்று சிந்திக்க வேண்டும். நாட்டுக்கு வெஸ்ட்மினிஸ்டர் முறை உகந்தது இல்லை என்றால் புதிய முறை பற்றிச் சிந்திக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் தெரி வில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி செய்த அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கது.

நாடாளுமன்றில் மாவட்ட அபிவிருத்தி இணைக் குழுச் சபை, வரவு - செலவு திட்ட அலுவலகம் அமைக்க முடிவு செய்துள்ளோம். கேள்விகளுக்கு அமைச்சர்களே பதில் சொல்ல வேண்டிய நிலையை ஏற் படுத்த நடவடிக்கை எடுப்போம். எனவே சமரச அரசு ஒன்றை ஏற்படுத்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார்.

இதேவேளை, தேசிய அரசில் அமைச்சர் களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்துப் பிரதமரால் முன்வைக்கப்பட்ட யோசனையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள சபாநாயகர் கரு ஜயசூரிய அனுமதியளித்தார். (த-வ)

## கோத்தபாயவிடம்

ராஜபக்ச நேற்று 3 மணிநேரம் விசாரிக்கப்பட்டார். முன்னைய அரசின் காலத்தில் இடம் பெற்ற ஊழல், மோசடிகள் உள்ளிட்ட முறை கேடுகள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக் குழு நேற்று கோத்தபாய ராஜபக்சவுடன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா மற்றும் முன் னாள் இரா ணுவ அதி காரிகளான மேஜர் ஜெனரல் கே.பி. எகொடவெல, மேஜர் ஜெனரல் பாலித பெர்னான்டோ ஆகியோரையும் விசாரணைக்கு அழைத்திருந் தது.

இந்த நால்வரிடமும் நேற்று 3 மணிநேரம் விசாரணைகள் நடத்தப்பட்டதாகவும், மீண்டும் இன்று விசாரணைக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ள தாகவும் ஆணைக் குழுவின் செயலர் லெஸ்லி டி சில்வா தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ரக்னலங்கா நிறு வனத்தின் பணியாளர்களைத் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுத்திய குற்றச் சாட்டு தொடர்பாகவே இவர் களிடம் விசாரணை நடத்தப் பட்டுள்ளது. (த-வ)

## சம்பந்தனுக்கு

துள்ளார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தின் ஊடாக மேற்படி வாழ்த்தைத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் கூறியுள்ளதாவது:-

8ஆவது நாடாளுமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவருக்கு எனது வாழ்த்துகள் எனக் குறிப்பிட்டுள்ளார். (த)

## அமைச்சரவை

அமைச்சர்களின் எண்ணிக்கை 48 ஆகவும், அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களின் எண்ணிக்கை 45 ஆகவும் உயரவுள்ளது.

அதன்போது பிரேரணைக்கு ஆதர வாக 143 பேரும் எதிராக 16 பேரும் வாக்களித்தது டன் 63 பேர் பங்கேற்கவில்லை. பிரேரணைக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில ஆகியோர் வாக்களித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

அமைச்சரவையை அதிகரிக்க அனுமதி கிடைத்துள்ளதால் இன்று அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் பதவி யேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. (த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தப்பெருமானின் குபேரவாசல் கும்பாபிஷேகம்

*கலாநிதி:ஆறு.திருமுருகன்*
*தலைவர்,ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.தெல்லிப்பழை.*
*தலைவர்,சிவபூமி அறக்கட்டளை.*

சரித்திரப்பிரசித்தி பெற்ற நல்லைக்கந்தன் வரலாற்றில் உன்னதமான நாள் இன்று.நூற்றி எட்டு அடி உயரமான குபேரவாசல் கோபுரம் அமைக்கப்பட்டு இன்று காலை ஆறுமணிக்கு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. இலங்கையிலுள்ள கோபுரங்களில் புதுமையான வகையில் அமைக்கப்பட்ட தனித்துவமான கோபுரமாக இக்கோபுரம் அமைந்துள்ளது.நவதளங்களைக் கொண்ட இக்கோபுரம் 2012 இல் அடிக்கல் நாட்டப்பெற்றது.கடந்த மூன்று ஆண்டுகளில் இவ்வியத்தகு கோபுரம் வேகமாக எழுந்தமை முருகப்பெருமானின் திருவருளே.எவரிடமும் நிதி கோராமல் முருகனின் திருப்பணி அமைதியாக நடைபெற்று முடிவடைந்துள்ளது. ஆலய அறங்காவலர் எல்லாம் முருகனே செய்விக்கிறான் யாம் ஏதும் அறியோம் என அமைதியாகச் சொல்கிறார்.சிற்பக்கலைஞர் திரு.வீரசிங்கம் முருகன் திருவருளால் கோவில் எஜமானர் சொல்வதைச் செய்கிறோம் எனப்பணிவுடன் சொல்கிறார்.எவ்வித ஆரவாரமுமின்றி முருகப்பெருமானின் பெருங்கோபுரம் எழுந்து நிற்கிறது. கண்டவர்கள் வியக்கும் வண்ணம் காட்சியளிக்கும் அற்புதக் கோபுரம், நாம் வாழும் காலத்தில் அடிக்கல் நாட்டப்பெற்று பூர்த்தியாகி கும்பாபிஷேகம் காணும் பேறு நமக்குக் கிடைத்தது முன் செய் தவப்பயனே.

செல்வத்தின் அதிபதி குபேரன்.வடதிசையின் காவலன் குபேரன். எட்டுத்திக்குப் பாலகர்களிலொருவராகிய குபேரன் சிவபெருமானின் பேரருளைப் பெற்றவன். கொடுப்பதில், உபசரிப்பதில் வல்லவன்.வடதிக்கில் வீற்றிருந்து சகல செல்வங்களையும் காக்கும் குபேரன் மிகவும் பிரசித்தி பெற்றவன். இலங்காபுரியை இராவணனுக்கு முன் ஆண்டவன். இம்மண்ணை குபேரபுரியாக நிறைசெல்வத்தோடு வாழவைத்தவன். அவன் வீற்றிருக்கும் திசையில் எழுந்த இக்கோபுரத்தைத்தரிசித்தால் எல்லாச் செல்வமும் கிடைக்கும் என்பது ஐதீகம்.திருப்பதி ஏழுமலையானுக்கு கோவில் கட்ட குபேரன் கடன் கொடுத்தான் எனப்புராணங்கள் கூறுகின்றன.இன்றும் திருப்பதியில் வடதிசையிலுள்ள உண்டியல் குபேர காணிக்கை எனக்கூறும் வழக்கமுண்டு.குபேரன் நவநிதிகளின் அதிபதி.பத்மம், மகாபத்மம், மகரம், கச்சபம், குமுதம், நந்தம்.சங்கம்,நீலம்,பத்மினி ஆகிய நவநிதிகளின் அதிபதியாகிய குபேரன்பெயரில் அவன் திசை நோக்கி அமைக்கப்பட்ட கோபுரத்தின் குடமுழுக்கைக் காண்பதற்கு அனைவரும் பக்தியோடு திரண்டு வாருங்கள் நல்லூரானின் அருள் மழையில் நனைந்து,குபேரவளம் பெறுவோமாக.

## உள்ளக

குழுவுக்கான நிதி உதவிகளை நிறுத்தி விட்டார்.

இதனால் ஆணைக்குழு அதன் பின் னர் செயற்படவில்லை. இதன் கார ணமாக அந்த விசாரணையின் தீர்ப்பும் வெளியாகவில்லை. நாங் கள் பல தடவைகள் அந்தத் தீர்ப்பை வெளியிடச் சொல்லிக் கேட்டும் எதுவும் நடைபெறவில்லை.

கொலை செய்தவர்களையே விசா ரிக்கச் சொல்வது பொருத்த மான செயல் அல்ல. பாதிக்கப்பட்ட மக்கள் எந்த நீதிமன்றத்தில் விசா ரணை நடத்தப்பட வேண்டும் என்று கேட் கின்றார்களோ அந்த நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்பட வேண்டும். எதிராளியின் கோரிக்கையைக் கேட் டுக் கொண்டிருக்கக் கூடாது.

கடப்பில் போடப்பட்டிருந்த எனது மகன் தொடர்பான வழக்கு, கடந்த 2012 ஆம் ஆண்டு நான் ஜெனிவாவில் பேசிய பின் னர், நவநீதம்பிள்ளை அம்மையார் இலங்கைக்குச் செல்வதற்கு முன்னதாகவும் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன டிப்படையில் நான் முன்னரே குறிப்பிட்ட 13 நபர்கள் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கைது செய்யப்பட்டனர். ஆனால் அவர்கள் தற் போது விடுவிக்கப்பட்டுள்ளனர்.

புதிய அரசு ஆட்சி அமைத்த பின் னரும் இந்த வழக்கில் எந்த முன் னேற்றமும் இல்லை. அதிகாரத்தில் இருக்கும் எந்தத் தரப்பினரிடம் கேட்டாலும், விசாரணை நடந்து கொண்டிருக் கின்றது என்ற பதிலை மாத்திரம் சொல்கின்றனரே தவிர, விசாரணையில் எதுவும் நடைபெறவில்லை.

இவ்வாறான நிலையில், இலங்கை யில் உள்ளக விசாரணை நடைபெறுவதோ, சர்வதேச மயப்படுத்தப்பட்ட விசாரணை நடைபெறுவதோ நீதியைப் பெற்றுத் தராது. சர்வதேசப் பொறிமுறையினூடான விசாரணை மாத்திரமே நீதியைப் பெற்றுத் தரும் என்று குறிப்பிட்டார். (த–5)

## இனவாதக்

படும் வகையில் உரைகளை ஆற்ற இடமளிக்கக் கூடாது எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த யோசனையை,சபாநாயகர் ஏற்றுக் கொண்டார். (த–வ)

## சம்பந்தனின்

மன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவ ராக இரா.சம்பந்தன் நேற்றைய தினம் நியமிக்கப்பட்டார். இதற்கு நாடாளுமன்றத்தில் விமல் வீரவன்ச போன்ற கடும் போக்குடையவர்கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில், சமூக வலைத் தளங்களிலும் இரா.சம்பந்தனுக்கு எதிரான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றது. கடந்த காலங் களில், தமிழீழ விடுதலைப் புலிக ளின் தேசியக் கொடியான புலிக் கொடி ஏற்றும் போது எடுக்கப்பட்ட படங் கள், தமிழீழ விடுதலைப் புலி களின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோ ருடன் எடுக்கப்பட்ட ஒளிப்படங்களைப் போட்டு, புலிகளின் பிரதிநிதிக்கா எதிர்கட்சித் தலை வர் பதவி வழங்கப்பட்டுள்ளது என்று விமர் சனங்களை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–5)

## எதிர்க் கட்சி

குறித்த பதவிக்கு போட்டியிட வேறு எவரது பெயரும் பரிந்துரை செய்யப்படவில்லை என்பதால் அநுரகுமாரவை எதிர்கட்சிப் பிரதம கொறடாவாகச் சாபாநாயகர் விரைவில் அறிவிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. (த–வ)

டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது தொடர்பில் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## முதல்

போது உரையாற்றிய எதிர்க் கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்,

தேசிய நலன் என்று அரசு கொண்டு வரும் தவறான சட்டத் திட்டங்களை எதிர்ப் போம்.தேசிய அரசில் அமைச்சரவை அதிகரிப்பு என்ற திட்டம் கொள்கை ரீதியாகச் சிறந்த முன் உதாரணம் அல்ல. கடந்தகாலங்களில் அமைச்சரவை கணக்கின்றி அதி கரித்துச் சென்றது போன்ற அரசியல் கலாசாரத்தை ஊக்கு விக் கக் கூடாது.

இந்தியாவில் நூறு கோடிக்கும் அதிகமான மக்கள் வாழும் நிலையில் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களின் என் ணிக்கை 30ற்குள் மட்டுப்படுத்தப்பட்டுள் ளதுடன், இணை மற்றும் துணை அமைச் சர்கள் என மொத்தம் 70 பேர் தான் இடம் பெற்றுள்ளனர்.

இலங்கை தமது அயல்நாடான இந்தியாவை முன்னுதாரண மாகக் கொள்ள வேண்டும். நாடாளு மன்றில் புதிய இளம் தலைவர்கள் உள்ளனர். மாகாண சபையில் முதலமைச் சர் பதவி வகித்தவர்களும் உள்ளனர். அவர்களுக்கு ஏன் பிராந்திய அதிகாரத்தை அதிகரிக்கக் கூடாது? மாகாணங்களுக்கு அதிகாரங்களை அதிகரித்தால், மக்கள் மத்தியில் அபிவிருத்தியையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்த முடியும்– என்றார். (த–வ)

**Brighten**
Economics
Hall (Near DMI)
342, Stanley Rd, Jaf.
**ENGLISH**
GAQ/BA-Part I
Revision & Paper
**E.MAHESWARAN**
(BA,Dip-in-Eng
sp.Trd.Eng)
Fri-10-1/Sat,Sun-11-2)
**தமிழ்**
K. தர்மராஜா (MA)
BAI-Mon,Fri 8-9>2.1
3.1-Wed 3-5 9-10>2.2
3.2-Sat-Sun 1-2 Pm
BA Final (JA) 2-3 Pm

**வீடு விற்பனைக்கு**
யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள (இலங்கை வங்கி முன்னால்) உள்ள மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:0775794364
அன்ரனி வசந்தம் -0041523354367

**பணியாளர் தேவை**
Photoshop இல் டிசைனிங் செய்யத் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
மூர்த்தி டிஜிற்றல் கலர்லாப் மானிப்பாய்.
தொடர்பு : 077 949 5065

**வேலையாள்கள் தேவை**
*யாழ் நகரில் அமைந்துள்ள பிரபல்யமான வர்த்தக நிலையத்திற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. ஆரம்ப வேதனமாக
ஆண் - 12000/=
பெண் - 10000/=
*TV, றேடியோ திருத்துவதில் நிபுணத்துவம் பெற்ற திருத்துனர் தேவை.
மாதாந்த வேதனமாக - 30000/=
தொடர்பு : 021 222 6807

**தவறிவிட்டது**
I Phone 5 அளவெட்டிக்கும் மாவிட்டபுரத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு :077 864 3176

**கணக்காளர் தேவை**
நிறுவனம் ஒன்றிற்கு கணக்குப் பதிவுகளை மேற்கொள்வதற்கு கணக்காளர் தேவை. இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 021 222 3857

**தவறிவிட்டது**
யாழ். போதனா வைத்தியசாலையில் விடுதி இல. 20இல் கடமை புரியும் தாதிய உத்தியோகத்தரான திருமதி ஜொய்ஸ் ரஜனி அற்புதமணி அவர்களின் தேசிய அடையாள அட்டை (இல.775771712V), சாரதி அனுமதிப்பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம், உத்தியோக அடையாள அட்டை, வாகன காப்புறுதி என்பன அடங்கிய பேஸ் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
தொலைபேசி இல. : 021 2230713, 0779798647

**வாகனம் தேவை**
பொடி அடிக்கப்பட்ட "டிமோபட்டா" வாகனம் ஒப்பந்த அடிப்படையில் தேவை.
தொடர்பு:-
077 809 3975

**அருள்மிகு ஸ்ரீதேவி பூதேவி சமேத மஹாவிஷ்ணு தேவஸ்தானம்**
**157, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்**
**ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி (கோகுலாஷ்டமி)**

எதிர்வரும் 05.09.2015 சனிக்கிழமை ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு மாலை 3.30 மணிக்கு சந்தான கோபால சுவாமிக்கு அஷ்டோத்ர சங்காபிஷேகமும் தொடர்ந்து சந்தான கோபால சுவாமிக்கு வசந்த மண்டபப் பூஜையும் அஷ்டோத்ர நாம அர்ச்சனையும் திருத்தாலாட்டு வைபவமும் இடம்பெற்று சுவாமி உள்வீதி ... உறியடி நிகழ்வும் ... கும்.

தேவஸ்தானம்.

**யாழ் கைதடி கண்டி வீதி**
**திருவருள் மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானம்**
**சிவாச்சாரியார் உடன் தேவை**

குருக்கள் நிலையில் உள்ள அந்தண சிவாச்சாரியார் உடன் தேவை. சுயவிவரம், (தொ.பேசி.இல. உடன்) கொண்ட விண்ணப்பங்களை 18.09.2015 இற்கு முன் கிடைக்கத்தக்கதாக தலைவர்/ செயலாளர், பரிபாலனசபை, ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானம், கண்டி வீதி, கைதடி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தொடர்பு:-
077 554 7595

செயலாளர்
பரிபாலன சபை

## 31ஆம் நாள் நினைவலைகள்




மலர்வு ★ 06.12.1951
உதிர்வு ★ 05.08.2015

அமரர்
**பாசேந்திரன் ஜெயகோபால்**
*(ஓய்வுநிலைக் கணித ஆசான், யா/ஹாட்லிக் கல்லூரி)*

நல்லாசிரியனாய் நல்லொழுக்கம் புகட்டியே
நல்மாணாக்கரை ஆக்குதற்கே பாடுபட்டீர்–வல்ல
கணித பாடத்தைக் கற்கண்டாய்ப் புகட்டியே
பணிசெய்த பாங்கை பகர்வதற்கு வார்த்தையில்லை

நாடக நடிகனாய் நகைச்சுவை மன்னவனாய்
பாடகனாய்ப் பல்துறை வல்லவனாய் ~ மேடையிலே
நாடகமாடியே நல்லுலகு சென்றுவிட்டீர்
வாடிய நண்பனாய் வீடு பெற வேண்டுகின்றேன்



பருத்தித்துறை.

மு.தர்மலிங்கம் J.P
சத்தியப் பிரமாண மொழிபெயர்ப்பாளர்

(C)18597(10.15)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி கமலாசனி (ராணி) தில்லைநாதன்**

அன்னை மடியில்
06.05.1955

ஆண்டவன் அடியில்
06.09.2012



அன்பின் திருவுருவே அணையா ஒளிவிளக்கே
பண்பின் சிகரமே பாசத்தின் பிறப்பிடமே
விரைந்தோடிச் சென்று ஆண்டுகள் மூன்று
ஆனதே அம்மா
உங்கள் நினைவுடனேயே என்றும்
நாம் வாழ்கின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை
வேண்டுகின்றோம்.

44/8, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 13.08.2015 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் சின்னையா விபுலானந்தன்**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (04.09. 2015) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (05.09. 2015) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்திலும் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

மடம் ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7673, 0777 877 241

(62650)(10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்க்கட்சி

கூறினார்.

இதன் காரணமாக நாடாளுமன்றத்தில் ஆகக்கூடிய ஆசனங்களைப் பெற்றுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக நிய மிக்கத் தீர்மானித்துள்ளதாகச் சபாநாயகர் அறிவித்தார்.

இதன்படி இலங்கையின் எட்டாவது நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் கடமையாற்றவுள்ளார்.

32 ஆண்டுகளின் பின்னர் இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்குத் தமிழர் ஒருவர் நியமிக்கப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இதற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகக் கடமையாற்றியிருந்தார். 1977ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி முதல் 1983ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதி வரை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்.

கடந்த சில நாள்களாக இந்த எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு விவகாரம் இலங்கை அரசியலில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது. எதிர்க்கட்சித் தலைவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனையே நியமிக்கவேண்டும் என பிரதமர் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியினர் விடாப்பிடியாக இருந்தனர். இதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இணக்கம் தெரிவித்திருந்தார்.

தேசிய அரசில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அங்கம் வகிப்பதால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அந்தக் கட்சிக்கு வழங்குவது பொருத்தமானதல்ல என அரசியல் தலைவர்கள் உட்படப் பலரும் கருத்து வெளியிட்டிருந்தனர்.

ஆயினும் மகிந்த ஆதரவு அணியினர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைச் சம்பந்தனுக்கு வழங்குவதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆயினும் ஜனாதிபதி மைத்திரிபால இது குறித்து அதிரடி முடிவு ஒன்றை எடுப்பார் என்று எதிர்வு கூறப்பட்டிருந்தது. அதன்படி நேற்று சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

எதிர்க்கட்சித் தலைவராகச் சம்பந்தன் நியமிக்கப்பட்டமைக்கு, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இருக்கும் கட்சிகளில் ஒன்றான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ நாடாளுமன்றத்தில் தனது எதிர்ப்பை தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம நியமிக்கப்படவேண்டுமென்று அந்தக் கூட்டமைப்பின் 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை எழுத்து பூர்வமாக ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தாகவும் வீரவன்ச கூறினார்.

இலங்கைத் தமிழ் அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான இடத்தை இரா. சம்பந்தன் வகித்து வருகின்றார் . நேற்று எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள அவருக்கு வயது 82.

1933 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி இராஜவரோதயம் சம்பந்தன் திருகோணமலையில் பிறந்தார். தந்தை ஏ.இராஜவரோதயம் கல்ஓயா திட்டத்தின் களஞ்சியப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியவர்.

சம்பந்தன் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, குருநாகல் புனித அன்னம்மாள் கல்லூரி, திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரி மற்றும் மொறட்டுவ சென். செபஸ்தியார் கல்லூரி ஆகியவற்றில் பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்தார்.

பின்னர் இலங்கைச் சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று சட்டத்தரணி யானார். சம்பந்தனின் மனைவி லீலாவதி. சம்பந்தனுக்குச் சஞ்சீவன், செந்தூரன் மற்றும் கிரிசாந்தி ஆகிய மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

1956 ஆம் ஆண்டு சம்பந்தன் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்டார் . இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அப்போதைய தலைவர் எஸ். ஜே.வி. செல்வநாயகம் 1963 மற்றும் 1970 களில் தேர்தலில் போட்டியிடுமாறு சம்பந்தனை அழைத்த போதிலும் அதனை அவர் நிராகரித்திருந்தார்.

1972ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி, அகில இலங்கைத் தமிழர் பேரவை ஆகியன கூட்டாக இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டது.

1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் சம்பந்தன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டி, முதல் முதலாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார். அந்தத் தேர்தலில் இரண்டாவது பெரும்பான்மை பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சியாக நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்தது. எதிர்க்கட்சி தலைவராகக் கட்சியின் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் பதவியேற்றார்.

எவ்வாறெனினும் 1983ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் சம்பந்தன் உள்ளிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் நாடாளுமன்றைப் புறக்கணித்திருந்தனர். கறுப்பு ஜூலை தாக்குதல், 6ஆம் திருத்தச் சட்டம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் நாடாளுமன்ற அமர்வுகளை அவர்கள் புறக்கணித்திருந்தனர்.

தொடர்ச்சியாக நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணித்த காரணத்தால், 1983ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி சம்பந்தன் தனது நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்தார். பின்னர் 1989ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் சம்பந்தன் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். அதன் பின்னர் 2001ஆம் ஆண்டு முதல் இதுவரை திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ளார்.

சம்பந்தனின் நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்ட விபரங்கள் வருமாறு:-

1977 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் 15ஆயிரத்து 144 விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். தொடர்ந்து 1989 திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் 6ஆயிரத்து 48 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தார்.

தொடர்ந்து 2001 ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு அதன் தலைவராக திருகோணமலை மாவட்டத்தில் 40ஆயிரத்து 110 விருப்பு வாக்குகளையும், 2004 ஆம் ஆண்டு 47ஆயிரத்து 735 விருப்பு வாக்குகளையும், 2010 ஆம் ஆண்டு 24ஆயிரத்து 488 விருப்பு வாக்குகளையும், 2015 ஆம் ஆண்டு 33 ஆயிரத்து 834 விருப்பு வாக்குகளையும் பெற்றுத் தொடர்ச்சியாக நான்காவது முறை வெற்றி பெற்று நாடாளுமன்றுக்குத் தெரிவானார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-வ)

## விஜேவர்த்தன

நபர் யாழ்.மேல்நீதிமன்றில் விசாரணை மூலம் நிரபராதி எனக் கண்டு விடுதலை செய் யப்பட்டார்.

அது தொடர்பான வழக்கில் பொலிஸாரின் ஒழுங்கில்லாத புலன் விசாரணை உள்ளிட்ட பல காரணங்கள் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை என்று கூறிய மேல்நீதிமன்று, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த சந்தேகநபரை நேற்று விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

இந்த வழக்குத் தீர்ப்புக்காக யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இணுவிலில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 4 ஆம் திகதி குறித்த சம்பவம் இடம்பெற்றது. அங்குள்ள சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றினுள் வைத்து இளைஞர் ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டதோடு மற்றொருவர் படுகாயமடைந்திருந்தார். அதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டிருந்தது. அங்கு கூடிய இளைஞர்களும் பொதுமக்களும் சுட்டுக் கொலை செய்த இராணுவத்தினரைக் கைது செய்யுமாறுகோரிப் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன தலைமையிலான பொலிஸ் குழு ஒன்று இணுவிலுக்குச் சென்றுள்ளது. அங்கு பெரும் குழப்பம் ஏற்பட்டிருந்தது. அதனால் கலகம் அடக்கும் பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டனர். அவர்களுக்கு எதிராகவும் மக்கள் கிளர்ந்தெழுந்திருந்தனர். இரு தரப்புக்கும் இடையே முறுகல் நிலை காணப்பட்டிருந்தபோது பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டு வீசினர். அதனால் ஏற்பட்ட குழப்பத்திலிருந்து மீண்டபோது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜேவர்த்தனவை அங்கு காணவில்லை என்று பொலிஸ் சாட்சி ஒருவர் நீதிமன்றில் வழக்கின் போது சாட்சியம் அளித்துள்ளார்.

மற்றொரு பொலிஸ் அதிகாரி சாட்சியமளிக்கையில், குழப்பநிலையின் போது 3 பேர் தன்னுடன் கதைத்துக் கொண்டிருந்தனர். பின்னர் பார்த்த போது விஜேவர்த்தனவைக் காணவில்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸார் சிலரைக் கைது செய்தனர். அவர்களில் சிலரிடம் வாக்கு மூலம் பெற்ற பின்னர் விடுவித்திருந்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய புகைப் படங்களிலிருந்து சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் அவர் முக்கிய சாட்சியாக இருந்தார்.

அவர் சாட்சியமளிக்கையில்,

சம்பவ இடத்தில் குழப்பம் ஏற்பட்ட போது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீசினர். அதனால் எனது மேலங்கியை (ரிசேர்ட்) கழற்றிக் கண்ணைத் துடைத்தேன். இதன்போது பொலிஸ் அத்தியட்சகர் அணிந்திருந்து சேர்ட்டைக் கழற்றிய ஒருவர் எனது ரீசேர்ட்டைப் பறித்து விஜேவர்த்தனவுக்கு அணிவித்தார். அதனைத் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் அவரைச் சிலர் ஏற்றிச் சென்றனர். அவரின் பின்னால் மேலும் சிலர் மோட்டார் சைக்கிளில் சென்றனர் என்று சாட்சியமளித்துள்ளார்.

பின்னர் இணுவில் பாலாவோடைப் பகுதியில் உள்ள ஒழுங்கை ஒன்றினுள் இருந்து பொலிஸ் அத்தியட்சகர் சடலமாக மீட்கப்பட்டார். அவரது சீருடையும் அவரது சடலத்தின் மேல் வீசப்பட்டிருந்தது என்றும் சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற காலத்தில் பிரதேசப் பொறுப்பாளராக இருந்தார் என்று கூறப்படும் புலி உறுப்பினரான பிரவீன் சுஹராஜ் என்பவர் பொலிஸ் அத்தியட்சகரின் கொலைக் குற்றச்சாட்டில் 2009 ஆம் ஆண்டு போர் நிறைவடையும் நிலையில் கைது செய்யப்பட்டார். அவர் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 2013 ஜூன் 17 ஆம் திகதி அவர் தொடர்பான வழக்கு யாழ். மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. அது தொடர்பான விசாரணை நடைபெற்று வந்த நிலையிலேயே நேற்றுத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. அந்தத் தீர்ப்பிலேயே நீதிபதி குறித்த விடயங்களைச் சுட்டிக் காட்டினார்.

அதில் ஒரு கை இல்லாத கோபி என்பவரது பெயரும் எதிரியாகப் பொலிஸாரால் சாட்சியம் கூறப்பட்டது. ஆனால் அவ்வாறான நபர் இருக்கவில்லை. இதுதவிர புலன் விசாரணை ஒழுங்கில்லை, ஒழுங்கு முறையான விசாரணை நடத்தப்படவில்லை ஒழுங்கான சந்தேக நபர்கள் முற்படுத்தப்படவில்லை. இந்த வழக்குடன் தொடர்புபட்டதாகக் குற்றம் சுமத்தும் பிரவீன் சுஹராஜ் என்பவர் மீதான குற்றச்சாட்டு வழக்குத் தொடுநர் தரப்பால் போதியளவில் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை என்று கூறிய மேல்நீதிமன்று அவரை நேற்று விடுதலை செய்தது.

(த-4)

## தமிழ்த்

இரா. சம்பந்தன் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

எட்டாவது நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட இரா.சம்பந்தன், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் ஆற்றிய கன்னி உரையின்போதே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றியபோது,

தேசிய நலன்கருதி அரசால் முன்வைக்கப்படும் விடயங்கள் நாட்டுமக்களுக்கு நலன் அளிப்பதாக இருந்தால், அதற்கு நாம் முழு ஆதரவையும் வழங்குவோம். அதேவேளை, அவசியம் ஏற்படின் அவற்றை ஆணித்தரமாக எதிர்ப்போம்.

சபையில் வினைத்திறன் மிக்க ஓர் அரசியல் கட்சியாகச் செயற்படுவோம். தேசிய நலன் கருதி உருவாக்கப்பட்டுள்ள தேசிய அரசின் மூலம் நாட்டில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நல்லிணக்க அடிப்படையில் தீர்வு காணமுடியும். இது அவசியமான ஒன்றே. அதேவேளை, ஒவ்வொருவரையும் திருப்திப் படுத்தும் வகையில் அமைச் சரவையை பெரிதாக்குவது நாட்டுக்கு ஏற்றதல்ல.

கடந்த காலங்களில் தேவைக்காக பெருந்தொகையான அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். அதனால் தேவையற்ற பிரச்சினைகளும் குளறுபடிகளும் ஏற்பட்டன.

நமது அண்டைநாடான இந்தியாவில் 120 கோடி மக்கள் வாழ்கின்றனர். ஆனால், அங்கு 65 அமைச்சர்கள் மட் டுமே இருக்கின்றனர். ஆனால், ஒரு கைப்பிடி அளவிலான இங்கு கணக்கிட முடியாத அமைச்சர்கள் இருப்பது ஒவ்வாத ஏற்கவும் முடியாத ஒன்று. இதனை அரசு கவனத்திற்கொள்ள வேண்டும். இந்தியாவைப் பின்பற்றி பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்"- எனக் கூறினார்.

அதேவேளை, என்னை எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவுசெய்தமைக்காக அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சபாநாயகர் ஜனநாயகத்தை மதித்து நடுநிலையாக செயற்பட்டுள்ளார். அந்த அடிப்படையில் கூடுதலான - பெரும்பான்மை உள்ள எம்மை எதிர்க்கட்சித் தலைவராக நியமித்துள்ளார். அவருக்கு நன்றி செலுத்துகின்றேன். என்னை இந்த நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்த திருகோணமலை மாவட்ட மக்களுக்கும், நாடாளுமன்றத்தில் குழுத் தலைவராக என்னை தெரிவுசெய்த எனது சக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்"-என்றார் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன்.

(த-சி)

## தேசிய அரசு

மன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க கருத்து வெளியிட்டார்.

19ஆவது திருத்தச் சட்டத்தின்படி தேசிய அரசு என்பது நாடாளுமன்றில் அதிக ஆசனத்தைப் பெறும் கட்சி, நாடாளுன்றில் உள்ள ஏனைய சுயாதீனக் குழுக்களுடன் இணைந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுடன் இணைந்து அமைக்கும் அரசு என அவர் கூறினார்.

அப்படியாயின் நாடாளுமன்றில் அதிக ஆசனம் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, ஏனைய சுயாதீனக் குழுக்கள் அல்லது கட்சிகளுடன் இணைந்து அமைக்கும் அரசே தேசிய அரசு. மாறாக சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் மாத்திரம் ஒப்பந்தம் செய்து அமைக்கும் ஆட்சி தேசிய அரசாக அமையாது என அநுரகுமார குறிப்பிட்டார்.

பிரதான கட்சிகள் மூன்று ஒன்றிணைந்தே தேசிய அரசு அமைத்துள்ளதாகவும், 19ஆவது திருத்தம் செய்யும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி ஆகியன தேசிய அரசில் இணைந்து கொள்ள முடியாது என்று கூறியதால் அந்தச் சமயத்துக்கு ஏற்ப யாப்புத் திருத்தம் செய்யப்பட்டதாகவும் ரணில் விக்கிரமசிங்க பதிலளித்தார். இங்கிலாந்து நாடாளுமன்றில் இவ்வாறான சந்தர்ப்பம் ஏற்பட்டபோது மூன்று கட்சிகள் மாத்திரம் இணைந்து தேசிய அரசு அமைத்ததாகவும் பிரதமர் கூறினார்.

இதேவேளை, தேசிய அரசு தொடர்பில் வழங்கப்பட்டுள்ள வியாக்கியானம் தவறு என்றும் ஜனாதிபதி கூட்டு அரசு ஒன்றை அமைக்க முடியுமே தவிர, அதற்குத் தேசிய அரசு என்று பெயரிட முடியாது என்றும், தேசிய அரசு என்றால் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

எனினும் அனைத்துக் கட்சிகளும் இணைந்தது தேசிய அரசு அல்ல என்றும், அதிகூடிய ஆசனம் பெறும் கட்சி இரண்டாவது அதிக ஆசனம் பெறும் கட்சியுடன் கூட்டிணைந்து அமைப்பதே தேசிய அரசாகும், என்றும், நாடாளுன்றில் உள்ள ஏனைய அனைத்துக் கட்சிகளுடனும் என்ற பதம் 19ஆவது திருத்தத்தில் பயன்படுத்தப்படவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தேசிய அரசு குறித்த வியாக்கியானங்களில் தெளிவு இல்லை என்பதால் சபாநாயகர் சட்டமா அதிபரின் ஆலோசனைப் பெற்று தீர்ப்பு அளிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இதேவேளை, நாடாளுமன்றில் அதிகூடிய பெரும்பான்மை பெறும் கட்சி ஏனைய பெரும்பான்மை பெறும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கட்சிகளை இணைத்து தேசிய அரசு அமைக்க முடியும் என்றும், இவ் விடயத்தில் உயர் நீதிமன்றின் வியாக்கியானத்தைப் பெற வேண்டியதில்லை என்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

இறுதியில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைவராக ஜனாதிபதியும் ஐக்கிய.தேசியக் கட்சியின் தலைவராக தானும் இருப்பதால் தேசிய அரசு அமைக்க இதை விட வேறென்ன வேண்டும் என்று கேள்வி எழுப்பினார்.

(த-வ)

## குரங்குகள்

இதன்போது சிறிலங்க சுதந்திரக் கட்சி உறுப்பினர் குமார வெல்கமவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்குமாறு கோரி 56 உறுப்பினர்கள் கையொப்பமிட்ட கடிதம் ஒன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதாக விமல் வீரவன்ச தெரிவித்தார். அவ்வாறிருக்கும்போது இந்த நியமனம் செல்லுபடியாகுமா என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் கரு ஜயசூரிய, அவ்வாறானதொரு கடிதம் தனக்குக் கிடைக்கப் பெறவில்லை என்றார்.

இதனையடுத்து கருத்து தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவராக ஆர். சம்பந்தனை நியமிப்பதாகச் சபாநாயகர் அறிவித்து விட்டார். இனிமேல் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதால் எந்தப் பயனும் இல்லை -என்றார். அத்துடன் நேற்றுமுன்தினம் பொலனறுவை கூட்டத்துக்குச் சென்றிருந்தபோது ஜனாதிபதியுடன் இது தொடர்பில் கதைத்திருக்க வேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

பிரதமர் உரையாற்றும்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் கூச்சலிட்டனர்.

இதன்போது பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஐஸே உட்காரும்.குரங்குகள் போன்று செயற்பட வேண்டாம் என்றும், முன்னைய நாடாளுமன்றம் போன்று இனிமேல் நாடாளுமன்றத்தை கொண்டு செல்ல இடமளிக்கப்படமாட்டாது என்றும் கூறினார்.

(த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச் சட்டம் உள்ளக விசாரணைக்கு சவால்

## சுட்டிக்காட்டுகிறது கபே அமைப்பு

கொழும்பு, செப். 4
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும்வரை தனிநபர் சுதந்திரத் திற்கு மதிப்பளிக்கும் நாடாக இலங்கை மாறாது. அத்துடன், பொறுப்புக்கூறல் தொடர்பான உள்ளகப் பொறிமுறை பற்றிய பேச்சு நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க முடியா விட்டால் அது அரசின் உண்மைத் தன்மை குறித்து கேள்வி எழுப்பும்" என்று சுதந்திரமானதும் – நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

மேலும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது, மனித உரிமைகளை நிலைநாட்டுவது தொடர்பில் ஜெனிவா மாநாட்டில் முன்வைக்கக் கூடிய மிகச் சிறந்த பதிலாக அமையும் என்றும் தெரிவித்துள்ள அவர், இந்தச் சட்டத்தை நீக்க அரசு முன்வருமானால், ஜே.வி.பி. மற்றும் வடக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள் ஆதரவளிக்கும். அரசுக்கு உண் மையான அரசியல் நோக்க மொன்று இருக்குமாயின், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க அதற்கு நடவடிக்கை எடுக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச இணக்கத்தினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமை தொடர்பான ஏற்பாடுகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தி னூடாக மிக அதிகமாக மீறப்படுகின்றன. தற்காலிக சட்ட மாக முதலில் நடைமுறைப்படுத் தப்பட்ட பயங்கர வாதத் தடைச் சட்டம், தற்போது நாட்டின் சட்டத் தின் ஒரு பகுதியாக மாறியுள்ளது. அவசர காலச் சட்டம்நீடிக்கப்பட்டு ஒரு காலத்திற்கு முன்னர் பயன் படுத்தப்பட்டு, தற்போது நீக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தினூடாக அவசர காலச் சட்டத்தின் உள்ளடக் கங்களை அதேபோன்றோ அல்லது அதைவிட அதிகமாகவோ நடைமுறைப்படுத்தக்கூடிய நிலைமை உள்ளது. உதாரணமாக பயங்கர வாதத் தடைச் சட்டத் தின்கீழ், நாட்டிலுள்ள சிவில் பிரஜைகள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களுக்கு அழுத்தம் கொடுக்க வாய்ப்புள்ளது.

பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பில் 180 நாள்களோ அல்லது அதற்கு அதிகூடிய நாள்களோ நபரொருவரைத் தடுத்துவைத்திருக்கும் வாய்ப்பு இதனூடாகக் கிடைக்கிறது. இலங்கையில் சித்திரவதைகளை இல்லாது செய்யவேண்டுமாயின்– சட்டவிரோத கைதுகள், இரகசியமாகத் தடுத்துவைத்தல், காணாமற்போகச் செய்தல் போன்றவற்றை முழுமையாகத் தடுக்கவேண்டுமாயின், பயங்கர வாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்கவேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி 2014ஆம் ஆண்டு மனித உரிமை செயற்பாட்டாளரான ருகி பெர்னாண்டோ, பாலேந்திரன் ஜெயகுமாரி ஆகியோர் தடுத்துவைத்து விசாரிக்கப்பட்டனர். 2015 ஜனவரி 8ஆம் திகதி பயங் கரவாத விசாரணைப் பிரிவினரால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினூடாக 18 பேர் கைது செய்யப்பட்டு தடுத்துவைக் கப்பட்டுள்ளனர் என்பது கபே மற்றும் மனித உரிமைகள் நிலையத்தின் ஆய்வாகும்.

தனிநபர் சுதந்திரத்தை இல்லாதொழிப்பதற்காக பயங்கரவாதத் தடைச்சட்டம் மீண்டும் ஒருமுறை பயன்படுத்தப் படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்காக சட்டத்தை நீக்குதல் மற்றும் அதிகாரமற்றதாக்குதல் குறித்து தெரிவுசெய்வதற்கான சந்தர்ப்பம் எமக்குள்ளது. அவ்வாறில்லாவிட்டால் சட்டத்தின் அழுத்தம் மிக்க பகுதிகளான 2, 3, 4 ஆகியன தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது நாடாளுமன்றத்தின் பொறுப்பாகும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் 1979 ஆம் ஆண்டு தற்காலிக ஏற்பாடாக கொண்டுவரப்பட்டு, பின்னர் 1982இல் 10ஆம் இலக்கத்தின் கீழும், 1988இல் 22ஆம் இலக்கத்தின் கீழும் நிலையான சட்டமாக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என் பதே தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் பிரதான கோரிக் கையாக உள்ளது. இதை நீக்க அரசு முன்வருமானால், ஜே.வி.பி. மற்றும் வடக்கிலுள்ள தமிழ்க் கட்சி கள் ஆதரவளிக்கும். அரசுக்கு உண்மையான அரசியல் நோக்க மொன்று இருக்குமாயின், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க அதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

இந்த நாட்டில் அடக்குமுறையுடைய சட்டத்தை நீக்குவது மட்டுமல்லாது, மனித உரிமைகளை நிலைநாட்டுவது தொடர்பில் ஜெனிவா மாநாட்டில் முன்வைக்கக்கூடிய மிகச் சிறந்த பதிலாக இது அமையும்.

பொறுப்புக்கூறல் தொடர்பான உள்ளகப் பொறிமுறை பற்றி பேச்சு நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் பயங்கர வாதத் தடைச்சட்டத்தை நீக்க முடியா விட்டால், அது அரசின் உண்மைத் தன்மை குறித்து கேள்வி எழுப்புவதாக அமைந்துவிடும்.

நாட்டிலுள்ள மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் பயங்கர வாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக நீண்டகாலமாக தமது சக்தி, வளம், அறிவு ஆகிய வற்றைப் பயன்படுத்தி, பல்வேறு ஊடகங்கள் வாயிலாக மக்களைத் தெளிவுபடுத்தியுள்ளனர். அனை வரும் இணைந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் பயணத் தில் வெற்றியடைவது தற்போது எமது தேவையாக உள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–சி)



# எனது பயணம் மெதுவானதே

## சு.க. மாநாட்டில் மைத்திரி

கொழும்பு, செப் 4
நாட்டுக்காக அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு இடம்பெறவுள்ள எனது பயணம் வேகமான பயணம் அல்ல. மெதுவான பயணம் என்பதால் மீள்திருப்பம் இல்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியை நாட்டில் அமைப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக கட்சியை முழுமையாக மறுசீரமைப்புக்கு உட்படுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 64 ஆவது மாநாடு பொலனறுவை –கதுறுவெலவில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை பிற்பகல் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதிக்கு அருகில் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச, முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச, முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரத்ன, கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க, சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பேராசிரியர் விஸ்வ வர்ண குலசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுசில் பிரேம ஜயந்த, அநுர பிரியதர்சன யாப்பா, ஏ.எச்.எம். பௌசி, மகிந்த சமரசிங்க, நிமல் சிறிபாலடி சில்வா உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

எனினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் போசகரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாடு சென்றிருப்பதால் நிறைவாண்டு நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி மைத்திரி, எனது பயணம் மிகவும் வேகமற்றது. அமைதியான, பின் திரும்பாத வேகமற்ற பயணமே நான் பயணிக்கின்றேன். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியை அமைப்பதற்கு மனசாட் சிக்கு ஏற்ப தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள் பல உள்ளன. அதனால் அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய கட்சியாக கட்சி முழுமையாக மறுசீரமைக்கப்பட வேண்டும்.

1956 ஆம் ஆண்டு முதல் இதுவரைக் காலமும் கட்சிகளுக்கு இடையில் மற்றும் அரசியல்வாதிகளுக்கு இடையிலான போட்டித் தன்மையும், வைராக்கியமும் காணப்பட்டது. எனினும் தற்போது நாட்டின் தேவைக்கு ஏற்ப அனைத்தையும் மாற்றியமைக்கும் அவசியம் காணப்படுகிறது.

வைராக்கிய அரசியலை விட்டு கட்சியை மறுசீரமைப்புக்கு உட்படுத்தி புதியதொரு பாதையில் பயணிக்க வேண்டிய பாதையை அடையாளப்படுத்தி, செய்யக் கூடியவை மற்றும் செய்யக் கூடாதவை என்பவற்றை அறிந்துகொண்டு, புரிந்து கொண்டு முன்செல்ல வேண்டும்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சவால்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் அனைவருக்கும் தெளிவு அவசியம்–என்றார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் மஹிந்த ராஜபக்சவின் தலைமைத்துவத்தில் 30 வருடகாலமாக நீடித்த போரை முடிவுக்கு கொண்டு வர முடிந்ததாக ஜனாதிபதி இதன் போது கூறினார். (த–சி)

# மோடியுடன் சந்திரிகா நேற்று முக்கிய பேச்சு



புதுடில்லி, செப். 4
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி புதுடில்லியில் சந்தித்துப் பேசியுள்ளார். புதுடில்லியில் நேற்று ஆரம்பமான சர்வதேச இந்து – பௌத்த மாநாட்டின் போதே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

பா.ஜ.க ஆதரவு விவேகானந்தா சர்வதேச நிறுவகம், ரோக்கியோ பவுண்டேசன், சர்வதேச பௌத்த சம்மேளனம் ஆகியன இணைந்து ஒழுங்கு செய்துள்ள இந்த மாநாட்டை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆரம்பித்து வைத்தார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இதில் கலந்து கொண்டுள்ளார்.

அங்கு உரையாற்றிய சந்திரிகா குமாரதுங்க–

தீர்க்கப்படாத பல பிரச்சினைகளுக்குப் பயங்கரவாதமே காரணமாகும். அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கக் கூடிய வகையிலான நீடித்து நிலைக்கும் அபிவிருத்திகள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

அனைத்து இன சமூகங்களையும் ஒரே விதமாக நடத்துவது மிகவும் அவசியமானது. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமாயின் [illegible] அவசியமானது என குறிப்பிட்டார்.(த–வ)

# போர்க்குற்ற விசாரணையில் சர்வதேசத் தலையீடு அவசியம்

## சர்வதேச நெருக்கடிகள் குழுவின் பிரதிநிதி சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 4
இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து சர்வ தேச உதவியுடன் விசாரணை நடத்தப்படவேண்டுமென சர்வதேச நெருக்கடிகள் குழுவின் இலங்கைத் திட்ட இயக்குநர் அலன் கீனன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை சபையில் இலங்கையுடன் இணைந்து தீர்மானத்தைக் கொண்டு வரப்போவதாக அமெரிக்கா கூறியிருப்பது குறித்துப் பேசிய அலன், போர்க் குற்றம் குறித்த எந்த ஒரு முயற்சியிலும் சாட்சிகளைப் பாதுகாப்பது உள்ளிட்ட விடயங்களில் சர்வதேச உதவி தேவை என்று குறிப்பிட்டார். பி.பி. சிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:–

குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்கும் எந்த ஒரு முயற்சியிலும் நம்பகத் தன்மை இருக்கவேண்டுமானல், சாட்சிகளின் பாதுகாப்பு, புலனாய்வு, விசாரணை ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அளவில் சர்வதேசத் தலையீடு தேவை.

இலங்கையில் பொலிஸ், நீதித் துறை போன்றவற்றில் திறமையானவர்கள் இருந்தாலும் கடந்த 30 - 40 ஆண்டுகளில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவர்கள் வெகுகுறைவாகவே தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த 30–40 ஆண்டுகளில் மனித உரிமை மீறலுக்காகத் தண்டிக்கப்பட்டவர்களை நீங்கள் விரல்விட்டு எண்ணிவிடலாம். பெரும்பாலும் கீழ்நிலைப் படையினரும் பொலிஸாருமே தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆணையிட்டவர்கள் தண்டிக்கப்படுவதில்லை.

அதனால், சர்வதேச உதவியின்றிப் போர்க்குற்றம் போன்ற அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களை விசாரிப்பதற்கு இலங்கையால் முடியுமா என்ற சந்தேகம் உள்ளது.

இலங்கையில் நிரந்தத் தீர்வு வேண்டுமெனில், மாகாண சபைகளை வலுப்படுத்தவேண்டும். வடக்கு–கிழக்கு மாகாணம் போன்றவற்றுக்குப் போதுமான வள ஆதாரங்களை அளிக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, குறிப்பாக வட மாகாண சபை முதல்வர் அந்த அமைப்பை செயற்பட வைக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறார். பணம், பயிற்சி போன்றவற்றை அளிப்பதன் மூலம் மத்திய அரசு அதனை ஆதரிக்க வேண்டும்–என்றார். (த–வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப்.4
வவுனியா லீக்கின் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான பண்டாரவன்னியன் வெற்றிக் கிண்ணத்துக்கான 7 அணிகள் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபைமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வடதாரகை அணியை எதிர்த்து அல்ஹிஜிரா அணி மோதவுள்ளது. (ம-23-422)

### யங் ஹென்றிஸ் அபார வெற்றி

யாழ்ப்பாணம், செப். 4
வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமாரன் அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை யங் ஹென்றிஸ் அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

### யங்கம்பன்ஸ், டயமன்ஸ் காலிறுதிக்கு தகுதி

யாழ்ப்பாணம், செப். 4
வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து சென்.மைக்கல் அணி மோதிக் கொண்டது. இதில் யங்கம்பன்ஸ் அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து குப்பிளான் விக்கினேஸ்வரா அணி மோதிக்கொண்டது. இதில் வதிரி டயமன்ஸ் அணி 7:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது. (ம-23)

# சம்பியனாகியது யாழ். மத்தி

## சொந்தத் தொடரில் பற்றிக்ஸை வீழ்த்தி



யாழ்ப்பாணம், செப். 4
யாழ். மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரில் யாழ். மத்திய கல்லூரி அணி சம்பியனாகியது.
நேற்று பிற்பகல் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதியது. மத்திய கல்லூரிக்கு பழக்கப்பட்ட மைதானம் என்ற காரணத்தினாலும், சொந்தத் தொடர் என்ற காரணத்தினாலும் மத்தியின் ஆதிக்கம் சிறிது அதிகரித்தே காணப்படும் என்ற எதிர்பார்ப்பு ஆட்டத்தின் ஆரம் பத்தில் சற்று நிலவவே செய்தது. ஆனால் இந்த எதிர்பார்ப்புக்களையெல்லாம் சென்.பற்றிக்ஸ் மிக இலகுவாக ஊதித்தள்ளியது. இரு அணிகளதும் போராட்ட குணத்துக்கேற்ப ஆட்டத்தின் விறுவிறுப்புத் தன்மைக்கு பஞ்சம் இருக்கவில்லை. ரசிகர்களின் ஆரவாரமே மிச்சமாக கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் முதல்பாதி முடிவடைந்தது.
இரண்டாம் பாதியின் பதின்ம நிமிடங்கள் வரை கிட்டத்தட்ட அதே நிலைமைதான். ஒருவாறாக மூலை உதையில் முதலாவது கோலைப் பதிவுசெய்தது யாழ்.மத்தி. பழி தீர்க்க பலமுறை முனைப்புக்காட்டினர் பத்திரிசியாரின் மைந்தர்கள். விடுவதாய் இல்லை மத்தியின் வீரர்கள். இருப்பினும் பல முனைப்பு போராட்டங்களின் விளைவாக ஆட்டம் நிறைவடைய ஒரு நிமிடம் இருக்கையில் திரில் கோலை விளாசி 1-1 என்று ஆட்டத்தை சமநிலைப்படுத்தியது பற்றிக்ஸ்.
தற்பொழுது சமநிலைத்தவிர்ப்பில் முடிவு தீர்மானிக்கப்பட வேண்டிய நிலைமை. முடிவில் 4-3 என்ற கோல் கணக்கில் சொந்தத் தொடரின் கிண்ணத்தை சுவீகரித்தது யாழ். மத்தி. மொத்தத்தில் மத்தியின் கிண்ணம் மத்திக்கே எழுதப்பட்டது. (ம-23)

## சென்.மேரிஸ், சென்.ஜோசப் அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றன

யாழ்ப்பாணம், செப். 4
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் மன்னார் சென்.ஜோசப் விளையாட்டுக் கழகம் என்பன சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

**சென்.மேரிஸ் எதிர் வல்வை**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகத்தின் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில்நாவாந்துறைசென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழகம் மோதியது. இரு அணியினரும் காட்டிய போராட்ட குணத்துக்கு ஏற்ப ஆட்டத்தின் ஆரம்பம் மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது. ஆட்டத்தின் சமநிலைத்தன்மை முதல் 15 நிமிடங்கள் வரை மட்டுமே நிலைத்திருந்தது. 16 ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் வீரர் நிதர்சன் அருமையான கோல் ஒன்றை அடித்து எதிரணியிரை திக்குமுக்காடச்செய்தார். வல்வை பழிதீர்க்க பலதடவைகள் முயற்சி மேற்கொண்ட போதிலும் எதுவும் பயனளிக்கவில்லை. 1-0 என்ற சென்.மேரிஸின் ஆதிக்கத்துடன் முதல்பாதி முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாதியின் போராட்டம் முதல்பாதியினை விட அதிகரித்தே காணப்பட்டது. இருப்பினும் இரண்டு அணிகளுக்கும் போராட்டமே மிச்சமானது. மேலதிகமான கோல்கள் எதுவும் பதியப்படாத நிலையில் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் சென்.மேரிஸ் வெற்றிபெற்று சுப்பர் 8 அணிகளுள் ஒன்றாக தகுதி பெற்றது. சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தியதுடன் ஆட்டத்தின் ஒரே கோலினையும் அடித்த நிதர்சன் ஆட்டநாயகனாக தெரிவுசெய்யப்பட்டார்.



**பொம்மர்ஸ் எதிர் சென்.ஜோசப்**

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மன்னார் சென். ஜோசப் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டத்தின் முதல்பாதிவரை கோல்கணக்கில் சமலிலைத் தன்மையே பேணப்பட்டது. ஒரு கோலேனும் எந்த ஒரு அணியாலும் பதியப்பட முடியவில்லை. ஆனால் முதல் பாதியின் போராட்ட குணம் இரண்டாவது பாதியில் இருக்கவில்லை. 7 ஆவது நிமிடத்தில் சென்.ஜோசப் வீரர் ரெக்சன் முதலாவது கோலினை போட தொடர்ந்து 17 ஆவது நிமிடத்தில் டிக்கோனி மற்றுமொரு கோலினையும் விளாசினார். ஆட்டம் நிறைவடைய 2 நிமிடங்கள் இருக்கும் போது பொம்மர்ஸ் அணியினர் போதிய வெளிச்சம் இன்மை என்று தெரிவித்து தொடர்ந்து விளையாட மறுத்தனர். எனினும் நடுவர்களின் அறிக்கையில் மிகுதி நேரவிளையாட்டைத் தொடர போதுமான வெளிச்சம் காணப்பட்டதாகச் சுட்டிக் காட்டப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பாட்டாளர்களால் சென்.ஜோசப் அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப் பட்டது. (ம-108)



### போராடி வெற்றிபெற்றது ஈஸ்வரன்

மாங்குளம், செப். 4
வவுனியா உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பண்டாரவன்னியன் வெற்றிக் கிண்ணத்துக்காக அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையே நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரில் கோல்டன் பிரதர்ஸ் அணியை வீழ்த்தியது ஈஸ்வரன் அணி.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆட்டம் ஆரம்பித்து 13வது நிமிடத்தில் ஈஸ்வரன் அணியைச் சேர்ந்த சுகந்தன் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார். மேலதிகமான கோல்கள் எதுவும் பதியப்படாத நிலையில் 1:0 என்ற கோல் கணக்கில் ஈஸ்வரன் அணி முன்னிலைவகித்தது. இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கியபோது இரு அணிகளும் ஒன்றுக் கொன்று சளைத்தவர்களல்ல என்பதை நிரூபித்த போதும் ஈஸ்வரன் அணி தனது பின்களத்தை பலப்படுத்தியமையால் கோல்டன்பிற தேஸ் அணியின் கோல் முயற்சிகள் தவிடு பொடியாக்கப் பட்டுக் கொண் டிருந்தன. இதனால் ஆட்டநேரமுடிவில் ஈஸ்வரன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-422)

## சென்.மேரிஸ் எதிர் நவஜீவன்ஸ் அரையிறுதியில் இன்று மோதல்

யாழ்ப்பாணம், செப். 4
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் கொண்ட உதைபந்தாட்டத்தொடரின் இரண்டாவது அரையிறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது.
அரையிறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்மா, சந்திமால் இருவருக்கும் தடை

## திரிமன்னே, பிரசாத் மீதும் நடவடிக்கை

இலங்கை – இந்தியா அணிகளுக் கிடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் நான்காவது நாளின் போது கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட இசாந் சர்மா, பிரசாத், சந்திமால், திரிமன்னே ஆகிய நால்வருக்கும் அபராதம் விதித்துள்ளதுடன் சந்திமால், சர்மா ஆகிய இருவருக்கும் ஒரு ஆட்டத்தில் விளையாடுவதற்குத் தடையும் விதித்துள்ளது ஐ.சி.சி.

சர்மா துடுப்பெடுத்தாடும்போது பிரசாத் தொடர்ச்சியாக நான்கு பவுன்சர்களை வீசினார்.

ஐந்தாவது பந்தைதுடுப்பில் எடுத்து ஒரு ஓட்டத்தை நிறைவு செய்தார் சர்மா. பின்னர் பிரசாத்தை நோக்கி இன்னமும் பவுன்சர் வீசுமாறு வெறுப் பேற்றும் விதமாக சைகை மூலம் தெரிவித்தார்.

பதிலுக்குப் பிரசாத்தும் வாக்கு வாதத்தில் ஈடுபட சந்திமாலும் திரிமன்னேயும் இடையிட்டு பிரசாத்துக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்தனர். சந்திமால் சர்மாவுக்கு நேராகச் சென்று மோதிவிட்டுச் சென்றார். இத்தனை சம்பவங்களையும் ஒளிப்பதிவினூடாகப் பார்வையிட்ட ஐ.சி.சி. நால்வருக்கும் அபராதம் விதித்துள்ளதுடன் சர்மாவுக்கும் சந்திமாலுக்கும் ஓர் ஆட்டத்தில் விளையாட தடையும் விதித்துள்ளது. (ம)





# சங்காவின் ருவிட்டரில் ஆபாசம்

இலங்கை அணியின் முன்னாள் நம்பிக்கை நட்சத்திரமான சங்காவின் ருவிட்டர் கணக்கை இனந் தெரியாதவர்கள் கைப்பற்றி அதில் ஆபாசப் படத்தைப் பதிவிட்டுள்ளனர்.

இது குறித்து சங்கக்கார வெளியிட்டுள்ள பதிவில் அன்பான நண்பர்களே, எனது ருவிட்டர் பக்கத்தை எவரோ கைப்பற்றி விட்டனர். என்னுடைய கணக்கை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரவேண்டும். இது நம்பமுடியாததாக இருக்கிறது. இதற்காக வருந்துகிறேன். அடுத்து நான் ருவிட் செய்யும் வரை அனைத்துச் செய்திகளையும் புறக்கணியுங்கள் என்றுள்ளது. சங்காவின் ருவிட்டரை கிட்டத்தட்ட 5 லட்சம் ரசிகர்கள் பின் தொடர்கிறார்கள். (ம)

# பந்தை எறிகிறார் கௌசால்

## நடுவர்கள் முறைப்பாடு

இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் தரிந்து கௌசால் விதிமுறைகளை மீறிப் பந்துவீசுவதாக நடுவர்களால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் ஆட்டத்தில் கௌசாலின் பந்துவீச்சு விதிமுறைகளை மீறி அமைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் 14 நாள்களுக்குள் அவரது பந்து வீச்சைச் சோதனை செய்ய சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை முடிவெடுத்துள்ளது. இதன் முடிவுகள் வரும் வரை அவர் தொடர்ந்து சர்வதேச ஆட்டங்களில் பங்கேற்கலாம்.

முன்னணி சுழற்பந்து வீச்சாளரான கேரத் ஓய்வினை நெருங்கும் நிலையில் அந்த இடத்தை 22 வயதேயான கௌசால் நிரப்புவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. கௌசாலின் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டால் அது இலங்கைக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்திவிடும். (ம)



# இந்திய அணிக்கு குவியும் வாழ்த்துக்கள்

இந்தியா – இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் தொடரை 2–1 என்ற கணக்கில் கைப்பற்றியது இந்தியா. இலங்கை மண்ணில் இந்தியா தொடரைக் கைப்பற்றுவது 22 வருடத்திற்குப் பின்னர் இதுவே முதல் தடவை. இந்தச் சாதனைக்காக கோக்லி தலைமையிலான இந்திய அணிக்கு சச்சின் உள்ளிட்ட முன்னாள் ஜாம்பவான்கள் பலரும் ருவிட்டரில் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.


**சச்சின் –** வெற்றிபெற்ற இந்திய அணிக்கு வாழ்த்துக்கள். தொடரில் 0–1என பின்தங்கிய நிலையில் இருந்து மிகச்சிறப்பாக முன்னேறி தொடரை கைப்பற்றியது அபாரமானது. இந்திய அணி மேலும் அதிக வெற்றிகள் பெற வாழ்த்துகிறேன். **வி.வி.எஸ். லக்ஸ்மன் –** வியக்கத்தக்க வகை யில் தொடரை வென்றதற்காக இந்திய அணிக்கு எனது வாழ்த்துக்கள். 0–1 என பின்தங்கிய நிலையில் இருந்து மீண்டு 2–1 என தொடரை கைப்பற்றியதற்காக உண்மையிலேயே மிக சந்தோகம் அடைகிறேன். இந்த வெற்றி தொடரட்டும். **கும்ளே –** தொடரை வென்ற இந்திய அணிக்கு வாழ்த் துக்கள். விராட் கோக்லி மற்றும் இந்திய அணி வீரர்கள் சிறப்பாக செயல்பட்டனர்
**தவான் –** இந்திய அணிக்கும், முதல் தொடரை வென்ற கோக்லிக்கும், 200 இலக்குகளை வீழ்த்திய இசாந்த சர்மாவிற்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்கள். (ம)

# முதலிடத்துக்கு முன்னேறினார் கோக்லி



இந்திய டெஸ்ட் அணியின் தலைவராக இருக்கும் விராட் கோக்லி ரி–20 ஆட்டங்களில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

ஐ.சி.சி. நேற்று ரி–20 ஆட்டங்களுக்கான புதிய தரவரிசைப் பட்டியலை வெளியிட்டது. இதில் இதுவரை காலமும் முதலிடத்தில் இருந்து வந்த பின்ஞ், இங்கிலாந்துக்கு எதிரான ரி–20 ஆட்டத்தில் இடம்பெறாத காரணத்தினால் இரண்டாவது இடத்தில் இருந்த கோக்லி முதலிடத்துக்கு முன்னேறினார். இதன்படி 861 புள்ளிகளுடன் கோக்லி முதலிடத்திலும், 854 புள்ளிகளுடன் பின்ஞ் இரண்டாவது இடத்திலும் 841 புள்ளிகளுடன் ஹேல்ஸ் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். ஐந்தாவது இடத்தில் பிளாஸிஸும், ஆறாவதுஇடத்தில் கெயிலும் உள்ளனர். (ம)



# அடுத்த சுற்றுக்குள் ஆடாமல் நுழைந்த செரீனா

நடப்பு வருடத்தின் கடைசி சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடரான அமெரிக்கன் ரென்னிஸ் தொடர் தற்பொழுது நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரில் நடப்புச் சம்பியனும், உலகின் முதல் நிலை வீராங்கனையுமான செரீனா வில்லியம்ஸ் எதிர் வீராங்கனையின் திடீர் விலகலால் ஆட்டத்தை முழுமையாக பூர்த்தி செய்யாமலே வெற்றிபெற்றார்.

செரீனாவை எதிர்த்து ரஷ்யாவை சேர்ந்த விட்டாலியா மோதினார். இந்த ஆட்டத்தில் செரீனா 6–0, 2–0 என்ற கணக்கில் முன்னணியில் இருந்த போது விட்டாலியா திடீரென ஏற்பட்ட காயம் காரணமாக பாதியிலேயே விலகினார். இதனால் செரீனா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபூமி பாடசாலை
(சிறுவர் மனவிருத்திப் பாடசாலை)
கனகபுரம் கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மனவளர்ச்சி குறைபாடுடைய சிறுவர்களுக்காக எமது சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தால் புதிதாக அமைக்கப்பட்டு வரும் நவீன வசதிகளைக் கொண்ட பாடசாலை விரைவில் திறக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணம் கோண்டாவிலிலுள்ள சிவபூமி பாடசாலை சர்வதேச மட்டத்தில் அறியப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்ததே. விசேட தேவையுடைய சிறுவர்களின் எதிர்கால நல்வாழ்வுக்காக அன்பர்களின் உதவியால் இப்பாடசாலை அமைக்கப்பட்டு வருகின்றது.

**மாணவர்கள் புதிய அனுமதி**

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வையுங்கள்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**
தலைவர், சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212227938
மின்னஞ்சல் - sivapoomi@gmail.com



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

No.15 1/2, Sriampiyady Lane, (Above Sathosa SM) Jaffna. Tel :021-2224560 0777585913, 0777222422, 0714129935

கிழமை நாளுக்கான மாலை வகுப்புகள் 2.30 - 5.00 மணி வரை புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ளது

அலுவலகர்களுக்கு/உத்தியோகத்தர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 05.09.2015 2.30PM TO 4.30PM வரை ஆரம்பமாகின்றது. பதிவுகளுக்கு அவையுங்கள்.

Batch I : 05.09.2015
Batch II : 07.09.2015
Batch III : 09.09.2015
Batch IV : 13.09.2015



## ஒத்திவைக்கப்பட்ட வீட்டுக்கிருத்திய நிகழ்வு



**அமரர் சு.பொ.நடராசா**
(அதிபர் - அண்ணா தொழிலகம்)

கடந்த 5.7.2015 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்த எமது தந்தையாரின் ஒத்திவைக்கப்பட்ட வீட்டுக்கிருத்திய நிகழ்வும் மதியபோசன வைபவமும் எதிர்வரும் 06.09.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தங்களை தங்கள் குடும்ப சமேதரராகக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பையே மீளவும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்)

அண்ணா தொழிலகம்,
துரைவீதி, இணுவில். **குடும்பத்தினர்.**




## மூன்றாவது தடவையாக ஒலிம்பிக்கை நடத்த லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் முனைப்பு

2024 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் தொடரினை நடத்தும் போட்டியில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் பெயரையும் பரிந்துரை செய்துள்ளது அமெரிக்க ஒலிம்பிக் கட்டுப்பாட்டுச்சபை.

லொஸ் ஏஞ்சல்ஸில் ஏற்கனவே இரண்டு தடவைகள் (1932 ஆம் ஆண்டு, 1984 ஆம் ஆண்டு) ஒலிம்பிக் தொடர் நடத்தப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டின் ஒலிம்பிக் தொடர் லொஸ் ஏஞ்சல்ஸில் நடத்தப்பட்டால் மூன்று முறை ஒலிம்பிக் தொடரை நடத்திய நகரம் என்ற பெருமை அந்த நகருக்கு கிடைக்கும்.

உரோம், பரிஸ் (பிரான்ஸ்), ஹம்பர்க் (ஜேர்மனி), புடாபெஸ்ட் (ஹங்கேரி) ஆகியவை 2024ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடரை நடத்துவதற்கான போட்டியில் உள்ளன. (ம)



## மீண்டும் ஏமாறுவாரா கிவித்தோவா

சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கன் ரென்னிஸ் தொடர் தற்பொழுது நியூயோர்க்கில் நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் கிவித்தோவா மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். தரப்படுத்தலில் 4ஆவது இடத்திலுள்ள செக்குடியரசின் பெட்ரோ கிவித்தோவாவை எதிர்த்து ஜேர்மனியின் சீஜ்மன்ட் மோதினார். இதில் கிவித்தோவா 6–1, 6–1 என்ற நேர்செற் கணக்கில் ஜேர்மனியின் சீஜ்மன்ட்டை பந்தாடினார். விம்பிள்டனை இரண்டு முறை வென்றவரான கிவித்தோவா அமெரிக்க ஓபனில் பங்கேற்றிருப்பது இது 8 ஆவது முறையாகும். ஆனால் ஒரு தடவையும் அவர் 4ஆவது சுற்றைத் தாண்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)


DMI Computer Education
Diploma in Auto CAD 2D & 3DModeling
புதிய பிரிவுகள் ஆரம்பம் சனி, ஞாயிறு 9.30-
DMI COMPUTER EDUCATION
113, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். Tel:. 021 222 4403



**வேலையாள்கள் தேவை**
மானிப்பாயில் அமைந்துள்ள நிறுவனத்துக்கு
* கணக்காளர் (ஆண்/பெண்)
* சிட்டை எழுதுநர் + காசாளர் (ஆண்/பெண்)
* சாரதி (Light Vehicle)

மானிப்பாய் பிரதேசத்திலிருந்து 02 km இற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 021 492 7248



**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
சனி, ஞாயிறு பிரிவுகளுக்கான பதிவுகள் 05.09.2015 வரை மட்டும்!
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
SAMSON
021 320 3313
077 621 4567


## இந்திய அணியின் வெற்றியில் கொண்டாட ஏதுமில்லை

– பிசன் பேடி

இலங்கைக்கு எதிரான தொடரை இந்திய அணி 3–0 என்று கைப்பற்றியிருக்க வேண்டும் என்றும் ஆக்ரோசம் என்பதை கோக்லி வார்த்தையில் பாவிக்க கூடாது என்றும் கடுமையாகச் சாடியுள்ளார் பிசன் சிங் பேடி.

இந்திய அணியின் வெற்றி தொடர்பாகவும் கோக்லி தொடர்பாகவும் பேடி தெரிவித்ததாவது ஆக்ரோசத்துடன் விளையாடுவோம் என்று கோக்லி கூறினார். அதன்விளைவாக இசாந்த் சர்மா ஓர் ஆட்டத்தில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளார். மைதானத்தில் இப்படித்தான் செயல்பட விரும்புகிறீர்களா? இந்த ஆக்ரோசம் பரிதாபத்திற்குரியதாக தோன்றுகிறது. விராட் கோக்லி சிறப்பாக செயல்பட்டார். இருந்தா



லும் அவர் தனது ஆக்ரோசத்தை கட்டுப்படுத்த வேண்டும். தலைவர் என்ற முறையில் அனைவரினதும் பார்வையும் கோக்லியிடமே இருக்கும். ஆகவே, அவர் சிறந்த முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

இந்தியா இந்தத் தொடரை 3–0 என வென்றிருந்தால் இதை நான் கட்டாயம் ஏற்றுக்கொண்டிருப்பேன். தொடரை இந்தியா வென்றிருக்கிறது. இதில் மிகுந்த சந்தோசம் என்ன வேண்டியுள்ளது. நல்ல நட்புணர்வுடன் விளையாடவில்லை. இந்த இலங்கை அணி மிகவும் பலவீனமானது. அந்த அணியை துவம்சம் செய்திருக்க வேண்டும். இருந்தாலும் வெற்றி வெற்றிதான். நான் கட்டாயம் அவர்களுக்கு வாழ்த்துக்கள் கூற விரும்புகிறேன். ஆனால், தலைக்கு மேல் வைத்து கொண்டாட இந்த வெற்றியில் எதுவும் இல்லை என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.